[illegible]

[illegible]

[illegible]

T.D.R.C: 3304

RPNo: 101-II-1869

0-,892.MMM4.I
M69
116836

உ

சிவமயம்.

# தேசிங்குராஜன் விலாசம்.

நகர்

மதுரைமுத்துக்கவிராயரவர்களால்

இயற்றப்பட்டு,

செங்குன்றம்

மழுவேசர் சிதம்பரமுதலியாரவர்கள் குமாரராகிய

குப்பாறுமுகமுதலியாரவர்கள்

கேட்டுக்கொண்டபடி,

சிந்தாதிரிப்பேட்டை சைவசமயதார சபையாரில்

ஒருவராகிய

சிவகங்கை இ. ஸ்ரீராகவ முதலியாரால்

சிலநூதன தருக்களும், வசனமும், இராகதாள விவரமும் சேர்த்து,

பிழையறப் பரிசோதிக்கப்பட்டு,

பூவிருந்தவல்லி

சுப்பராயமுதலியாரவர்கள்

குமாரராகிய

கன்னியப்பமுதலியாரால்,

சென்னை:

சி. டிக்குருஸது,

மயிலைச்சாலையிலிருக்கும் அத்தினியம் அண்ட் டேலி நியூஸ் பிராஞ்ச்

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

௧௮௬௯ ஹு செப்டெம்பர்மீ.

Registered Copyright.

101

3-69

O-,892NMM4,D
M69

101
3-69

சிவமயம்.

இந்நூலுக்கு முன்னிலையாளராகிய

மழவேசர் சிதம்பரமுதலியாரவர்கள் குமாரர்

குப்பாறுமுக முதலியாரவர்கள் பேரில்

# சிறப்புப்பாயிரம்

இஃது,

சிந்தாத்திரிப்பேட்டை

சைவசமயாசார சபை

சைவ வித்வசிரோன்மணிகளில் ஒருவராகிய

கந்தமங்கலம் சி. சுப்பராய உபாத்தியாயர்

பாடியது.

---

## நேரிசை ஆசிரியப்பா.

சீர்திகழ்மாதவர் தேர்ந்துரைக்கரிய
பேர்திகழ்கலைகள் சிறக்குஞ்சதாவாம்
அணிதருவாணர் அறையுங்கவிகள்
பணிதருமென்மொழி பரவுமினியவாம்
வேதகோஷ்டம் விளக்கவுறுதினம்
போதமறையோர் புகலும்நாளும்
பஞ்சிறைக்கிள்ளை பாடும்பொழில்கள்
அஞ்சுகந்தருமே அனந்தமாக
மணிபதித்தொளிரும் மாடபந்திகள்
தணிவுறுமெயவர்க்குந் தருநிழல்மேவும்
இச்சிறப்பார்ந்து யிருக்குஞ்செஞ்சி
உச்சிததேசம் ஒக்கியேயாளும்
தேசிங்குராஜன் திகழ்சரிதாதி
மாசிங்காரமாய் வகுக்கவிலாசம்
நேர்தார்த்தடமுற் பொற்புறச்சோலைசூழ்.
சதுர்கோட்டமர் யெழின்முரங்கானாய்
தொண்டமண்டலத் தூயவேளாளர்
விண்டுருசெற்குன்றம் மெனும்மேம்பதி
மழவேசர்கோத்திரன் மாகங்காகுலன்
அழகொளிரலங்கேதன னலங்காரன்
மதுவார்குவளை மாலைமார்பன்
இதமாயெவர்க்கும் இயம்பிடுந்நயன்
சிதம்பரபூபன் செய்தவத்துற்று தித்
சிதம்பலபுனிதம் செயமார்புத்ரன்
குப்பாறுமுகனென் கோதிலாரமம்

சிறப்புபாயிரம்.

ஒப்பிலாப்பெற்ற உயர்ந்திடும்வள்ளல்
இச்சரித்திரத்தை யெழில்விலாசமதாய்
மெச்சவேபாட வேண்டிகுரவலின்
அருமையாய்க்கேட்க அவர்மனங்களித்து
பெருமையாயிசைக்குப் பிரியமாய்த்தானே
தக்கதாயிருக்கத் தாரணியோர்க்கு
பக்குவத்தானெனப் பகர்ந்திடவெண்ணும்
இவ்விதமாக விதையானந்தம்
ஐவ்வலேசெய்து உணர்வுடனதிப்
நன்றியோச்சிட் டேயிசைவழுச்சொற்கள்
இன்றியேதிருத்தி யியவோகல்ல
பொன்னுபாரம் புகாயுமியும்
மன்னும்படிக்கி வகையுடன்தந்து
பரிசுத்தமாகப் பண்புறவின்றால்
உரிமையாய்க்கொய்யி வோவவேகன்றுவ்
சந்ததம்சீர்த்தி தாரூக
அந்தமாயென்றும் அமையசெய்தனனே.

---

இஃது.

சிந்தாத்திரிப்பேட்டை.

சைவசமயாசார சபையாரில் ஒருவராகிய

குளத்தூர் ஆ. நாராயணசாமிமுதலியார்

பாடியது.

---

விருத்தம்.

கனமுடனசெஞ்சியாண்டதேசிங்கு சுருதருஞ்சரிதையைசல்ல
இனமுடன்விலாசமாகவேசெய்து வினையிலாப்புகழினையடைய
மனமுவப்பாகுங்குப்பாறுமுகவேள் வன்கவியாலவைக்கொண்டு
தனமுடனதிருத்தியச்சிட்டான்யாருந் தரையினில்மதித்திடத்தானே.

---

இஃது.

சிந்தாத்திரிப்பேட்டை

சைவசமயாசார சபையாரில் ஒருவராகிய

காஞ்சிபுரம் மு. கந்தசாமிமுதலியார்

பாடியது.

---

விருத்தம்.

செஞ்சியையாண்டதேசிங்குராஜன் சிறப்புசரித்திரமதனைவென்றும்
ரஞ்சிதமாகவிலாசமாய்ச்செய்து நானிலத்தன்னிலேபரவ
விஞ்சியபுகழானகுப்பாறுமுகவேள் வேண்டிநாவலர்தமைக்கொண்டு
கெஞ்சுடத்திருத்தியச்சிட்டானுவப்பாய் நிறைமதியார்திடத்தானே

உ

கடவுள் துணை.

# தேசிங்குராஜன் சரித்திரவரலாறு.

---

## அகவற்பா.

இராகம், எதுகுலகாம்போதி.

சீர்பெற்றசெஞ்சி நகரத்தில்வாழும்
பேர்பெற்றகீர்த்தி புகழ்ந்திடும்ராஜன்
தொல்புவிமெச்சுஞ் சுரூபசிங்கேந்திரன்
செல்வமாய்ப்பெற்ற தேரணிராஜன்
அதிமகிழ்வாக வரசாளும்நாளில்
மதியினிலுயர்ந்தபாபு மன்னனுக்கடக்கம்
எழுபத்திரண்டு யிசைந்தமாசாணம்
வழுவிலாதரச வகையுடன்செலுத்த
அந்நாளடக்க மழுவியசெஞ்சி
பதிதனையாளும் பராக்கிரமசாலி
தேரணிராஜன் செஞ்சிக்குத்தலைமையை
சேருடன்கப்பனுஞ் செலுத்தமன்னாளில்
தாணிசிங்கேந்திரன் றனையசில்லாமல்
ஆன்றதைநோக்கி யருந்தவஞ்செய்ய
அம்பிகைபாக னவரருளாலே
அம்பலக்களத்தில் செல்வனும்பிறக்க
தேசிங்குவென்னத் திருநாமமிட்டு
பாசமாயுலகில் பாங்குடன்வளர்நாள்
மூன்றுவயதுமாத்தில் முகன்னாயதுன
ஈன்றதாய்தகப்ப னிருவர்தெய்வீக
சிவபதமடைந்தார் தேரணிராஜன்
தவத்தினிற்பிறந்த தனயனையெடுத்து
பாங்குடன்வளர்த்துப் பள்ளிக்குவைத்து
ஒப்பியகல்வி யுரைத்தபின்தெளிவா
யாயுதபரீக்ஷை யன்புடனறிந்து
காவியமெழுதக் கருணைகள்சொல்ல

இவ்வளவிசேஷ மிவையெலாந்தெரிந்து
நயமுள்ளராணியை கன்மனஞ்செய்து
பட்டாபிஷேகராய்ப் பனிரண்டுவருடந்
திட்டமாச்செஞ்சியிற் சிறப்புடனிருக்க.
பாதுஷாநபாபு பணத்துக்குத்தரவு
இஷ்டமாயமான சேவகரான
தோண்டாமல்லனைத் தருசாயழைத்து
தாண்டியேவியவதில் தனங்கள்சாடாவும்
பாக்கியில்லாமற் பற்றறக்கொய்டு
நோக்கமாய்நீயும் நொடியில்வாவென்ன
அந்தச்சொற்கேட்டு வாக்கிரமித்தெழுந்து
விந்தையாய்த்தோண்டா மல்லுமப்போ
தன்னுடசேனைச் சகலமுங்கூட்டி
மன்னன்தேசிங்கு மாநகர்தனக்கு
சீக்கிரமாய்வந்து தேசிங்குராஜனை
வாக்குமனமு மயங்கியேகண்டு
வந்தனையாக வரசனைநோக்கி
சிந்தையிற்பயமாய்ச் செப்புவான்வசனம்
நபாபுவும்மண்டை நலமுடன்சென்று
வாங்கிவாவெனவும் வந்தனென்றுரைக்க
ஓங்கியேராஜன் வுக்கிரத்துடனே
கண்களினெருப்பு கதிர்போற்றெறிக்க
ஆக்கிரமித்தெழுந்து வதினைத்துடனே.
பனிரண்டுதலாநிறைப் பாய்குள்ளகத்தியை
கைதனிலெடுத்துக் கதித்ததேசிங்கு
இன்னொருதரமே யியம்பெனவுரைக்க
சேவகனுடலந் திடுக்கிட்டயர்ந்து
கைகானடுங்கிக் கதறினானப்போ
நான்செய்பிழையல ராஜனேகேளும்
பாதுஷாநபாபு பாங்குடனனுப்ப
வந்தேனென்றுரைக்க வரசனுங்கேட்டு
அந்தவோர்வார்த்தைக் கஞ்சினேனல்ல.
நாரணன்முத்திரை நலமுடனிருப்பதால்
சீருடன்விட்டேன் சீக்கிரமாயோடி
உன்றனையாள்வோ னுணர்விலாநபாபை
வந்தெனதுகையில் வரிசையாயிருக்கும்
பரிசைகள்சேனையும் பாய்குள்ளயிட்டியும்.



கத்திபிடிக்கப்பணங் கைக்கொண்டுபோவெனச்
சொன்னதாய்ச்சென்றுநீ சொல்லுமென்றுரைக்க
மன்னவன்சொன்ன வார்த்தையைக்கேட்டு
நன்னயமாக நலமுடனோடி
பாதுஷாநபாபு பாதத்திற்பணிந்து
தேசிங்குசொன்ன செய்தியையுரைக்க
அப்போதுபாதுஷா வாக்கிரமித்தெழுந்து
எழுபத்தோர்மாகாண மிலேயிரசாரும்
துலாமார்கள்வாவென்று துதலாயனுப்ப
அந்தக்ஷணத்தி லனைவருங்கூடி.
சதுரங்கதளத்துடன் யானவர்வந்து
பாதுஷாநபாபைப் பணிந்துடனிற்க
அனைவருங்கூடி யார்க்காடுவிட்டு
பனிரண்டுபட்டாளம் பரிகரிச்சேனையும்
அண்டங்கள்நடுங்க வார்ப்பரித்தெழுந்து
செஞ்சிநகரைநோக்கிச் சேனையும்வருக
சங்கராபாணியார் தன்னருகிறங்கி
தேவனூர்பேட்டையைத் தெறவேயடித்து
கொள்ளையுமிட்டுக் கொலைவதைசெய்ய
குடிகளெல்லாருங் கோவென்றமுறையாய்
தேசிங்குமுன்னே தெளிந்தவருரைக்க
அந்தச்சொற்கேட்டு வரசனுஞ்சொல்வார்
தேவனூர்பேட்டைச் சேரவேசென்று
ஒன்றுக்குவொன்பது வுங்களுக்களிப்பேன்
என்றசொற்கேட்டு யேகினார்குடிகளும்
அப்போதுராஜ னரிதானபூஜை
செப்பமாய்ச்செய்து திரமுடனிருக்க
தாயாத்தின்பிங்கு சரசரென்றோடி
ராஜனைக்கண்டு நலமுள்ளரங்கர்
கோவிலிற்றுலுக்கர் கொப்பெனவழைத்தார்
என்றுமேசொல்ல விறையவன்கேட்டு
கண்களிரண்டுங் கனதணலாக
கொக்கரித்தெழுந்து கொலுவினில்வந்து
தங்களுக்குள்ள தளமெலாங்கூட்டி
மந்திரிமொத்தகான் மன்னர்க்குவேலை
ஆட்கையிற்கொடுத்து மகுடமனுப்ப

## தேசிங்குராஜன் சரித்திரவரலாறு.

வோர்லையைப்பார்த்து வொருமேஷத்தில்
நீலவேணியின்மேல் செறியுடனேறி
ஐங்கரவழியை யைந்தாழிகையில்
செஞ்சிக்கேவந்து சேர்ந்தமாதோ
மூன்றாவருஷமும் முர்க்கமாய்வீரவும்
நபாபுமேகண்டு தவிக்கங்கள்கொண்டு
ராஜியாய்ப்போக நம்முடனிவர்ந்து
இந்தக்கோபத்தி லிங்கவன்வந்தால்
நம்முடசேனை நாசமாய்ப்போகும்
என்செய்வோமென்று யெண்ணிவேநபாபு
தாமுனரேர்லைத் தாயுடைத்தவர்விட
சங்கராபரணியார் தான்கனாபுரண்டிட
வாரதோராற்றை வள்ளல்தேசிங்கு
நேருடன்கண்டு நீந்தியேபோக
எவ்வியேமனதி லுறங்கெப்படிவரும்
போரதோர்வழியிற் பொல்லாங்கின்றாலம்
அஞ்சபேர்பரியுட னுற்றிலேபோக
மிஞ்சியவீரர்கள் வெளியிலேவந்து
கோபங்களுடனே கொக்கரித்தெழுந்து
போடுபோடென்று புரவியைவிட்டு
கொக்குத்திரளிற் குதித்தாரிஜாளிபோல்
அனைவருங்கூடி யருஞ்சமர்செய்து
நபாபுபாளையத்தை நாசமாய்ப்போக
வெற்றிகைக்கொண்டு விசையுடன்திரும்பி
ராஜனுடன்கூட நன்மைவரும்போ
தளவுசறுயின்யா வயர்ந்தசஞ்சாலி
தெரியாமலட்டப்பென நீரன்மேற்பாய
அப்பேரூமாயவை வரும்புள்மீதேறி
செப்பமாய்வந்து தேசிங்குதனக்கு
தண்பதந்தன்னைத் தந்தாட்சித்த
இந்தநற்கதையை யிசைந்தாரீடகமா
யென்றனுவிழுக் கியன்றமட்டுக்குஞ்
சொல்லும்வாசகத்திற் சோர்விருந்தாலும்
பொறுத்தருள்நல்லோர் பொறையுடைமையினால்
வொறுக்காதென்சொ லக்கருள்வாரே.

சரித்திரவரலாறு முற்றிற்று.

கடவுள் துணை.

# தேசிங்குராஜன் விலாசம்.

## பாயிரம்.

### காப்பு—விநாயகர்தோத்திரம்.

(நேரிசைவெண்பா.) இராகம், சங்கராபரணம்.

சீர்வளரும்பாரில்மிகு செஞ்சிநகர்க்காதிபன்றன்
பேர்வளர்தேசிங்குகதை பேசவே—ஏர்வளரும்
இந்துவளர்செஞ்சடை யிலங்குமகதீசனருள்
மைந்தாமுகன்றனிரு மலர்க்காப்பு.

(விருத்தம்.) இராகம், பைரவி.

சீர்புகழ்செஞ்சியெனும் தேசந்தனையாளுகின்ற
பார்புகழ்தேசிங்குராஜன் பாஷாநபாபுபேரில்
நேர்பெறவியற்றியஞ்செய்த நெறிமுறைவிலாசமாக
கார்நிறமும்மியென்றன் கவைபதிகாப்புத்தானே.

### முருகர்தோத்திரம்.

(விருத்தம்.) இராகம், தோடி.

அச்சுதன்மருகாபோற்றி யாறுமாமுகனேபோற்றி
கச்சணிமுலையாளீன்ற கதிர்வடிவேலாபோற்றி
சத்திதராகருமான சரவணபவனேபோற்றி
மெச்சியிக்கவிக்கிரங்கும் வேலவாபோற்றிபோற்றி.

### சிவன், அரி, அயன்தோத்திரம்.

(விருத்தம்.) இராகம், மோகனம்.

மதியிலைச்சடையிற்பூண்ட மகாதேவன்வாணிதன்னை
மதியுடனுவில்வைத்த தோன்றலுந்துளவமாலை
சதிருடனணிந்தவிஷ்ணு தன்னையுமிடைவிடாமல்
விதியுடனிவர்கள்பாதம் விரைவுடன்வணங்கினேனே.

### உமையவள்தோத்திரம்.

(விருத்தம்.) இராகம், பந்துவராளி.

தாரணிதன்னையீன்று தனியுயிர்களுக்காதார
பூரணிகதியிலுச்சிப் புகழ்ந்தறியாதமோனி
ஆரணிசடிலன்பாக மமைந்தசுந்தரிநல்ல
சீரணிகமலபாதஞ் சென்னியிற்சூடினேனே.

## இலக்குமிதோத்திரம்.

(விருத்தம்.) இராகம், பந்துவராளி.

வஞ்சியணங்குதனக்கிளையாள் மருவுந்திருவிக்கிரமனுடன்
கொஞ்சுங்கிளிபினன்மொழியாள் கோதில்செல்வங்கொடுத்திடுவாள்
கஞ்சமலரிலுறைந்திடுவாள் கனகந்தனக்கொப்பாகத்தாள்
பஞ்சினுமெல்லடியாளைப் பரவத்தினமுங்குறைவிலையே.

## சரஸ்வதிதோத்திரம்.

(விருத்தம்.) இராகம், உசேனி.

பிரமனுவிழுகந்திருப்பாள் பிறங்கும்வெண்டாமரைமலரிற்
பிரமதாகவிற்றிருப்பாள் தினமுநாவலருக்கினியாள்
பரவுங்கலைகளொருருவாள் பணிவோர்தமக்குப் பரிந்தருள்வாள்
இரவும்பகலுந்துதிப்போர்க்கு மிருமைப்பயனுந்தருவாளே.

## அவையடக்கம்.

(எண்சீர்க்கழிநெடில் விருத்தம்.) இராகம், முகாரி.

இனிப்பதமிழினரும்பாக மியற்றவறியேன்செஞ்சிநகர்க்
கிறைவன்றேசிங்குராஜன் வெற்றிலார்சரிதைவிலாசமதாய்
கனிவாய்ச்சொல்லத்துணிந்ததென்னில் மகமன்னர்தனைப்பார்த்துக்
குருநிடக்கும்வானரம்போல் கவிவல்லவர்முன்யானுமொழியும்
விழிமுன்சொல்லார்நாடகத்தைப் பரிந்தேவுட்கொண்டறிவியப்பாய்
பாவலர்மெச்சப்புகழ்ந்திந்தப் பாலன்றனக்கே[illegible]ன்னவிலா
நவிவாமென்றும்புரந்திடுதல் நல்லோர்தமக்குமுறையதனால்
நாயேன்றனக்கவ்விதிவருத்து நாளுமிழுநாகாப்பாரே.

---

## நாட்டுவளம்.

இராகம், சங்கராபரணம். ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. அரசர்க்கரசன்றேசிங்குமகராஜன் அழகியசெஞ்சிமாநாடு
பரவிபெங்குஞ்செம்பொற்கதிர்கள்விளங்கிப் பகருஞ்செழிப்புடனீடு.

௨. பலவின்றலைபூங்கரும்பின்றன்சாரும் பாலுடன்கூடிக்குலாவும்
சலமுமதிலுள சங்கங்களின்முத்தும் தவழுமதின்றன்விலாவும்.

௩. பூவைகள்கிள்ளையும்பொங்குமயூரமும் பொழில்விள்ளாய்கிட்டுக் கூடுஞ்
ஆவலாய்முத்தமிழ்நாவலரென்று மரும்பிரசங்கங்களித்தாடும். [டிதம்

௪. செய்யமலர்த்தடந்தன்னில்வராலைகள் செருக்குடன்குதிப்புனலதிர்
ஐயமிலாக்கடலியர்கூடிக்கொண் டாடுங்காவைநனிச்சதிர்.



## நகர்வளம்.

இராகம், தன்யாசி. ஆடதாளம்.

பல்லவி.

நகர்வளஞ்சொல்வோமே செஞ்சிப்பதி
நகர்வளஞ்சொல்வோம்.

அநுபல்லவி.

பகருமிவ்வுலகினிற் பார்த்திபர்வேறில்லை
இகலிலிவருக்கிணை யிகர்சொல்லிடவில்லை
யெத்தேசராஜர்புகழ் தேசிங்குராஜன்மகிழ்— நகர்.

சரணங்கள்.

௧. அருமறையாளர் வீதி—இவருமுவக்கும்
அரசரமையர் தன் நீதி
இருமை பயக்குவோர்கள் இன்பமடைமாதர்கள்
இத்தார் மணிமாடங்கள் வத்தார் நிறைகடைகள்— நகர்.

௨. மணியார்சிகர மாடம்—ஸ்தாபியுமல்ல
மாமன் டபங்கள் சேரும்
அணியார் குலகந்தனைப் பணிய நிறைசெலுத்தும்
அரியர்குளங்களிக்கப் பரிவாயன்னமளிக்கும்— நகர்.

௩. அரசர்க்கரசர் நாடு—மிக்கவதி
ஆண்மையும் புகழ் நீடு
தரமதிக் கென்றும் துதிப்பரவும் தேசிங்குப்பதி
தாரர்மருமதரன் யோனவிருக்கு— நகர்.

---

## தோடையம்.

விருத்தம்.

சோலைத்தேனுண்டுவண்டு சொருகுசடன்பாடுநல்ல
வேலைத்தேர்சித்ரமான வீதியைநோக்குவோர்க்கு
மாலையார்செஞ்சிவாழும் மகதேசிங்குராஜன்
லீலையைவிலாசமாக நிகழ்த்தோடையஞ்சொன்னேனே.

இராகம், நாட்டை, திரிபுடைதாளம்.

௧. இந்தச்சரிதை விலாசமாகச்சொல்ல
ஐங்கரனே யருள்புரிவாயே—ஆ-ஆ.

௨. எள்ளளவிலாம விச்சரிதம்நடக்கவே
வள்ளிமணாளனே வந்தருள்வாயே—ஆ-ஆ.

## கொலுமுகவாசல் அலங்கரிக்கக் கட்டியக்காரன் வருதல்.

---

### பொதுவிருத்தம்.

சென்னியிற்சரிகைபாகைச் சிறக்கமீசைகள் அடிக்க
உன்னிதயிடையிற்கச்சை யுடனுடன் வரிஞ்சிக்கட்டி
மன்னதேசிங்குராஜன் மகிபதிவாசல்காக்குந்
தன்னுங்கட்டியக்காரன் தொல்சபைவருகின்றனே.

### வசனம்.

அகோதெப்படியென்றால், செஞ்சிதேசத்துக்கு அதிபதியாயெ தேசிங்கு மஹாராஜன் கொலுமுகவாசல் அலங்கரிக்கும் கட்டியக்காரன் வருகிற விதங்காண்க.

தரு: இராகம், அடாணா. ஆதிதாளம்.

### பல்லவி.

வீரன்வந்தான் கட்டியக்காரன்வந்தா—னிதோ.

### அநுபல்லவி.

வீரர்பரவும் ரண சூரன் தேசிங்குவாசல்
காரமுடனே காக்குஞ் செம்பீர னதிகஜெய—      வீரன்.

### சரணம்.

௧. சென்னியிற் சரிகைபாகை பளபளென்னவே—இருபுயத்தில்
மின்னல்போல் வாகுவலயம் தளதளென்னவே—மார்பில் பதக்கம்
பொன்னி நவமணிகளுமின்னவே—யலங்கரித்து
ஒன்னலர்திகைக்கமா வுக்ரமாய் மனம்வுரத்து
கண்ணிமை தெறித்து-புகைபடர்ந்து-சபைதனைக் குதித்து
ஒருமொழி புரைப்பேன்-கேளாவிடில்-நமாயினி லுரைப்பேன்-
அதேதெனில், உலகுபுகழ் செஞ்சியை-நிலையுட னரசுசெய்
வலுமையுடைய ராஜன்-கொலுவினில் வருகிறார்
வாயெடாமலே-நியாயமாகவே-வரிசையா யிருமென்று
நிலையுள்ள கொலுவினில்—வீரன்.

---

## தேரணிராஜன் தன் கொலுவுக்கு வருதல்.

---

### பொதுவிருத்தம்.

பொன்னணிமகுடமின்ன புஜகீர்த்திபளபளென்ன
நன்னயவரசர்மந்திரி நால்வகைச்சேனைசூழ
கன்னல்வில்லனைப்பழித்த காளைதேரணிராஜேந்திரன்
மின்னல்போல்வொளிவிளங்க மிகுகொலுவருகின்றனே.



### வசனம்.

அகோதெப்படியென்றால், செஞ்சிதேசத்தை யாளுகின்ற தேரணிமஹாராஜன் தன் கொலுவுக்கு வருகிறவிதங்காண்க.

தரு: இராகம், மோகனம். ஆதிதாளம்.

### பல்லவி.

ராஜராஜர்புகழ் தேரணிமகராஜ ராஜமார்த்தாண்டன் வந்தான்—
வொய்யாரமாக - ராஜமார்த்தாண்டன் வந்தான்.

### அநுபல்லவி.

தேசம்புகழும் பிர காசன் யாவருந்துதி
பாசமாய்யாளுஞ் செஞ்சிப்பதிக் காதிபதி—      ராஜ.

### சரணங்கள்.

௧. சிரசில்நவரத்ன மகுட முடிகள் மின்ன
திவ்யப்பிரகாச முத் தார மதிற் றுன்ன
கதிரொளிபோது புஜ கீர்த்தி பளப ளென்ன
கரந்தரு ருவைப் பழிக்கும்
கருதரு மகாவுன் னித வழகனென்ன—      ராஜ.

௨. மந்திரிமார்க ளிரு மருங்கினிற் புடை சூழ
மகுடமன்னவர்க ளடியிணை வந்து தொழ
அந்தணர் முநிவர்க ளாசிகூறி புகழ
அருமையர்கள் மின்னல்போ
லாடல்பாடல்செய் தகமிகவே மகிழ—      ராஜ.

௩. தாள மத்தள மேளந் தகுந்தத் தருந்த வென்னி
காளபின்னங்களுந் கவரி சாய்மரை போட
நாளுங் குறையில்லாமல் நாடாச செலுத்தி
ரங்கர் பாதாரவிந்தம்
பொங்கமாய் மனதினில் இங் கிதமுடனிணைத்து—      ராஜ.

---

## தேரணிராஜன் வாழ்த்துதல்.

---

### விருத்தம்.

உலகில்மாதவர்கள்வாழ்க ஓமெனுமெழுத்தும்வாழ்க
இலகுநான்மறையோர்வாழ்க யெழின்முடிமன்னர்வாழ்க
குலவுவைசியர்கள்வாழ்க கொண்டலோர்வுழவர்வாழ்க
நிலமதிலென்னைக்காக்கும் நெடியமால்பாதம்வாழ்க.

## தேரணிராஜன் சேர்வைக்காரனுக்கு உத்தரவுசெய்தல்.

---

### விருத்தம்.

சேருவைக்காராய்கேளாய் செல்வமாயோடிநீதான்
வீரியவாசர்நீதி விளங்கியபெரியோர்மற்ற
சீருளமந்திரிமார்கள் ஜெயின்தார்மார்சடன்னே
சேருடன்கொணர்விக்கிப்போ நிமிஷத்திலழைத்துவாராய்.

---

## தேரணிராஜன் சபையாருக்குச் சொல்லுதல்.

---

### விருத்தம்.

மந்திரிபெரியோர்மற்ற மன்னரேசொல்லக்கேளீர்
விந்தையாய்மகுடஞ்சூடி மேதினியாண்டிருந்தேன்
இந்தவென்மகுடந்தன்னை யியலுள்ளதேசிங்குக்கு
அந்தமாய்சூட்டநீங்க ளாலோசனைசொல்லீரே.

தரு: இராகம், பைரவி, ஆதிதாளம்.

### பல்லவி.

மந்திரிபெரியோரே கேளீர்—என் வார்த்தை தன்னை
மந்திரிபெரியோரே கேளீர்.

### அநுபல்லவி.

மந்திரி பெரியோரே கேளீர் வண்மையான செஞ்சிநகர்
இந்தமட்டு மரசாண்டு மியலுடனிருந்தேனையா— மந்திரி.

### சரணங்கள்.

௧. மனுநீதி தவறாமல் வையகந் தன்னையாண்டு
இனமாயிருந்தேனிப்போ தென்னாலே வசமில்லை— மந்திரி.

௨. வீமன் மகேந்திரன் மதவேள்நிகர் மதிநுபன்
காமனிலும் லவைபோககாந்தியில் யிருந்தவன்— மந்திரி.

௩. அரியெரர்த்த பலம்பெற்ற வாசன் தேசிங்குக்கு
பெரியுள்ள மகுடத்தை நிமிஷந் தரிக்கவேணும்— மந்திரி.

### வசனம்.

கேளுங்கள் மந்திரிமார்களே! இச்சபையிலுள்ள பெரியோர்களே! எனது குமாரனாகிய தேசிங்குராஜனுக்கு என் பட்டத்தைக் கட்டிவைக்க நினைத்திருக்கிறேன்; அதற்கு உங்கள் மனச்சந்தோஷத்தோடு விடைகொடுக்கவேண்டும் மந்திரிமார்களே பெரியோர்களே.



## மந்திரிபெரியோர் தேரணிராஜனைப் போற்றுதல்.

---

### விருத்தம்.

மன்னர்கள்மன்னாபோற்றி வளர்செஞ்சிக்கரசேபோற்றி
நன்னயமிகுந்தேசிங்கு ராஜர்க்குமகுடஞ்சூட
மன்னவேசாங்கள்பார்க்க மகுடாபிஷேகஞ்செய்யும்
இன்னிலத்தோர்கள்போற்று மிறைவனேபோற்றிபோற்றி.

### வசனம்.

சரணஞ்சரணம் ராஜாதிராஜனே! தமது எண்ணப்படியே தேசிங்கு மஹாராஜனுக்கு நல்லமுகூர்த்தகாலத்திலே பட்டாபிஷேகஞ்செய்தால், எங்கள் கண்களால் பார்க்கச் சந்தோஷமாயிருக்கிறோம் ராஜனே.

### இதுவுமது விருத்தம்.

செஞ்செநற்பதியையாளும் தேரணிராஜனார்தன்
கஞ்சபொற்பாதம்போற்றிக் கர்சினிக்கவிப்புகை
செஞ்சொல்தேசிங்குமா ராஜர்க்குச்சிறக்கப்பட்டம்
எஞ்சலிலாமற்றந்தால் யெங்கட்குமிகவுநன்றே.

### வசனம்.

கேளும் மஹாராஜனே! தமது எண்ணப்படியே உமது தமயனார் குமாரன் தேசிங்குமஹாராஜனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்கிறது, இச்சபையிலுள்ள எங்கட்குச் சந்தோஷமாயிருக்கிறது ராஜனே.

---

## தேரணிராஜன் கட்டியக்காரனுக்குச் சொல்லுதல்.

---

### விருத்தம்.

கட்டியக்காராகேளாய் காயிற்றென்னியுஞ்செஞ்சிப்
பட்டணந்தன்னில்யார்க்கும் பஞ்சாங்கஞ்சொல்லுமெந்தன்
இட்டனும்ரங்காநாத சாஸ்திரிதன்னையிந்தச்
சட்டமாய்கொணர்விக்கிப்போ சலிதியரயழைத்துவாராய்.

### வசனம்.

கேளுங்கட்டியக்காரா! அதிசீக்கிரமாய்ச்சென்று நமது சொந்தப் புரோகிதரான அரங்கநாதசாஸ்திரியாரை அழைத்துக்கொண்டுவாரும் கட்டியக்காரா.

### கட்டியன் வசனம்.

மஹாபாக்கியம், அப்படியே சாஸ்திரியாரை அழைத்துவருகிறேன்; சுவாமி பராக்கு.

## அரங்கநாத சாஸ்திரியார் தோரணிராஜன் கொலுவுக்கு வருதல்.

### பொதுவிருத்தம்.

திருமணிவிளங்கயிட்டு சிரசிற்றுல்லாவும்பூண்டு
அரையினிற்காவிச்சோம னடையுடன்வுமுத்திக்கையில்
மருவியபஞ்சாங்கத்தை வகையுடனெடுத்துக்கொண்டு
சரசரென்றோட்டமாகி ரங்கசாஸ்திரிவருகின்றாரே.

### வசனம்.

அகோதெப்படியென்றால், தோரணிமஹாராஜன் கொலுவிற்கு அரங்கநாத சாஸ்திரியார் வருகிறவிதங்காண்க.

தரு: இராகம், சாவேரி. ஆதிதாளம்.

### பல்லவி.

அங்கமிகும் ரங்கநாத சோதிடர் வந்தார்—கொலு வதனில்
அங்கமிகும் ரங்கநாத சோதிடர் வந்தார்.

### அநுபல்லவி.

மங்களமிகுஞ் செஞ்சி மாநகர் தனில் நிதம்
வாழுந் தோரணிராஜன் சூழுஞ் சபையைநாடி, கொண்டாடி—ரங்க.

### சரணங்கள்.

க. தலையிற் பொற்றுல்லாய் தனத கொண்ண
தாவட மார்பினில் பளப் பென்ன
கலைவச் சாந்தணிவாசங் மேக மென்ன
கதிர்மதி முக மின்ன— ரங்க.

உ. பூணூல் பின்குடுமி புரந்தி லாட
பொற்சரிகை வேஷ்டி தன்னொளி நீட
நாணயமா வொய்யார நல்லநடை நடந்து
ராஜன் சமூக மேதி நல்ல வாசி கூறி— ரங்க.

ந. செஞ்சிநகரை யாளுந் தோரணி ராஜனுக்குத்
திகழும் பஞ்சாங்கஞ்சொல்ல ஜெயம் வருமேநமக்கு
ரஞ்சித மிருமேவென் குளுங்குறை யில்லை
நாமோதுஞ் சோதிடத்தி னற்றிறத்தைக் கென்று— ரங்க.

### சுலோகம்.

தனந் தான்யம், பசுபுத்திரலாபம், சதசம்வற்சரம், தீர்க்கம், ஆரோக்கியம், சவுக்கியம், சுபிபவா.

### வசனம்.

ஆசிர்வாதம், ஆசிர்வாதம்; மகாப்பிரபு தோரணிமஹாராஜனே! ஆசிர்வாதம், ஆசிர்வாதம்.



### இராஜன் வசனம்.

சரணஞ்சரணம் அரங்கநாதசாஸ்திரியாரே! இந்த ஆசனத்திலெழுந்தருளுங்சுவாமி.

### சாஸ்திரியார் வசனம்.

அகோகேளும் தோரணிமஹாராஜனே! என்னையழைத்தகாரியம் இன்னதென்று சொல்லவேண்டும் மஹாராஜனே.

### இராஜன் விருத்தம்.

சரணமேசரணம்ரங்க சாஸ்திரியாரேகேளும்
சீரருள்ளதேசிங்குக்குத் திருமணஞ்செய்தமேலும்
அரசதக்குரியபட்ட மளித்திடவேணும்நீர்தான்
திறையுள்ளநாளதற்கு நிச்சயஞ்செய்திடீரே.

### வசனம்.

கேளும் அரங்கநாதசாஸ்திரியாரே! நமது புத்திரசிகாமணியாகிய தேசிங்குமஹாராஜனுக்குத் திருக்கலியாணஞ்செய்ய முகூர்த்தநாளும், விவாகமானவுடனே பட்டாபிஷேகஞ்செய்ய திவ்யமான முகூர்த்தநாளும், இரண்டு முகூர்த்தங்களும் பொருந்தும்படியான நாளைப்பார்த்துச் சொல்லவேண்டும் சாஸ்திரியாரே.

---

## சாஸ்திரியார் நாள்குறித்தல்.

தரு: இராகம், கலியாணி. அடதாளம்.

### பல்லவி.

சொல்லுவேன் கேளும்—சாஸ்திரம் பார்த்துச்
சொல்லுவேன் கேளும்.

### அநுபல்லவி.

சொல்லுவேன் நீர்கேளும் நல்ல பஞ்சாங்கத்தை
வல்லமையாய்ப் பார்த்து யெல்லோரும் புகழ்ந்திட— சொல்லு.

### சரணங்கள்.

க. சித்திரை மாதம் பதினோந்தாந் தேதியில்
அத்த நட்சத்திரம் அஷ்டமி யின்னமும்— சொல்லு.

உ. சுக்கிரவார முதித் தைந்நாழிகைக்குமேல்
லக்கினம் ரிஷபம் யோகம் நலமா யிருக்குது— சொல்லு.

ந. இந்தச் சுபதினத்தில் யிசையாய் மணமும் பட்டம்
சிந்தை மகிழ்வாய்ச் செய்தால் ஜெயமும் புகழு முண்டு—சொல்லு.

## இராஜன் கட்டியக்காரனுக்குச் சொல்லுதல்.

### விருத்தம்.

சுந்தரக்கட்டியக்காரா சுருக்கினிலோடிநீதான்
இந்தபொற்சபையிலுள்ளோ ரெவர்களுங்கண்டுபோற்ற
எந்தன்மாளிகையிற்சென்றே ராணிமாதேவிதன்னை
வந்தனையுடனேயிங்கு வந்திடச்செய்குவாயே.

### வசனம்.

சேனுங்கட்டியக்காரா! அதிசீக்கிரமாக நீ நமது அரண்மனைக்குச்சென்று, பட்டாபிராணியை அதிக விரைவுடன் கொலுவிற்கு அழைத்துவாருங் கட்டியக்காரா.

---

## தேரணிராஜன் கொலுவுக்குப் பட்டாபிராணி வருதல்.

### பொதுவிருத்தம்.

அதிவிதமதனவேணி யலங்கிருதகபாலியாணி
பதிமிலவாழ்ராஜன்கேணி பத்மினிபட்டாபிராணி
நிதிமலர்சுகந்தபூணி நேரிழைசமுகர்தோணி
மதிமுகர்துலங்கமாது மன்னன்முன்வருகின்றாளே.

### வசனம்.

அகோதெப்படியென்றால், தேரணிமஹாராஜன் கொலுவுக்குப் பட்டாபிராணி வருகிறவிதங்காண்க:

தரு: இராகம், பந்துவராளி. ஆதிதாளம்.

### பல்லவி.

பதுமமலர் வதன வதிக சரச மூண பட்டாபி ராணி வந்தாள்—
கொலுவதனில், பட்டாபி ராணி வந்தாள்.

### அநுபல்லவி.

அதிவித மான ராணி யலங்கிருத நீல வேணி
அதிசபை யினை நாணி— பதும.

### சரணம்.

௧. சீதளச் சந்திர னொளி போல முக மிலங்க
செவியி லணிந்த ரத்னங் கெசும் குழை யிலங்க
சோபித நுதலிலணி துய்யபொற் பொட்டு மிலங்க
சோதிமிகுஞ் சரதார மார்பின் மீதில் இலங்க
அந்தரத் திழிந்துவந்த சுந்தர மின்னற்கொடியோ-யாரோ வதியோ மன்னவர்கள் நும் பன்ன - அற்புத குண நிதி-பொற்புற வேதநிதி-அழகினில் பெருகிய - அதிவித ரண சூரன்-அதி கெம்பீரன்-அர்த்த குபேரன்- கன வுதரன் - அமலம் புகழ்செஞ்சியை யரசுபுரி தேரணி அரசன் மனமகிழும் தேவி பட்டத்து ராணி—பதும.



### பட்டாபிராணி விருத்தம்.

என்னைநீராளுங்கோவே யென்பிராணநாதாபோற்றி
இன்னகார்சபதிலென்னை யியல்புடனழைத்தசேதி
மன்னவாஅடியாளுக்கு மனமதுமகிழ்ந்துநீரும்
இன்னதாரென்றுசொல்லி யியம்பெனவுரைசெய்வாளே.

### வசனம்.

சரணஞ்சரணம் என் பிராணநாதா! இச்சபையில் என்னை வரவழைத்த செய்தி இன்னதென்று திருவுளம்பற்றவேண்டும் என் பிராணநாதா.

### தேரணிராஜன் விருத்தம்.

எந்தனுக்கொருமையான யென்பிராணராணியொன்று
உந்தனுக்குரைப்பேன்கேளா யுன்மகன்றனக்குப்பட்டம்
தந்திடத்தகுமோவென்றன் தமையனார்சுதன்தேசிங்கு
மைந்தற்குப்பட்டங்கட்ட மனதினில்நினைத்தேன்பெண்ணே.

### வசனம்.

வாரும் வாரும் என் பிராணநாயகியே! நமது குமாரனாகிய தேசிங்குக்குத் திருக்கலியாணமும் பட்டாபிஷேகமுஞ் செய்யவேண்டி, உன்னை வரவழைத்தேன் பெண்ணே.

### பட்டாபிராணி விருத்தம்.

அதிபலமுடையரச வரசனே சொல்லக்கேளும்
மதிமுகமுடையரசி மங்கையமணமுஞ்செய்து
நிதிபெறுமுலகையாள நின்மையவற்கனித்து
சுதிதரும்ராஜ்கர்பாரதங் கருத்தினிற்றுதிசெய்வீரே.

### வசனம்.

சரணஞ்சரணம் என் பிராணநாதா! இந்தச் சபையிலுள்ளோரும் இந்த உலகத்தாரும் சந்தோஷங்கொள்ளும்படி, நமது குமாரன் தேசிங்குக்குத் திருக்கலியாணமும் நமது பட்டமும் இந்தச் சுபமுகூர்த்தநாளிலேயே செய்து, நாமிருவரும் கண்டு களிக்க இப்போதே நாம் நினைத்தகாரியத்தை நிறைவேற்றியருளும் என் பிராணநாதா.

தரு: இராகம், தோடி. ஆதிதாளம்.

### பல்லவி.

நாதனே கேளும், எந்தன் பிராண நாதனே கேளும்.

### அநுபல்லவி.

பாலூட்டி வளர்த்த பாலன் தேசிங்குக்கு
பதில் மகுடஞ் சூட்டி யெழிலாய் வைக்கவேணும்— நாதனே.

சரணங்கள்.

௧. மன்மதனைப் பழித்த வடிவுள்ள தேசிங்கு
தன்னைவிட் டொருவற்குத் தருமோ உமது பட்டம்— நாதனே.

௨. சுத்தவீர னென்னக்கென் புத்திரி தனைக் கொண்டு
சித்திரை மாதத்தில் செய்யலாம் கலியாணம்— நாதனே.

௩. உருவு மாண்மையு மிக்க உலகி லொருவற் குண்டோ
தடை சொல்லாமற் பட்டந் தருவீர் மகிழ்வ தாக— நாதனே.

---

## இராஜன் கட்டியக்காரனுக்கு உத்தரவு செய்தல்.

---

விருத்தம்.

கட்டியக்காராகேளாய் கடிகையேயொருநொடிக்குள்
பெட்டெனஓடியெந்தன் புதல்வன்தேசிங்குதன்னை
சட்டமாயலங்கரித்து தரணிபர்புகழ்வதாக
திட்டமாய்க்கொலுவிற்சீக்கிரமாயழைத்துவாராய்.

வசனம்.

கேளாய் கட்டியக்காரா! சீக்கிரமாக ஓடி நமது அரண்மனையிலிருக்கும் என் குமாரன் தேசிங்குக்குச் சர்வாபரணபூஷித அலங்காரஞ்செய்து நம்முடைய கொலுவுக்கு அழைத்துக்கொண்டு வாருங் கட்டியக்காரா.

---

## தேரணிராஜன் கொலுவுக்குக் குமாரன் தேசிங்குராஜன் வருதல்.

---

கப்பாது விருத்தம்.

ரங்கர்பாதாரவிந்தம் நலமுடன்போற்றிசெய்து
பொங்கியதரணிசிங்கு புதல்வன்தேசிங்குராஜன்
அங்கசன்வடிவின்மேலா னதிபலம்படைத்தவீரன்
மங்களகரமதாக வருகின்றார்சபையிற்றானே.

வசனம்.

அகோதெப்படியென்றால், தேரணிமஹாராஜன் கொலுவுக்குக் குமாரன் தேசிங்குமஹாராஜன் வருகிறவிதங்காண்க.

தரு: இராகம், மத்தியமாவதி. ஆதிதாளம்.

பல்லவி.

ராஜர்பணியு மன்பர் நேசன் தேசிங்குமகா—ராஜ விநோத வந்தான்;
அதிவடி விதமுள மதனிலு மழகிய, ராஜ விநோத வந்தான்.



அநுபல்லவி.

தேசம் புகழு செஞ்சியிற் பாச முடனமர்ந்த
கேசவன் தந்தனைப் பூசை புரியு மகா— ராஜர்.

சரணம்.

௧. சிரசில் நவ ரத்ன மிழைத்த சரிகைப் பாகை
தேகமெங்கும் பளப ளென்ன—மார்பி லுறுந்
நவரத்ன திவ்ய ரத்னப் பதக்க மாரந்
தவழ்ந் தனைந் தொனன—சித்திர மிகும்
அரையி லிடைக் கச்சை சரிகை பட்டயஞ் சமு
தாளிகள் ... கென்ன—உலகி லுள்ள
ராஜர் மனங்க ... கம்பழ கையி லுயர்
வெழிற்பதும ... கென்ன;
சங்கைய தாக ... யெங்களுந் தெரியலர்
கலங்கியே திசை திசை-விலங்கியே யொதுங்கிட
அதிமுதல் வேத மதை-சாதகமா யோதி நல்ல
சோதியிட பாத மதை-நீதியுடன் துதிசெய்து— ராஜர்.

தேசிங்குராஜன் விருத்தம்.

தந்தையேபோற்றியெந்தன் தகப்பனார்தனக்குப்பின்னும்
மைந்தனேதேரணிராஜேந்திர ... பொன்மலர்த்தாள்போற்றி
மைந்தனைவரவழைத்த காரணந்தனையின்னதென்று
சிந்தையில்மகிழ்ச்சியாகத்தேவரீருரைசெய்வீரே.

வசனம்.

சரணஞ்சரணம் என் பிரியதந்தையே! இச்சபையில் என்னை வரவழைத்த செய்தியைத் திருவுளம் பற்றவேண்டும் ஐயாவே.

தேரணிராஜன் விருத்தம்.

அப்பனேவாடாயெந்த னழகுகண்மணியேவாடா
ஒப்பில்நம்குலத்துக்கெல்லாம் உயர்மணித்தீபம்வாடா
எப்புவிபோற்றும்நல்ல வெழில்சிந்தாமணியேயென்றுஞ்
செப்புந்தேசிங்குநல்ல செல்வனேவாழிவாடா.

இதுவுமது விருத்தம்.

வலமுடன்பதம்பணிந்த மைந்தனேசெல்லக்கேளாய்
குலமதுவிளங்கவேண்டிக் கோதையைமணமுஞ்செய்து
நலமுள்ளசெஞ்சியாள நன்முடிதரித்திருக்க
நிலையுடனழைத்தேனப்பா நீயுமேயிருந்திடாயே.

வசனம்.

கேளும் என் புத்திரசிரோமணியாகிய தேசிங்கே! நம்முடைய குலம்விளங்க உனக்குத் திருக்கலியாணஞ்செய்து, என் பட்டத்தை உனக்குத் தரித்து என் கண்கள் குளிரப்பார்த்து மகிழ்வதாக அழைத்தேன்; இருமப்பா இரு.

### தேரணிராஜன் கட்டியக்காரனுக்குச் சொல்லும் விருத்தம்.

ஆசாரவாசல்காக்கும் அறிவுள்ளகட்டியக்கார
பாசமாம்பெற்றதன்தேவி பட்டாபிராணியென்னை
தேசமேபுகழுமன்னன் சிறுவியையென்றொடிக்கும்
நேசமாயழைத்துக்கொண்டு நிமிஷத்தில்வருகுவாயே.

வசனம்.

கேளாய் கட்டியக்காரா! அதிசீக்கிரமாய் ஓடி நமது அரண்மனையுட் சென்று, என் பட்டத்துராணியுடைய அன்னைக் குமாரத்தியை சர்வபூஷண அலங்காரஞ் செய்வித்து, தாதியர் சூழத்தக்கதாக இந்த கொலுமண்டபத் திற்கு வரும்படியாய்த் திட்டஞ்செய்துவாராய் கட்டியக்காரா.

---

## கலியாணப்பெண் வருதல்.

### பொதுவிருத்தம்.

சேலெனும்விழியுருட்டிச் சிறுசவ்ரதனையுமெய்யாம்
மாலெனும்வலைக்குள்மாட்டி மகிழுமென்றனைநகைக்கரப்பி
பாலெனுமொழியான்ராணி ராஜ்ஜியர்புடையிற்சூழ
சாலவேகொலுவுக்கிப்போ தநியில்வருகின்றுள்.

வசனம்.

அகோ எப்படியென்றால், தேரணிமகாராஜன் கொலுவுக்குக் கலியா ணப்பெண் வருகிறவிதங்காண்க.

தரு: இராகம், சாவேரி, ஆதிதாளம்.

பல்லவி.

நிகழு மதிவதன ரதியுந் துதிசெய்யருஞ்—சிங்கார ராணி வந்தாள்;
மயில்போலொயிலாய் வரும் நடையுடைய, சிங்கார ராணி வந்தாள்.

அநுபல்லவி.

மகிழுஞ் செஞ்சி நகரா வகையுடனரசுசெய்
மன்னன் தேரணி ராஜன் மகிழ்வுடன் வரச்செய்ய
சின்னஞ்சிறியவள் திவ்ய வழகுடன்
தேசராஜர் மெச்சும் ராஜ னருகில் விலா
வாசனே சமதி பாசம தாகவே— நிகழு.

சரணம்.

க. சந்திரமண்டல முகத் தனுக்கும்—ஒளிர்
தருதகெனமிகு கலைமிழல் நீடிய—சந்திர
உலகந் தலைசுற்றி யாடுங் கொங்கைக் குலுக்கும், - இங்கிதமா மஞாப் பலுக் கும் - அதிலெவரு மயங்கும்-வகை பிதுக்கும் - வஞ்சியர்க விலயலைக் கண்டால் புகழுந் திவ்ய மாறே - அலதிரு பைங்கிளி தானோ - என் மனோ காந்தனில்



மாதவர் பல்லைக்கெஞ்ச - திருமாதியங்கலர் மயல்மிஞ்ச - குயிற் கிளையான வாய்மொழி - மின்குலத்திரயே நிகர்விழி - மகலிகர் முலையின்மே லணைந் திடு - கலையழகினை புலசே புகழ்ந்திட ? அந்தமிகுந்து வளர்ந்திடு மாதர் கள் சிந்தை பயந்தடி வந்து வணங்கி யென் திருவுளமதுசீ பொறுப்பாயே- யெனை யாரும் நீயென் றெதிர்வந்து தயங்கி முயங்கி மிகும் பிரமை கொண்டு மிஞ்சிய வீரர்கள் நெஞ்சமழன்று சலித்திட- ராஜன் மனந் தா னயர்ந்து களித்திட— நிகழு.

### கலியாணப்பெண் விருத்தம்.

தாதைக்குழுதாதையார்தன் தலத்தினிலுதித்தயெந்தன்
மாதாவுஞ்சேவுந்தன் மலர்ப்பதம்போற்றிபோற்றி
போதவேயுயிலெனலைப் பொங்கமாயழைத்தசெய்தி
யதுகாரணமேதென்று ஐயம்புவீர்போற்றிபோற்றி.

வசனம்.

கேளும் மாமனாரே! இச்சபையிலென்னை வரவழைத்தது யாதுகார ணம்; அதைத் திருவுளம்பற்றவேண்டும் மாமனாரே.

### தேரணிராஜன் விருத்தம்.

போற்றியராணியந்தப் புரந்திலிருநீயென்று
சாற்றியேமந்திரிமற்றுந் தக்கவர்தம்மைக்கூவி
ஏற்றமாய்மணமும்பட்டம் என்மகன்ராணியற்கும்
நேத்தியாய்ச்செய்வீரென்ன நெறிவழுவாமல்செய்வார்.

வசனம்.

கேளும் அம்மா ராணியாரே! அந்தப்புரத்திலே போயிரும் அம்மா! மந் திரிகளே, பெரியோர்களே, மறையோர்களே, என் குமாரன் தேசிங்கிக்கும் ராணியாருக்கும் திருமணமும் பட்டமும் தரிக்கவேண்டும்; ஆதலால், அதற் குவேண்டிய உபகரணங்களைத் தயார்செய்யுங்கள் மந்திரிமார்களே பெரி யோர்களே.

மந்திரி முதலாயினோர் வசனம்.

அப்படியே இந்தச் சுபமுகூர்த்தகாலத்திலேயே தயார்செய்கின்றோம் மஹாராஜனே.

---

## ஸ்ரீராமனைத் துதித்தல்.

தரு: இராகம், நாதநாமக்கிரியை. ரூபகதாளம்.

பல்லவி.

ஸ்ரீராமா ஜெயஜெயா—சீதா, பதிராமா ஜெயஜெயா.

சரணங்கள்.

க. சீர்புகழுஞ் செஞ்சி நகர் தேசமதில் கீர்த்தி பெற்ற
பார்புகழும் தேசிங்கிக்கும் பத்தினிதன் ராணி யற்கும்— ஸ்ரீராமா.

௨. திருமணமுஞ் செய்தவுடன் செஞ்சி நகர்க் கதிபதியாய்
அரசுசெய்ய பட்டமது அளித்திடவே நாமகிழ்ந்து— ஸ்ரீராமா

௩. மல்லிகையும் முல்லிகையும் வாசமுள்ள சம்பகஞ்செவ்
வல்லியுடன் பனிநீரும் மருவும் இரு வாசனைகளும்— ஸ்ரீராமா.

—— ❀ ——

## தேரணிராஜன் தன் குமாரனுக்கு உலகநீதி கற்பித்தல்.

### பொதுவிருத்தம்.

அருந்ததிதனைக்கொப்பாகும் அருமைமனையாளை மணமுஞ்செய்து
சிறந்திடுஞ்செஞ்சியாளத் திருமுடிதரித்தமேலும்
அறந்தவறாமல்நீதி யரசாளும்வகையெல்லாம்
நிறந்தரம்உலகவாழ்க்கை நெறிமுறைசாற்றுவாரே.

### வசனம்.

அதோதெப்படியென்றால், தேரணிமகாராஜன் தன் குமாரன் தேசிங்கு மகாராஜனுக்குத் திருமணமும் பட்டமும் தரித்தபின்பு, உலகநீதி கற்பிக்கிற விதங்காண்க.

தரு: இராகம், ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

### பல்லவி.

அரசுசெய்யு முறை தெரியச்சொல்லு கின்றேன்—இதை
அறியா துணர்வாய் மகனே.

### அநுபல்லவி.

அரசு செய்குவாய் மனம் ஒருமை யுடனே ரங்கர்
சரணாரவிந்தத்தைத் ததேகியானமா யெண்ணி— அரசு.

### சரணங்கள்.

௧. அந்தணர் பெரியோர்க ளருந்தவசிகள் தக்கோர்
வந்தா லவர்கள் பாதம் வணங்கு மனங் குவிந்து— அரசு.

௨. மந்திரி மார்கள் சொல்லும் வசனத்தை நீங்காமல்
தந்தை குருமொழி போல் தகவென்றுணர் வாய் மகனே— அரசு.

௩. தன்தாரமேயொழிய பிறதாரங் களைக் கண்டால்
அன்னை தமக்கைபோல அகத்தில் நினைக்க வேணும்— அரசு.

௪. வஞ்சையாய் ஒருவர்மேல் வைரஞ் செலுத்தி னாலும்
அஞ்சவனை நோகச் செய்தால் செங்கண்மால் நய மகலும்— அரசு.

௫. அறம்வழு வாமல் செங்கோ லாளரசர்க்குக் கோபம்
வரலாகாது வந்தால் மதியா துலக மெங்கும்— அரசு.

௬. தன்னைக் கொல்லவே வரும் பசுவாகிலு மதனை
சின்ன பின்னங்களாகச் சிதைப்பதுவே யறம்— அரசு.



௭. அகதியில் குறையாமல் மனுநீதி தவறாமல்
ஜெக முழுதும் புகழச் செங்கோல் செலுத்த வேணும்— அரசு.

௮. ஆலயங்களு மன்ன தானங்களும் விளங்க
கால மறிந் தறத்தைக் கோலமுடனே செய்வாய்— அரசு.

௯. இம்முறை தவறாமல் செங்கோல் செலுத்தி வந்தால்
நன்மை யுனக் குண்டு நாடெங்கும் புக ழுண்டு— அரசு.

### தேரணிராஜன் விருத்தம்.

மைந்தனேசொல்லக்கேளாய் மனுமுறைதவறிடாமல்
இந்தநல்மகுடத்தோடு யினியரசாளுமென்று
புந்தியில்மகிழ்ச்சியாகப் புத்திகள்பலவுஞ்சொல்லி
அருமை[illegible]நீயென்று அறைந்ததாலிருந்திட்டாரே.

### வசனம்.

கேளும் அப்பா என் புத்திரசிகாமணியாகிய தேசிங்கே! யான் சொல்லிய உலகநீதியை மறவாமல் அரசாட்சிசெய்து சுகஜீவியாயிருப்பாய் மகனே.

### தேரணிமஹாராஜன் அரசுமுற்றும்.

—— ❀ ——

## தேசிங்குமஹாராஜன் அரசுசெய்தல்.

### பொதுவிருத்தம்.

திருமணஞ்செய்தபின்பு சிறவியாள்ராணிதானும்
இருவருவயததன்னி லினிருவாறுளென்று
மருமலர்ப்பலசுகந்த வகையவட்கணிந்துசேடி
சரசரென்றேடிராஜன் சபைதனிலுறைசெய்வாளே.

### வசனம்.

அதோதெப்படியென்றால், தேரணிமஹாராஜன் அரண்மனைக்குச்சென்ற பின்பு, தேசிங்குமஹாராஜன் கொலுவுக்குத் தாதிப்பெண் வந்து வணக்கத் தோடு சொல்லுகிற விதங்காண்க,

### தோழி கொச்சகம்.

திருவளருஞ் செஞ்சியென்னுந் தேசமதை யாளுகின்ற
மருவலர்கள் பணியும்உக்கிர மன்னவரே ராணியரும்
நிருவதிய மாளுளென்றே யுரைத்தே யவர்பதத்தைச்
சரணஞ்செய்து தோழியற்குத் தனங்கொடுத்தே யனுப்பினரே.

### தேசிங்குராஜன் விருத்தம்.

வஞ்சியையழைப்பித்திட்டு மன்னன் விசித்திரமாக
பஞ்சாங்கமவையர்தம்மைப் பாங்குடன்வரவழைத்து
மஞ்சனமுழலாள்புட்ப வதியான திசைப்பார்த்து
ரஞ்சிதமுடனேயிரும் நலம்பெறச்சொல்லுவீரே.

### பொதுவசனம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குமகாராஜன் கொலுவுக்குச் சாஸ்திரியாரை வரவழைக்க, சாஸ்திரியார் வருகிறவிதங்காண்க. ☞ இவ்விடத்தில் (பதின்மூன்றாவது பக்கத்திலுள்ள) சாஸ்திரியார் வருகிற தருவைச் சொல்லிக்கொள்ளவும்.

### சாஸ்திரியார் வசனம்.

ஆசீர்வாதம், ஆசீர்வாதம், தேசிங்குமகாராஜனே ஆசீர்வாதம்.

### தேசிங்குராஜன் வசனம்.

சரணஞ்சரணம் சாஸ்திரியாரே! இந்த ஆசனத்திலிருந்தருளும். இன்றையதினம் நமது பட்டத்துராணி புஷ்பவதியானாள்; அதைப் பார்த்துச்சொல்லும் சாஸ்திரியாரே.

### சாஸ்திரியார் வசனம்.

அப்படியே சாஸ்திரத்தைச் சோதித்துச் சொல்லுகிறேன் மகாராஜனே.

---

## சாஸ்திரியார் சாஸ்திரம்பார்த்துச் சொல்லுதல்.

---

தரு: இராகம், சவுராஷ்டம். அடதாளம்.

### பல்லவி.

சாஸ்திரஞ் சொல்வேன்—பரிசோதித்து
சாஸ்திரஞ் சொல்வேன்.

### அநுபல்லவி.

சாஸ்திரஞ் சொல்வேன் வெகு நேர்த்தியாய் ரங்கரைப்
போற்றிப் பணிந்தனை மாத்திரைக் குள்ளாக— சாஸ்தி.

### சரணங்கள்.

க. போற்றும் பஞ்ச பக்ஷி உள்ளமுடையா யின்னம்
சாத்தும் வயிராம சக்கர முதலாக— சாஸ்தி.

உ. நக்ஷத்திரம் திதிவாரம் லக்கினங் கரணயோகம்
அக்ஷயர் தானும் மாதத்துக் காகாது— சாஸ்தி.

௩. திருவருள் மிகவுண்டு தேசத்திற் புகழுண்டு
அரிய பெரிதிக் காகா ததற்கென்ன செய்குவோம்— சாஸ்தி.



### சாஸ்திரியார் விருத்தம்.

மன்னவேசொல்லக்கேளாய் மங்கையாள்ராணிதன்னை
கண்ணினிலாறுமாதம் காணவேகூடாதப்பா
என்னவியேசெஞ்சிராச்சியமாளுமரசாண்டுகொண்டு
அன்னைரங்கநாயகியை அடைவுடனிருந்திடாயே.

### வசனம்.

கேளும் மகாராஜனே! இராணியார் புஷ்பவதியானதினம், நீர் ஆறுமாதம் கண்ணினால் பார்க்கப்படாது; ஆதலால், ஸ்ரீரங்கநாதர் பாதாரவிந்தத்தைத் தியானஞ்செய்துகொண்டு சுகமாயிரும் மகாராஜனே! யான் போய் வருகிறேன்.

### தேசிங்குராஜன் விருத்தம்.

சித்தப்பராஜன்தானும் செப்புவான் கட்டியக்காரா
உத்தமசொல்வேனிந்த வுயிர்க்குயிராய்விளங்கும்
வெற்றிசேர்வழுதாவூரில் வேந்தன்மோவுத்துகான்தன்னை
சித்திரப்பணிகள்மின்ன சீக்கிரமாயழைத்துவாராய்

### வசனம்.

கேளுங்கட்டியக்காரா! என் உயிர்க்குயிராய் வழுதாவூரில் கீர்த்திபெற்று வாழ்கின்ற மோவுத்துகான் சாயபை அதிசீக்கிரமாக நமது கொலுவுக்கு அழைத்துவாரும் கட்டியக்காரா.

### கட்டியன் கவி.

மாரனென்றெது
வரிசையிப்போ
சேருடனழைத்து
சீருடன்வருவேன்.

### கட்டியன் மோவுத்துகான் சாயபுக்குச் சொல் விருத்தம்.

சலாம்சலாம்வழுதாவூரில் சார்வதாகாலம்வாழும்
சலாம்சலாம்மோவுத்துகான் சாயபேயும்மையிப்போ
சலாம்சலாம்செஞ்சிராச்சியம் தலியரசாளுமன்னன்
சலாம்சலாம்ஒருநொடிக்குள் சபையினில்வரச்சொன்னாரே.

### வசனம்.

சலாம்சலாமையா மோவுத்துகான் சாயபே! தேசிங்குமகாராஜா உம்மைத் தமது கொலுவுக்கு அதிசீக்கிரமாய் அழைத்துவரச்சொன்னார், வாரும்; சலாம் சலாமையா.

---

## மோவுத்துகான்சாயபு வருதல்.

---

### பொதுவிருத்தம்.

இன்னிசைவழுதாவூருக் கெதுமான்மோவுத்துகான்சாயபு
உன்னிதமானபாகை ஒயிலுடன்பணிகள்பூண்டு
மன்னன்தேசிங்குராஜன் வரவழைத்திட்டாரென்று
சொன்னசொல்மாறுமுன்னம் சபையினில்வருகின்றாரே.

## வசனம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குமகாராஜன் கொலுவுக்கு வழுதாவூர் மோவுத்துகான்சாயபு வருகிறவிதங்காண்க.

தரு: இராகம், ... அடதாளம்.

## பல்லவி.

அதிக உக்கிரமதத் தானைகள்மெச்சும் வழுதாவூர்த்
ததிபன் மோவுத்துகான் வந்தான்.

## அநுபல்லவி.

மதியொத்த முகமொத்த அரசர்கள் ஜயவெற்றி
மன்னன் தேசிங்குராஜனுடைய வழிமேவி
யெண்ணி மனமதனில்-கண்மணி வருமொரு— அதி.

## சரணம்.

க. நிதிமெத்த விலைபெற்ற அதிவிசித்திர பாகை
சேராய் சிரசில் துலங்க—திவ்ய
நிறமொத்த இருபத்த சுபத்திர மல்குக்கு
அகமெத்த முக விலங்க—திகழ்
மதியொத்த நுதமொத்த நாசத்தில் மணிவைத்த
மாலை மார்பின் விலங்க—நல்ல
வழுமொத்த அதிசித்திர கவசத்தைப் பணிமேல்
வயவங்கினிற் குலுங்க—அதிவேகமாக,
வாசியேறி வுலாசமாய்க்கூற
[illegible]
தோள்குருபரிலசையும் வாருவலைப்பும்
தாங்கிபுயங்களை விக்கிமகிழ்வொடு
பதியிதுயர்செஞ்சிக் கதிபன்மகிழ்வுடன்
சதிரிலமைக்குமுன் வெதிரில்வராமாய்— அதி.

## மோவுத்துகான் விருத்தம்.

மன்னவர்மகிழுஞ்செஞ்சி மாநகர்தன்னையாளும்
தன்னிலர்வணங்கப்பெற்ற உணர்வுள்ள அரசேநீதான்
வன்னமேயிருந்திருக்கும் வழுதாவூர்தனிலிருந்த
என்னையிங்கழைத்தசெய்தி யியம்பென சலாஞ்செய்தானே.

## வசனம்.

சலாம் சலாமையா! வழுதாவூரிலிருந்த என்னை அழைத்தகாரியம் இன்னதென்று தெரியச்சொல்லவேண்டும் மகாராஜனே.

## தேசிங்குராஜன் விருத்தம்.

மாராஜம்மனதானை வடிவழகினியர்த்த
தீரன்மோவுத்துகான்சாயபே செப்புவேன்வசனம்மென்முன்
சேருடன்யிருநீயென்று செறிநவறுதமன்னன்
ஒருவிவரமெல்லாம் விளிமையாய்க்கூறுவேனே.



## வசனம்.

வாரும் வாரும் என் பிராணசிநேகிதருகிய மோவுத்துகான் சாயபே! இவ்விடத்தில் உட்காரும்; நான் உம்மை அழைத்தகாரியம் சொல்லுவேன் கேளும் மோவுத்துகான் சாயபே.

## இதுவுமது விருத்தம்.

திடமுள்ளமோவுத்துகான் சாயபே யென்பிரியதந்தை
அடவுடன் மணமுஞ்செய்து அனை[illegible]
கடலுலகினிலெல்லோரா காவல[illegible]
அடல்புவிதேசமாவும் அருமணமுடித்தவாராய்.

## வசனம்.

கேளும் மோவுத்துகான் சாயபே! என் பிதாத்தந்தையார் எனக்குக் கலியாணஞ்செய்து பட்டமுங்கட்டிவைத்தார். இந்த உலகத்திலே எனக்கு எதிரியானவர்கள் உண்டோ! ஆகையால், நீர் இனிமேல் என்னுடன்கூட இருக்கவேண்டும்; நீர் இப்போதே திருமணஞ்செய்து சீக்கிரம் வரவேண்டும். மோவுத்துகான் சாயபே.

தரு: இராகம், தோடி. ஆதிதாளம்.

## பல்லவி.

உக்கிரம விக்கிரம வீரனே கேளும், என்ற வார்த்தை— உக்கிரம.

## அநுபல்லவி.

உக்கிர விக்கிரமமான உணர்வுள்ள என் தந்தை
சக்கிரம கருணையில் தரித்தார் எனக்குமுடி,
தாலிபலமுன் சேனைமன்னரும்
வேணத்திறகுறை-யானதொன்றிலை— உக்கிரம.

## சரணம்.

க. இத்தரையில் நமக்கெதிரெவர் சொல் மோவுத்துகானே
அத்தியும் பரிசேனை மன்னரை வெற்றிகொள்ளும் வல்லவானதானே
பத்தியாய்ப் புவிமீதிலே மகா யோத்துவார் நீயேநிதானே
சத்தியமாக வுனைத்தேன் சாய்குவாயென் ஓடத்தானே,
தகத்து செஞ்சியில் யிருத்த குடிகளை
வருத்த பயிர்செய சுகித்து மவர்களே
வைத்து செத்தி நத்து மேவிளும்
வெத்தி அரசு யிருத்து செய்குவேமே— உக்கிரம.

## மோவுத்துகான் விருத்தம்.

வரைநிகர்புயம்படைத்த மருவலர்திண்மும்மலக்கு
நரைகமழ்பாதம்போற்றும் நாதனேசொல்லக்கேளும்
இறைஉமக்கெதிராக இரண்டுசொல்வார்களுண்டோ
சரியெனமொழிக்குராஜன் தானிங்கு சலாஞ்செய்தானே.

## தேசிங்குராஜன் விருத்தம்.

சொன்னசொல்தவருபெந்தன் துணைவன்மோவுத்துகான்சாயபே
நன்னதாயெவ்போல்நீயும் நன்மணஞ்செய்துகொண்டால்
என்மனம்உனக்குமற்ற யெவருக்குமகிழ்வுண்டாகும்
மன்னவாஉன்பதிக்கு மகிழ்ந்துபிரிந்தேகுவாயே.

## மேற்படி விருத்தம்.

குணவமைச்சர்களே ஒன்று கூறுவேன்எனதுதோழன்
இனிமணஞ்செய்தப்போய் என்னதிக்குறைக்கொள்ளாத
தனங்கள்பூஷணங்கள்வாரி சந்தியிலனுப்புவீரே.

## வசனம்.

கேளும் மந்திரிமார்களே! எனது உயிர்த்தோழனாகிய மோவுத்துகான் சாயபுக்கு விவாகஞ்செய்யவேண்டியிருப்பதால், அவருக்குவேண்டிய தனமும், அவர் விரும்பிய நல்ல வஸ்திராபரணங்களும் இன்னம் அவருக்கு வேண்டிய சாமான்களும், யாதொரு தடையில்லாமல் அவர் சந்தோஷிக்கும்படி கொடுத்தனுப்புங்கள் மந்திரிமார்களே.

## மந்திரி வசனம்.

அப்படியே கொடுத்து அனுப்பிவைத்தோம் மஹாராஜனே.

தேசிங்குமஹாராஜன் அரசு முற்றும்.

―――✿―――

# பாஷா நபாபுசைதுல்லா கொலுவுக்கு வருதல்.

## பொது விருத்தம்.

தோழனையனுப்பிவிட்டு சூரன்தேசிங்குராஜன்
ஆழிசங்கேந்துகின்ற அரிபதம்பூசைசெய்து
தாழுவேயிருக்கபாஷா தானையும்மந்திரிமாரும்
சூழவேகொலுவிக்கப்போ சுருக்கினில்வருகின்றாரே.

## வசனம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குமஹாராஜன் தனது உயிர்த்தோழனாகிய மோவுத்துகான்சாயபை அனுப்பிவிட்டு, தனது குலதெய்வமாகிய ஸ்ரீ ரங்கநாதருடைய பாதாரவிந்தத்தைத் துதித்து, யாதொரு குறைவுமில்லாமல் செஞ்சிதேசத்தை ஆண்டு சுகமாயிருந்தார். அதன்பிறகு டில்லிபாஷா தன் மந்திரிப்பிரதானிகள் சூழ்ந்தக்கதாக தன் கொலுவுக்கு வருகிறவிதம் காண்க.

## எட்டியடி ஆசிரியவிருத்தம்.

சீர்பெற்றஆர்க்காடு தயில்மேவுசெம்பீர திறனுன்சூரவீரன்
ஜெயவிஜயமார்த்தாண்ட முசல்மான்குலதிலக திவ்யமணிசுமோகன்
பேர்பெற்றபாஷா நபாபுஅவர்மகிமையும் பின்வருதல்சேனைகளும்
பெரிதானநீட்டிய மந்தாபபுஜோதியும் பேசரியமின்னலொளிபோல்



சேர்பெற்றகுடையும் பூஷணாலங்கிருதமும் நிறையுமாயுதம்விளங்க
செறிமுறைகள்வழுவாத மந்திரிப்பிரதானியும் நேசகவிராஜர்புகழ
ஒருடன்மென்மேல் முழக்கதிசையதிரவே பொங்குபோர்கோபங்க
பெழில்வாசகளிகர்புய நபாபு கொலுவுக்கதிக வின்பமாய்வருகிறாரே.

## இதுவுமது விருத்தம்.

சிரசினிற்பாகையோடு திவ்யபூஷணங்கள்மின்ன
கரமதில்செங்கோல்மின்ன காரியக்காரர்அல்ல
மருவலர்களுமருங்கும் வந்தடிபணிந்துவிற்க
அரியின்மிதேறி ஆர்க்காட் டிபருமவருகின்றாரே.

## நபாபு விருத்தம்.

அமரேதேவடிமேளுசு அங்கனமேகபீரன்சூரு
ஜமேதார்களைபதிர் அச்சிபாய்காய்க்அவல்தார்மேரே
ஜமாவஜீரபங்காருநாய்க் சல்திமேபுகார்லேகோசேக்
இமாருஅசலாம்கலே கோயிதர்ஆரேஜவான்மதர்.

## ஜமேதார் முதலாயினோர் விருத்தம்.

ஆர்க்காடுஆளுகின்ற அவ்புள்ளாநபாபுசாயபே
மூர்க்கமாயானைசேனை மூரலையும்படைத்தமன்னு
பார்க்குள்ளராஜர்கையிற் பகுதியும்வாங்கும்வீரா
எத்கவேண்டுமதுசெய்து யெங்களுக்கருளுவீரே.

## நபாபு மந்திரிக்குச்சொல் விருத்தம்.

மந்திரிபங்காருநாய்க்க மன்னவேசொல்லக்கேளாய்
சந்திரனாகூர்மீரா துணைப்பதம்போற்றிசெய்து
அர்த்தமாய்மாகாணத்தார் அனைவரும்சுபிக்ஷந்தானோ
விர்தையாயெனக்குநன்றாய் விளம்புவீர்தெரியத்தானே.

## வசனம்.

கேளும் இவான் பங்காருநாய்க்கா! நாகூர் மீராசாயபு நமக்குத் துணையாயிருக்கிறார். எழுபத்திரண்டு மாகாணத்தார் சுபிக்ஷமாயிருக்கிறார்களா? பயிரிடுங்குடிகளும் நமது பட்டணத்து ஜனங்களும் சுகமேயிருக்கிறார்களா? அதை எனக்குச் சீக்கிரஞ்சொல்லும் இவான் பங்காருநாய்க்கனே.

## மந்திரி நபாபுக்குச் சொல் விருத்தம்.

உத்தஆர்க்காட்டில்மேவும் உனர்டன்னநபாபுசாயபே
பத்தியாய்நமதுராச்சியம் பாங்குள்ளகுடிகளானோர்
நித்தியம்சுபிக்ஷமாக நிலையுடனிருக்கிறார்கள்
சுத்தமொன்றில்லையென்றாய்க் குணமுடனிருந்திடீரே.

## வசனம்.

சலாம் சல்லாமையா அஜரத் நபாபுசாயபே! நமது பட்டணத்திலுள்ள பயிரிடுங்குடிகள்முதல் எல்லோரும் சுபிக்ஷமாயிருக்கிறார்கள் ஐயா.

நபாபு விருத்தம்.

வழுவுதலில்லையென்று வகையுடன்சொல்லீர்கண்மை
எழுபதிர்மாகாணத்தார் இறைபணம்சாட்சியுஞ்சும்
பழுதறக்கொண்டுவந்து பாக்கியில்லாமற்சேர்த்த
மொழியெனக்கறிவாகன்று முறையுடனுரைசெய்வீரே.

வசனம்.

கேளும் பங்காருநாய்க்கா! எழுபத்திரண்டு மாகாணத்தாரில் பகுதிபணம் பாக்கியில்லாமல் செலுத்தினவர் யார்? செலுத்தாமலிருக்கிறவர்கள் யார்? அவர்களையெல்லாம் விபரமாய்ச் சொல்லும் பங்காருநாய்க்கனே.

மந்திரி விருத்தம்.

சூரனேஅஞ்சாடாளும் துரையேநபாபுசாயபே
பேருடன்சிறந்திடும் பேசுமொழியானவார்த்தை
காரியக்காரனுடைய கண்டறிந்தொருகொடிக்குள்
சீருடன்சொல்வேனென்று திருவடிவணங்கிச்செய்தானே.

வசனம்.

கேளும் அரசர் நபாபுசாயபே! நமக்குப் பகுதிபணங்கட்டுகிற மாகாணத்தாருடைய வரவுசெலவுகளைக் கணக்குப்பிள்ளையால் அரைநொடிக்குள் சொல்லுகிறேன் மகாபிரபு.

மந்திரி கட்டியனுக்குச்சொல் விருத்தம்.

ஆசாரவாசல்காக்கும் அறிவுள்ளகட்டியக்காரா
பாசமாயுலகையாளும் பாதுஷாநபாபுசாயபு
தேசாதிபர்கணக்கைத் திறமுடனறியவேண்டி
நேசமாய்க்கணக்கன்றன்னை நிமிஷத்திலழைத்துவாராய்.

வசனம்.

கேளுங்கட்டியக்காரா! அதிசீக்கிரமாய்க் கணக்கப்பிள்ளையை அழைத்துவாரும் கட்டியக்காரா.

கட்டியன் வசனம்.

அப்படியே அழைத்துக்கொண்டு வருகிறேன் ஐயா.

## கணக்கப்பிள்ளை வருதல்.

பொதுவிருத்தம்.

காதினிற்கடுக்கனிட்டுக் கைதனில்கணக்கெடுத்து
வேதியர்போலேகாவி வேஷ்டியும்உடுத்திக்கொண்டு
சூதுவாதுக்குமற்ற சூக்ஷிக்கும்வல்லோனான
பேதமில்லாகணக்கப்பிள்ளை குணமுடன்வருகின்றானே.

வசனம்.

அதோதேப்படியென்றால், நபாபுசாயபவர்களுடைய அரசுக்குட்பட்ட எழுபத்திரண்டு மாகாணங்களின் வரவுசெலவு கணக்குகள்பார்க்கும் கணக்கப்பிள்ளை வருகிறபிரகாரங்காண்க.



தரு: இராகம், சங்கராபரணம், ஆதிதாளம்.

பல்லவி.

ரங்கநாத கணக்கன் வந்தான்—அதி
சயத்துடன் குறைவறச் செயத்தைக்காட்டி நல்ல— ரங்க.

அநுபல்லவி.

மங்கள திருமாந்தாதி வாழும் நபாபு மனதில்
சங்கை யறுகணக்கைச் சாற்றி மகிழ் வுண்டாக்கி— ரங்க.

சரணங்கள்.

௧. சோதிபெறு முடியில் ஜலத்த பாகை யணிந்து
காதிற் கடுக்கனிட்டுக் கழுத்தி லார மணிந்து— ரங்க.

௨. சித்திர பேதக தந்திரம் கற்றொருவர்க் கொருவர்
சித்ர முறியச் செய் சமர்த்த நதிக முடைய— ரங்க.

௩. காவிச்சோம னுடுத்திக் கையிற்கணக் கெடுத்து
பாவிகொம்பு கணக்கன் பாதுஷா கொலுவின் முன்னே— ரங்க.

கணக்கன் போற்றிகவி.

ஜயமங்களகர
விபவலங்கிருத
கருணாநபாபே
நினையடிசரணம்.

நபாபு விருத்தம்.

ராயசக்காராகேளாய் யுனக்குவுள்ளடக்கமான
காயமாம்எழுபத்திரண்டு கனமுள்ளமாகாணத்தார்
ஞாயமாய்ப்பணஞ்செலுத்தி நாணயமாயிருப்போர்தம்மை
நேயமேபரிசோதித்து நிச்சயம்உரைத்திடாயே.

வசனம்.

கேளும் ராயசக்காரா! எழுபத்திரண்டு மாகாணத்துள்ளவர்களில் நாணயமாய்ப் பகுதிபணங் கட்டிவருகிறவர்கள் யார்? அறைக் கட்டாமலிருப்பவர்கள் யார்? இதுகளைக் கணக்கைப்பார்த்து ஜல்தி ஜல்தி சொல்லும் ராயசக்காரா.

தரு: இராகம், அடாணா. ஆதிதாளம்.

பல்லவி.

எழுபத்திர மாகாணத் திறையா பகுதிகளை
விரைந்து சொல்வேன் கேளீர்—கணக்கைப் பார்த்து — எழு.
விரைந்து சொல்வேன் கேளீர்—

அநுபல்லவி.

பழுதற்ற மொழிபெற்ற பாதுஷா நபாபு சாயபே
பற்றி கணக்குகள் ஒத்து படித்தியுன்
சித்தமகிழ்ந்திட சத்தியோரத்தில்— எழு.

சரணங்கள்.

௧. திருவண்ணாமலைமேவ வீரன் சுபக்டி ராஜன்
சேத்துப் பட்டியில் வாழும் செழித்த நாயுத்து உசேன்
கருவாலி நகர்க்கடி காரன் அப்பைய நாய்க்கன்
கல்லைக் குறிசொல்லு சாயபு மவர்களிலே
செல்லும் வரவுகணக் கெல்லா மிருக்கு இனி— ஏழு.

௨. தென் மதுரையில் வாழும் செல்வ திருமலேந்திரன்
திண்டிக்கல் தன்னை யாளும் வீரன் கொலுமுதலின்
அன்பான அரியலூர் ஆளும் ரங்காரெட்டி
ஆரணி வெங்கிட்ட ராவுட பணமும்
சேருடன் வந்தன கூடவே இன்னமும்— ஏழு.

௩. எட்டியா புரமாளும் யோகேரலி ராய னும்
இசையும் திரிசிக் கோட்டைக் கிறையவன் சேக் மஹமதும்
திட்டமாய்ச் செய்கப்பட்டாளும் வீரன்ஜூமதாரும்
தேசத் திபர்களும் பாசத் துடனே வந்து
காசுக் குறையில்லாமல் ரொசத்துடனே தந்தார்— ஏழு.

௪. செஞ்சிக் கோட்டையில் நினைந்து செழிக்கும் தேசிங்கு ராஜன்
வீரன் பகுதிபணம் சேரவில்லையே மோசம் பகுடை
அவனெண்ம மாத்திரம் பனிரண்டு வருஷத்து
பாக்கிப் பணமிருக்க நோக்கத்துட னிருக்கும்
மூர்க்க நவலிடத்தில் கேழ்க்கத் தாகமாப்பும்— ஏழு.

கணக்கப்பிள்ளை விருத்தம்.

பட்டணமானசெஞ்சிப் பதிதனையாளும்வேந்தன்
திட்டமாய்ப்பத்துகோடி திரவியந்தரவேவேணும்
சட்டமாய்நமதுசேனை தளபதிதனையனுப்பி
கட்டியுமுதுமாக வாங்கியேவரச்சொல்வீரே.

வசனம்.

சலாம் சலாமையா அஜரத் நபாபுசாயபே! நமது மாகாணத்தாரெல்லாரும் நிலுவையில்லாமல் பகுதிபணத்தைக் கட்டினார்கள்; செஞ்சிச்சீமை பகுதிபணமாத்திரம் சேரவில்லை நபாபுசாயபே.

நபாபு பங்காருநாய்க்கனுக்கு உத்தரவுசெய்தல்.

விருத்தம்.

அப்படியானால்நல்ல தாகட்டும்செஞ்சிநோக்கி
செப்பமாய்ச்சென்றுஅந்த தேசிங்கையடிப்போம்வந்து
ஒப்புதல்சொன்னாலச்ச உயிர்வதைதவிர்க்கச்செய்வோம்
இப்படியேபடையெடுக்க வென்றுடன்வருவீரே.



வசனம்.

கேளும் பங்காருநாய்க்கா! இப்போதே நமது சேனைகளையெல்லாந் தயார்செய்; இந்தச் செய்தியைக் கேட்டவுடனே செஞ்சிராஜன் சமாதானஞ் செய்து பணத்தைக் கட்டினாலாச்சு, கட்டாமற்போனால் அவன் உயிரை வாங்கிவிடுவோம்; ஜல்தி ஜல்தி வாரும் பங்காருநாய்க்கா.

பங்காருநாய்க்கன் விருத்தம்.

இன்னிசைபூந்தாடாளும் எந்தலேசலாம்நீர்கேளும்
முன்னமேபடையெடுக்க முறையல்லஅரசர்க்கெல்லாம்
தன்மையாய்த்தூதனுப்பி சங்கதிதெரிந்துக்கொண்டு
பின்படையெடுத்துச்சென்று பெருஞ்சமர்செய்குவோமே.

வசனம்.

சலாம் சலாமையா அஜரத் நபாபுசாயபே! நீர் மனஸ்தாபப்படவேண்டாம். செஞ்சிச்சீமைக்குத் தூதனுப்பி அரசனுடைய மனச்சம்மதியை அறிந்து பின்பு படையெடுப்போம் மகாராஜனே.

நபாபு கவி.

கட்டியக்காரா
பொட்டெனவோடி
சட்டமாய்மல்லனை
திட்டமாயழைப்பாய்.

கட்டியன் வசனம்.

சலாம் சலாமையா! அப்படியே அழைத்துவருகிறேன் மகாராஜனே.

கட்டியன் கவி.

பலமுளமல்லா
நலமுளமல்லா
நீயுடனின்னே
கொலுவிலழைத்தார்.

தோண்டமல்லன் வருதல்.

பொதுவிருத்தம்.

வட்டமுண்டாசுகட்டி வகையுளபணிகள்பூண்டு
தட்டிசல்லடமுழ்பாங்கும் சதிருடன்வரிந்துகட்டி
சட்டமாய்நபாபுசாயபு தானழைத்திட்டாரென்று
கட்டிபகனிழக்கமல்லன் களரியில்வருகின்றானே.

வசனம்.

அதோதெப்படியென்றால், பாதுசாசபைக்குத் தோண்டமல்லன் வருகிற விதக்காணக.

தரு: இராகம், மோகனம், ஆதிதாளம்.

பல்லவி.

சூரத் தனமுடைய வீர பராக்கிரம
தோண்டமல்லனும் நானே—தாருசெல்லும்,
தோண்டமல்லனும் நானே.

அநுபல்லவி.

வீரத் தனமுடைய வேந்தர் வரமிஷ
நேரத்தில் வாங்கும் அதி கோர விக்கிரமமுள்ள— சூரத்தன.

சரணங்கள்.

௧. சிங்கார மாக நல்ல சிரசிற் பாகை யணிந்து
அங்கி நிஜாரு மிட்டு அரையிற் கல்லடாந் தொட்டு— சூரத்தன.
௨. பரிசை பட்டயம் யீட்டி பாய்கும் வளைதடியும்
வரிசை யுடனே நல்ல மகிழ்வாய் கையிலெடுத்து— சூரத்தன.
௩. திருவிளங்கும் ஆற்காட்டு தேசந் தனிபதி தன்
மருவலர் களுடைய மனதிற் கபட... — சூரத்தன.

தோண்டமல்லன் விருத்தம்.

அஜரத்நபாபுசாயபே அடியேனுன்பாதுகஞ்சம்
விசையுடனெனையழைத்த விஷயத்தையின்னதென்று
நிஜமுளவேவல்சொன்னால் நிமிஷத்திலடியேன்நானும்
சகியுறத்தடையில்லாமல் சுருக்கினிற்செய்குவேனே.

வசனம்.

சலாம் சலாமையா அஜரத் நபாபுசாயபே! தாங்கள் என்னை அழைத்த செய்தி இன்னதென்று சொன்னால், அடியனதைப் பரிசுத்தமாகத் தடையில்லாமற் செய்வேனையா.

நபாபு விருத்தம்.

சேனையில்தாருசெல்லும் திசைவண்மையுமுள்ளமல்லா
தாமிஷமில்லாமல்நீயும் சாசரென்றோடிசெஞ்சி
சீமையிற்பத்துகோடித் திரவியம்வரவேவேணும்
நாமுமேசொன்னோமென்று நலமுடன்வாங்கிவாராய்.

வசனம்.

கேளாய் தோண்டமல்லோஜீ! செஞ்சியையாளும் தேசிங்கு நமக்குக் கொடுக்கவேண்டிய பகுதிபணத்தை வாங்கிக்கொண்டு அதிசீக்கிரமாக வரவேண்டியது தோண்டமல்லோஜீ.

தோண்டமல்லன் விருத்தம்.

இதுவொருபொருளோநானும் இக்கணஞ்சென்றுசெஞ்சி
அதிபனைதேசிங்கைக்கண்டு அதட்டியேயொருநொடிக்குள்
நிதியுடன்அவனைக்கூட நிமிஷத்திற்பிடித்துக்கொண்டு
சதிருடன்வருவேன்கொஞ்சம் தனமெனக்குதவுவீரே.



வசனம்.

சலாம் சலாமையா, அப்படியே செய்கிறேன்; தாங்கள் எனக்குச் சில சேனையும் கொஞ்சம் திரவியமும் கொடுத்து அனுப்புவித்தால், அரைநொடிக்குள் செஞ்சிச் சீர்மைக்குப்போய் நமக்கு வரவேண்டிய பகுதிபணத்தை வாங்கிக்கொண்டு தேசிங்குராஜனையும் கையோடு பிடித்துவருவேன் மகாராஜனே.

நபாபு வசனம்.

அப்படியே அனுப்புவித்தேன்; அழைத்துக்கொண்டுபோ. ஜல்தி ஜல்தி தோண்டமல்லோஜீ.

## தோண்டமல்லன் செஞ்சிக்கு வருதல்.

பொதுவிருத்தம்.

அதிபலதோண்டமல்லன் ஆனையும்பரியுமற்ற
கதியுளசேனையோடும் கரும்பியே உவகைகொண்டு
நிதிகள்தேசிங்குகையில் நிமிஷத்தி[illegible]வாங்குவேனென்
றதிமகிழ்செஞ்சிநோக்கி அடவு[illegible]வருகின்றானே.

வசனம்.

அகோதெப்படியென்றால், தோண்டமல்லனானவன் ஆனைசேனைப்பரிவாரங்களோடுகூடப்போய், தேசிங்குராஜன் தரவேண்டிய பகுதிபணத்தை இப்போதே வாங்கிவருவேனென்று செஞ்சியைநோக்கி வருகிறவிதங்காண்க.

தரு: [illegible] ஆதிதாளம்.

பல்லவி.

செஞ்சிப் பதியை நோக்கித் தோண்டமல்லனும் வருஞ்
சேவகத்தைப் பாரீர்—அதிபராக்கிரமன்
சேவகத்தைப் பாரீர்.

அநுபல்லவி.

அஞ்சிப் படைகளிவ ணருகிற் புடையாய்ச் சூழ
ஆக்கிரம வீரப ராக்கிரம யானைமேல்
தீர்க்கமாயேதிபணம் மூர்க்கத்துடனே வாங்க— செஞ்சி.

சரணம்.

கத்தி பரிசை கையில் கதிர்போ லொளி யெரிக்க
கீர்மான் படையணிகள் மேல்மேலுங் கொக்கரிக்க
வெற்றிக் கொடிவிருது விண்மீதிலே பறக்க
வேந்தர் பயந்து மானஞ் சோர்ந்து கரம்விரிக்க

வேலெங்கும் புவியை யாளும் ராஜனென்று
காலில் நின்று பண்ம சாலகொண்டு வா
வென்ற சொல்லை யெடுத்து அதியுக்கிரம்
சண்டவேகம் படைந்து—சினமுடன்,
வீர வுதார கெம்பீர பராக்கிரம
சூரன் தரணிசிங்கு குமார னிருக்கும்— செஞ்சி.

## பொதுவிருத்தம்.

சீக்கிரமாகவந்து திமிரிக்கோட்டையிலேவாழும்
சேக்மஹமதையுங்கூடச் சேரவேயழைத்துக்கொண்டு
வாக்கினிற்பொரிபறக்க வந்துஆரணிசீமைக்குள்
ஆக்கிரமசித்தன்மல்லன் அடித்தனன்நகாருதானே.

## வசனம்.

அகோதெப்படியென்றால், தோண்டமல்லோஜியானவன் ஆற்காடுவிட்டுத் திமிரிக்கோட்டையிற் சென்று, சேக்மஹமத்சாயபை தனக்குத் துணையாக அழைத்துக்கொண்டு ஆரணிசீமைக்குள்வந்து பேரிகையடித்தான்.

———

## வெங்கிட்டராவரசன் வருதல்.

———

## பொதுவிருத்தம்.

அடித்ததோர்நகாரு[illegible]த்தம் ஆரணிதன்னிற்கேட்டு
கூட்டத்துடன்ராமச்ச[illegible]திரன் சூரனுஞ்சீனிவாசன்
வெடித்தசொல்வெங்[illegible]ட்டராவை யிங்கேவந்தானப்புவிக்க
கடித்ததிறனாயாய்ச்[illegible]வெலருகின்றானே.

## வசனம்.

அகோரெப்படியென்றால், அப்படி ஆரணிசீமையில் பேரிகையடித்த சத்தத்தைக்கேட்ட, அச்சீமையாளும் இராமச்சந்திரராவும் சீனிவாசராவும் வெங்கிட்டராவை அனுப்ப, அவன் எதிர்கொண்டுவருகிற விதங்காண்க.

தரு : இராகம், கல்யாணி. அடதாளம்.

## பல்லவி.

ஆரணி சீமைக்கதிபன் வெங்கிட்டராவ்—அரச னிதோ வந்தான்.

## அநுபல்லவி.

சீருடன் நம்முடைய சீமைதி யாமலிங்கு
ஆரு நகாரு சத்தம் அடித்த தறிவோமென்று— ஆரணி.



## சரணங்கள்.

௧. என்னுட சீமை ரொக்கம் நான் முன்னதாய் கட்டியிருக்க
மன்னவன்குறை அல்ல யின்னமாரோ பார்ப்போமென்று— ஆரணி.

௨. மூக்கின்மேல் விரலை வைத்து ஆக்கிரமத் துடனே யிந்தப்
பார்க்குள் வந்தவனை யிப்போ தாக்குறேன் பாரென்று— ஆரணி.

௩. தன்படையைப் பின்னே வரச் சாத்தியே பரிசையேந்தி
முன்னதாய்க் கோபத்துடன் தன் கண்களிற் பொரி பறக்க— ஆரணி.

## வெங்கிட்டராவ் விருத்தம்.

என்னுடசீமைதன்னில் இரங்கியேநகாருபோட்ட
மன்னவரொருவரிந்த மண்ணிலிலதியென்றேன்
கண்ணினிற்தெரிந்ததாலென் கடுஞ்சினம்விட்டேன்நீரும்
என்னகாரியவந்தசெய்தி யின்னதென்றியம்புவீரே.

## வசனம்.

கேளும் தோண்டமல்லோஜி! என்னுடைய சீமையிலே யாரோ எதிரி கள்வந்தார்களென்று ஆக்கிரமித்து ஓடிவந்தேன்; வந்தவிடத்தில் உன்னைப் பார்க்கவே என்னுடைய கோபம் தணிந்தது. நீ இவ்விடம் வந்தகாரணம் இன்னதென்று சொல்லவேண்டும் தோண்டமல்லோஜி.

## தோண்டமல்லன் வி[illegible]த்தம்.

ஆரணிவெங்கிட்டராவே அ[illegible]டன்சொல்வேன்கேளும்
சீருளசெஞ்சிதன்னில் திரவியம்வரவேவேணும்
பாருக்குள்ராஜாவாகும் பாதுஷாவினுடைப்படிக்கே
சேருடன்தருகுபோறேன் நீயுமேஅறிந்திடாயே.

## வசனம்.

கேளும் வெங்கிட்[illegible] பாதுஷாவினுடைய உத்தரவுப்படி செஞ்சிதேசத்தையாளும் தே[illegible] தரவேண்டிய திரவியத்திற்கு நான் தருகுபோறேனையா.

## வெங்கிட்டராவ் விருத்தம்.

தரவுக்குப்போறேனென்று சாத்தியமல்லவேகேள்
அரசன்தேசிங்குராஜன் ஆண்மையையறியமாட்டீர்
நெறியுடனெதிரேசென்று நிதியைநீர்கேட்பீராகில்
கரமுடன்உம்மைவெட்டிக் களவாடிசெய்குவானே.

## வசனம்.

கேளும் தோண்டமல்லோஜி! தரவுக்குப்போறேனென்று நீர் சொல்லி யது சாத்தியமல்ல; தேசிங்குராஜனுடைய வீரத்துவத்தை நீர் அறியமாட்டீர்; அவர் எதிரேசென்று தரவேண்டிய பணத்தைக் கேட்பீராகில், உம்மைத் தம்முடைய கரவாளினாலே உயிர்வதைசெய்வார். இன்னும் அவருடைய பராக்கிரமத்தைக் கேளீர் தோண்டமல்லோஜி.

## தேசிங்குராஜனுடைய கீர்த்திப்பிரஸ்தாபத்தை வெங் கிட்டராவ் மல்லனுக்குச் சொல்லுதல்.

———

கரு இராகம், அடாணா. ஆதிதாளம்.

பல்லவி.

வீர வுதார கெம்பீர பராக்கிரமன்
வீரத்தைக் கேளுமையா—தேசிங்குராஜன்,
வீரத்தைக் கேளுமையா.

சரணம்.

சூரன் தரணிசிங்கு சுதனாகவே பிறந்து
மாரனழகன் செஞ்சி மன்னன் தேசிங்குராஜன்
வாசவனிலு மதி போசன் அன்பர்களுக்கு
நேசன் அதிகபிர தாபமிகும் விஜய— வீர.

இதுவுமது விருத்தம்.

செஞ்சியையாளும்வேந்தன் ஸ்ரீரங்கர்பத்தனையா
[illegible]டாடென்று வீரமாய்ப்பேசிடாமல்
அஞ்சிநின்[illegible]ம்வார்த்தை அடவுடன்கேட்டுக்கொண்டு
பஞ்சைபோல்[illegible]ட்டுக்கு பயணமாய்வருகுவாயே.

வசனம்.

கேளும் தோண்றமல்லோஜீ! இந்த ஆனைசேனையோடுகூடச் செஞ்சிக்குப் போவாயானால், உன் உயிர் பிழைக்கமாட்டாது; ஆனதால் இதுகளையெல்லாம் விட்டுவிட்டு அதிக ஏழையைப்போலே தேசிங்குராஜனிடத்தில் அடக்கமாய்ப் போய், பேசி, உன் உயிரை மீட்டுக்கொள்ள வகைபாரும்; நான் போய்வருகிறேன் தோண்றமல்லோஜீ.

தோண்றமல்லின் வசனம்.

ராம்ராவையா! மெத்த[illegible]செய்தீர்; நானும் போய்வருகிறேனையா.

பொதுவிருத்தம்.

ஆரணிவெங்கிட்டராமன் அறைந்திடும்வார்த்தைகேட்டு
சேர்மொழியுரைத்திடாமல் நினைவுடன்தனியைக்கூட்டி
ஆரபாரமதாய்ச்சங்கரா ஆற்றினுக்கருகேசென்று
ஆறுநாள்சென்றபின்பு அடித்தனன்நகாருதானே.

வசனம்.

அதோரெப்படியென்றால், தோண்றமல்லோஜியானவன் வெங்கிட்டராவ் சொன்ன சொல்லைக்கேட்டுப் பயந்து, ஆனைசேனைகளை அழைத்துக்கொண்டு சங்கராபரணியாற்றருகே சேர்ந்து, ஆறுநாள் அங்கே தங்கி பேரிகையடித்தான்; அந்தச் சத்தத்தைச் செஞ்சி தோணிராஜன் கேட்டு, தன் குமாரன் தேசிங்குராஜனுக்குச் சொல்லுகிற விதங்காண்க.



தோரணிராஜன் விருத்தம்.

குமுறியசத்தஞ்செஞ்சிக் கொத்தவன்கேட்டுரங்கர்
தமதடிபூசைசெய்யும் தனையன்தேசிங்கைக்கண்டு
நமதுபட்டணத்தில்வந்து நகாரடிக்கிறுவதாக
அமையுமிவ்வுலகுதன்னி லரசர்களுண்டோஅப்பா.

வசனம்.

தோண்றமல்லோஜியானவன் செஞ்சிதேசத்திற்போய் நகாரடித்த சத்தத்தைத் தோணிராஜன் கேட்டு, ஸ்ரீரங்கநாதனைப் பூசைசெய்துகொண்டிருந்த தன் குமாரன் தேசிங்கைக்கண்டு, நமது பட்டணத்தில் எப்போதுமில்லாதவிதமாய் இப்போது யாரோவந்து நகாரடிக்கிறார்கள்; இப்படியாய் வருகிற அரசர்களும் உண்டா? இதென்ன விபரீதமாயிருக்கிறது, அப்பா மகனே.

தேசிங்குராஜன் விருத்தம்.

நகாரடித்திட்டாலென்ன நாள்தோறும்விரோதமென்றும்
பகைவர்கள்வந்தாலென்ன பாரளந்திட்டோர்நம்மை
அகலவிட்டிருக்கமாட்டார் அர்க்கார்மார்கள்தன்னை
சுகமுடனனுப்பிச்செய்தி சுருக்கினில்தெரிகுவேனே.

வசனம்.

கேளும் என்து பிறியதந்தையே! அப்படி நகாரடித்தாலென்ன? பகைவர்கள் வந்தாலென்ன? நாம் நம்பி பூஜிக்கும்படியான பாரளந்தமாயோன் நம்மைக் கைவிட்டுவிட்டுத் தூரப்போய் இருக்கமாட்டார்; ஆதலால், இப்போதே அர்க்கார்களைக்கொண்டு சீக்கிரத்தில் சமாச்சாரத்தைத் தெரிந்துகொள்ளுகிறேன் ஐயாவே.

தேசிங்குராஜன் கட்டியனுக்குச்சொல் கவி.

சரசமென்றோடியோடி
புரமதில்வாழ்ந்திருக்கும்
நிறையுள அர்க்கார்மாரை
பிரியமாயழைத்துவாராய்.

கட்டியன் கவி.

அப்படியேயுந்தன்
சொற்படிசென்று
இப்பஅர்க்காரை
சொப்பெனவழைப்பேன்.

மேற்படி கவி.

அருக்கார்மாரே
கருக்காகராஜன்
செருக்காகஉம்மை
சுருக்காயழைத்தார்.

## அர்க்கார்கள் வருதல்.

### பொதுவிருத்தம்.

சிரசினிற்பாகைகட்டி திவ்யகுண்டலங்கள்பூண்டு
வரிசையாய்சோமன்கட்டி வகையுளபணிகள்பூண்டு
அறம்வழுவாதசெஞ்சி அரசனும்அழைத்தாரென்று
சரசரென்றார்க்கார்மார்கள் சபையினில்வருகின்றாரே.

### வசனம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குமஹாராஜன் அழைத்துவரச் சொன்னாரென்று கட்டியக்காரன்சொல்ல, அர்க்கார்கள் வருகிறவிதக்காண்க.

தரு: இராகம், மத்தியமாவதி. அட்டதாளம்.

### பல்லவி.

அர்க்கார் மார்கள் வந்தார்—வேடிக்கையாக
அர்க்கார் மார்கள் வந்தார்.

### அநுபல்லவி.

அர்க்கார் மார்கள் செஞ்சிக் கரசன் அழைத்தா ரென்று
சுருக்காக ஓடி ராஜன் சொன்னபடி ஏவல் செய்ய— அர்க்.

### சரணங்கள்.

௧. சாலுவை சிரசிற் கட்டி தாவட மார்பிற் பூண்டு
கோலமாய் அங்கி நிஜாரு குறுகவே தரித்துக்கொண்டு— அர்க்.

௨. தரியலர் களுடைய சமர்த்தும் உளவுகளும்
அரிய வல்லமை யுள்ள அழகு சொகுசுடையும்— அர்க்.

௩. நெற்றியில் திருநாமம் நேரா விளங்கயிட்டு
வெற்றி மன்னவ னழைத் திட்டா ரென்னவே ஓடி— அர்க்.

### தேசிங்குராஜன் விருத்தம்.

வந்தஅர்க்கார்மாரே மஹாராஜன்பார்த்துநம்மூர்
இந்தநாள்வரைக்குமிங்கே யெதிரிகள்வந்ததில்லை
வந்தவன்யாரோஅந்த வகைகளையறிந்துகொண்டு
சந்தேகமின்றிவந்தென் சமுகத்திலுரைசெய்வீரே.

### வசனம்.

கேளுங்கள் அர்க்கார்களே! இதுவரையில் இவ்விடத்தில் நமக்கு எதிரிகளாரும் வந்ததில்லை; இப்போது ஏதோ பேரிகைசத்தங் கேட்கிறது. வந்தவர்கள் யாரோ? அவர்கள் இன்னாரென்று நாம் அறியோம்; ஆதலால் நீங்கள் சீக்கிரம்போய்ச் சமாச்சாரத்தை அறிந்து வந்துசொல்லுங்கள் அர்க்கார்களே.



23

### அர்க்கார் கவி.

ராஜனோராங்கள்
பாசமாய்ச்சென்று
யோசனையறிந்து
நேசமாயுரைப்போம்.

### இதுவுமது விருத்தம்.

அந்தவேளையதனில் மல்லன் அருகினிற்போயேசேர்ந்து
வந்ததும்முரசறைந்த வாறுகளெல்லாமிப்போ
அந்தமாய்க்கேட்டுக்கொண்டு அரசனும்வரவேசொன்னார்
சந்தேகமின்றிஎன்றுன் சாற்றுவீர்சரியாய்த்தானே.

### வசனம்.

யாரையாவும் இங்கேயெங்கள் தேசத்தில் வந்து பேரிகையடிக்கிறது? எங்களுடைய ராஜன் நீங்கள் வந்தகாரணம் என்னவென்று அறிந்துவரச் சொன்னார்; நீங்கள் வந்த சமாச்சாரத்தைச் சுருக்கினில் சந்தேகமின்றிச் சொல்லுங்கள் சொல்லுங்கள்.

### மல்லன் விருத்தம்.

என்னவாரென்றுகேட்ட இறையவன்தூதர்களும்
மன்னவன்ஆற்காடாளும் நவாபுக்குரிதான்செஞ்சி
தன்னிலேசேரவேண்டியதாகத் தரவுக்குஅனுப்புவித்தார்
இன்னதேநடந்தசெய்தி யிதறிந்துரைசெய்வீரே.

### வசனம்.

அகோ கேளுங்கள் தூதர்களே! உங்கள் செஞ்சிச்சீர்மைக்குச் சேரவேண்டிய பகுதிப்பணத்தை வாங்கிவரும்படி நபாபு அனுப்ப, நான் வந்தேன்; இதே உண்மையான சமாச்சாரம்; இதைப்போய் உங்கள் ராஜனுக்குச் சொல்லுங்கள் தூதர்களே.

### தூதர்கள் வசனம்.

அப்படியா, நல்லது ஆகட்டும்! நாங்கள் போய்வருகிறோம் தோண்டமல்லோஜி.

---

## தோண்டமல்லோஜி புலம்புதல்.

### பொதுவிருத்தம்.

வந்தவர்போனபின்பு வகையுளதோண்டமல்லன்
சிந்தையிற்பயமதாகித் திருமணிசாற்றிக்கொண்டு
தந்தியும்பரியேறாமல் தரணியில்நடந்துகொண்டு
புந்தியில்அயர்ந்தோயும் புலம்பியேவருகின்றானே.

வசனம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குராஜன் அனுப்பின தூதர்கள் பே
னபின், தோன்றமல்லேலாவி புலம்புகிற விதங்காண்க.

தரு: இராகம், பைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

என்ன செய்வேன் ரகுராமா—இந்த விதிக்கு
என்ன செய்வேன் பரந்தாமா.

அநுபல்லவி.

என்ன செய்வேன் ரகுராமா இன்னம் வாராமல் கர்த்தான்
மூன்றா ராயிரம் பேர்க்கு அன்னம் படைப்பேன் நானும்— என்ன

சரணங்கள்.

க. பாக்ஷா நபாபு யென்னை பரிவோ டழைத்து மொழி
தீக்ஷண்ய மாயுரைத்து செஞ்சிக் கனுப்புவித்தார்— என்ன

உ. வள்ளல் வெங்கிட்ட ராமேந்திரன் விண்ணுமொழி கேட்டெந்த
னுள்ளம் நடுங்கு தென்னைக் கள்ளமில்லாமற் காப்பாய்— என்ன

ங. பணத்துக்காகச் செஞ்சிக்கு பாக்ஷா அனுப்பும்போது
க்ஷணத்தில் கொண்டுவர்வேனென்று நிரும்பரத்து வந்தேன்— என்ன

ச. வரிபணம் என்றமொழி மன்னன் கேட்டா லுன்னுயிர்
தரியா துடலிலென்று சாந்தமொழிக் கென்னசெய்வேன்— என்ன

மல்லன் தேசிங்குராஜனைப் பார்த்துச் சொல்லும்
கட்டளைக் கலித்துறை.

கையோ கமலமுகமோ நிறைமதி கவிதலவு
மெய்யோ புயவலிமேரோ இப்பூதல மேவிவளர்
செய்யாள் விளங்கிய செஞ்சிப்பதியளர் தேசிங்குமன்று
அய்யா வுன்பாத அம்போருகானும் அடைக்கலமே.

வசனம்.

கமலம்போன்ற கையும், மதியையொத்த முகமும், அழகியசரீரமும், மே
ருவிகர்த்த புயவலியும், உலகத்தில் பிரகாசிக்கின்ற லக்ஷ்மிவிலாசமும் விள
ங்கிய ராஜனே! மலர்போன்ற உன் பாதமே எந்நாளும் அடியேன் பு
கலிடமையா மஹாராஜனே.

தேசிங்குராஜன் விருத்தம்.

தாகனைப்போலேயெந்தன் சமுகத்தில்வந்தநீயார்
நெறியென்னநின்பேரென்ன நீமுதசனறைவதென்ன
குருதிகன்சிதறவுன்னைக் கூறிரண்டாகச்செய்வேன்
சுருவியேவாரவோறென் சமுகந்துணைசெய்வாயே.



வசனம்.

ஆ, ஆ, ஆ, அடடா இங்கே தாகனைப்போலே எந்தனிடத்தில் வந்தவன்
நீ யார்? உன்னுடைய நெறியென்ன? உன்னுடைய பெயரென்ன? நீமுரச
றையவேண்டிய காரணமென்ன? இதுகளைச் சீக்கிரத்தில் சொல்லு; அப்
படிச்சொல்லாதிடில் என்னுடைய கூரியவாளினாலே உன்னுடைய தேகத்
தைப் பூமியில் இரண்டுதுண்டாக விழச்செய்வேன்; சொல்லடாசொல் தாகா.

மல்லன் விருத்தம்.

திருவிளங்கியஉல்லாச தேசிங்குராஜனேஉன்
தரியலர்நபாபுசாயபு தரவுக்குஅனுப்புவித்தார்
இருவர்க்கும்பொதுவாய்வந்த யென்னைநீர்கடிந்துகொண்டால்
சரியோநீருரைத்தவண்ணம் தடையின்றிசெய்குவேனே.

வசனம்.

சரணஞ்சரணம் தேசிங்குமஹாராஜனே! பாக்ஷா நபாபு என்னை உம்
மிடத்தில் தரவுக்கு அனுப்புவித்தார்; நான் இருவருக்கும் பொதுவாய் வந்
தேனல்லாது, மற்றும் யாதொரு விவரீதார்த்தமாய்த் தங்களிடம் வரவில்லை;
தாங்களெனக்கு என்ன உத்தரவு செய்தபோதிலும் அதன்படி நான் தலையால்
நடத்துசெய்வேன்; என்பேரில் கோபங்கொள்ளாதேயும் மஹாராஜனே.

## தேசிங்குராஜனும் மல்லனும் சம்வாதஞ்செய்தல்.

தரு: இராகம், காம்போதி. ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. தேசி. ஆரடா வுன்னையிங்கே அனுப்பினா னடாவன்
ஆரடா மறுத்தா லுன்னைக்கொல்லுவேன்கை பட்டாவாலே.

உ. மல். கொல்லுவேனென்று யென்மேற் கோபஞ் செய்யாமற்கேளும்
வல்லவன் அனுப்பி னானும் வந்தேனுனைப் பார்ப்பதற்கு.

ங. தேசி. வந்தாலென்ன ஆற்காடு மன்னவ னிவிடம்வந்தால்
தந்தனுப்புவே னெந்தன் சமர்த்தைநீ பாரடா.

ச. மல். சமர்த்தா யிவிடம்வரத் தமியேற்கு வலியுண்டோ
நியிதைத்திற் செல்வேன்மொழி நிலையுடனே யுரைப்பீர்.

ரு. தேசி. நிலைமொழி யென்ன சினம் கொள்ளுவேன் பட்டவைப
கொலையினன் வந்தால் பணங் கொடுக்கிறேன் வரச்சொல்லடா.

சு. மல். சொல்லென்று சொன்ன மன்னன் சுடுமொழி கேட்டயர்ந்து
நல்ல வாசகமாக அதி நயமுடனுரைப்பீர் மன்னா.

எ. தேசி. உரைப்பதென்ன பட்டாவில் உயர்ந்த பாலாவில் பணம்
இருக்குதவனை யிங்கே இக்ஷணம் வரச்சொல்லு.

அ. மல். இக்ஷணம் அழையென்று இறைவன் சொல்லவே மல்லன்
அக்ஷணஞ் செஞ்சியைவிட் டாற்காடு நடந்திட்டான்.

## தன்னை அனுப்பிய பாக்ஷாவுக்கு என்னசொல்வேனென்று ஆபத்பாந்தவனை நினைத்து மல்லன் புலம்புதல்.

---

### பொதுவிருத்தம்.

அப்படியரசன்சொல்ல அதிர்ந்துடல்நடுநடுங்கி
மெய்ப்பரிசிவிகையானை மீதினிலேறிடாமல்
செப்பரும்வேந்தன்சொன்ன செய்தியைபாக்ஷாமுன்னே
எப்படிசொல்வேனென்று ஏங்கியேநொந்தழுதுவாரான்.

### வசனம்.

அதேதெப்படியென்றால், அப்படியாக தேசிங்குராஜன் சொல்ல, மல்லன் உடலாதியந்தம் நடுக்கங்கொண்டு சிவிகை யானை முதலானதுகளில் ஏறாமல், நபாபுக்கு என்ன சொல்லப்போகிறேனென்று பக்கத்தோடு, உற்றவிடத் தாற்றுவாரையாய் வந்து ரக்ஷிக்கும் ஆபத்பாந்தவனை நினைத்து மல்லன் புலம்பி வருகிற விதங்காண்க.

தரு: இராகம், சஹானா. அட்டதாளம்.

### பல்லவி.

ஆபத்பாந்தவா யெந்த வழியினில் வந்தேயிப்போ
அடியே னிடரைப் போக்குவாய்.

### அநுபல்லவி.

கோபத்தால் பாக்ஷா யென்மேல் குற்றஞ்சொல்லிச் சீறியாமல்
மாபத்தன் தேசிங்குசொல் வார்த்தையைச் சொல்லப்போறேன்—ஆபத்.

### சரணங்கள்.

க. தேசாதிப னிடத்திற் சென்றே நீதுவரைக்கும்
மோசம் வாராம லென்முன் வந்திருந்து காத்தாய்— ஆபத்.

உ. மன்னன் தேசிங்கு ராஜ மகிப விடத்தில் வந்து
சின்னப் பட்டுப்போகச் செய்யுந் திறமென்னமோ— ஆபத்.

ந. பரிசுத்த ஆறிகா டாளும் பாக்ஷா முன்னே சென்று
எரியொத்த வசனத்தை யெடுத்தெவ் விதமுரைப்பேன்— ஆபத்.

ச. மன்னவனுரைத்த சுடும் வஞ்சனை மொழியை பாக்ஷா
தன்னுட னுரைத்தால் மனம் என்னமோ யிருந்திடுமோ— ஆபத்.

ரு. வீண்மொழியா லென்மேல் வேந்தன் சினங்கொள்ளாமல்
தன்னிப் பகைதேசிங்கு தன்மேல் நினைக்கச் செய்வாய்— ஆபத்.

சா. இந்தவிதமாய் மன்னன் சந்தோஷங் கொண்டால் நானும்
முந்தி சொன்ன விரதம் முடிப்பேன் சென்றவுடனே— ஆபத்.

எ. அன்னங் கொடுப்பி தன்றென் னகத்தி லுந்தன் பாதத்தை
என்றும் மறந்திடாம லிருப்பேன் கிருபை புரியும்— ஆபத்.



### மல்லன் நபாபுக்குச்சொல் விருத்தம்.

இந்நிலாவிளங்கும்ஆற்காட் டிறைவனேயொருவிண்ணப்பம்
முந்தவுமுரைப்படிக்கு முயின்றயானதற்குச்சென்று
அந்தமன்னவனால்நானு மவஸ்தைகள்மிகவும்பட்ட
விந்தையைவிண்ணுதென்று விளம்புவேன்சபையிற்றானே.

### வசனம்.

சலாம் சலாமையா அஜாத் நபாபுசாயபே! தாங்கள் முன் செய்த உத்தரவுப்படி யான் அந்த தேசிங்குராஜனிடம் போயிருந்தேன்; அந்த அரசனால் யான் பட்ட வருத்தத்தைக் கொஞ்சம் சொல்லுகிறேன்; சற்று மனம் பொறுத்துக்கேளும் பாக்ஷாவே.

---

## தேசிங்குராஜனின் அதிக்கிரமத்தை மல்லன் நபாபுக்குச் சொல்லுதல்.

---

தரு: இராகம், முகாரி. அடதாளம்.

### பல்லவி.

என்ன சொல்வேன் மன்னவன் உன்மொழியைக் கொண்டேனும்,
இறைமிறு கேட்கச் சினந்து யென்மேல் சீறிவந்தான்— என்ன.

### அநுபல்லவி.

அன்னவயல் செஞ்சிக் கதிபன் தேசிங்குராஜன்
சொன்ன மொழியை வாயால் சொல்ல மனநோகும்— என்ன.

### சரணங்கள்.

க. சாதுமொழி ஒதவுன்னை அனுப்பிய நபாபு
சாயபிங்கே வந்தால் வெட்டித் தானெறிவே னென்றான்— என்ன.

உ. பட்டயம் யீட்டி முனையில் நட்டிருக்குது ரோஷமுள்ள
பாக்ஷாவானால் சமர்செய்து பத்தயுஞ் சொன்னான்— என்ன.

ந. சிலையுடன் மணவாளி நிலையிற்கொண்டு போய்ச் சேரென்று
செப்பினான் மனம் ஒப்பியே சேவைவிசே ஷமுஞ்சொன்னான்— என்ன.

### மல்லன் விருத்தம்.

என்னமாய்ச்சொல்லப்போறே னின்னமுடிவந்தமாக
மன்னவன்சொன்னவார்த்தை மனைத்துநான்சொன்னேனையா
நன்னிதிமகிழ்ந்து நல்முள்ளசெஞ்சியாண்டு
இன்னமிப்பூமிதன்னி லிருப்பேனேயிறப்பேனென்றான்.

### வசனம்.

கேளுமையா, அஜாத் நபாபுசாயபே! அந்த தேசிங்குசொன்ன வார்த்தையை யான் என்னமாய்ச் சொல்லுவேன். நமக்குச் செலுத்தவேண்டிய பகுதிபணத்தை இனிச்செலுத்தி, தான் உயிருடன் செஞ்சிதேசத்தை ஆண்டு இருப்பதில்லையென்றுஞ் சபதங்கூறிச் சொல்லுகிறான் ஐயா.

## பொதுவிருத்தம்.

இப்படிமல்லன்சொல்ல இறையவன்மனங்கொதித்து
அப்படியாகுமல்ல தாகட்டும்அவன்சமர்த்தை
இப்போதறிவேனென்று யெண்ணமிலாச்சினங்கொண்டேதான்
தப்பிலாஅமச்சர்தம்மை தானழைத்தேதுசொல்வான்.

### வசனம்.

அகோதெப்படியென்றால், இவ்விதமாக மல்லன்சொல்ல, நபாபுவானதுஅளவில்லாத கோபங்கொண்டு, ஆகா! அப்படியா? நல்லது ஆகட்டும்; அந்த தேசிங்குடைய திறத்தை இந்தக்ஷணத்திலேயே அறிவேனென்று, அமச்சர் முதலானவர்களை அழைத்து ஏதுசொல்லுகிறனென்றால்,

### நபாபு பங்காருநாய்க்கனுக்குச்சொல் விருத்தம்.

காவிலும்மல்லன்சொன்ன நடத்தையைக்கேட்டீர்களம்மா
கேவலமிருக்கொணாது சேர்ந்தியைச்செலுத்தவேண்டும்
தாவீராம்சென்றுவேந்தைத் தண்டனைசெய்வோம்அது
ஏவிபாளயக்காரர்தம்மை யிட்சணம்வரச்செய்வாயே.

### வசனம்.

அகோகேளும் பங்காருநாய்க்கா! தேசிங்குசொன்னதாக மல்லன், சொன்னதைக் கேட்டும் நாம் சும்மாயிருக்கப்படாது; நம்முடைய சாமர்த்தியத்தை அந்தத் தேசிங்குவிடத்தில் காட்டி அவனைச் சிட்சைசெய்வோம். சீக்கிரத்தில் பாளயக்காரரை அழைத்துவரச்செய்வாய் பங்காருநாய்க்கா.

### பங்காருநாய்க்கன் அரங்கநாதபிள்ளைக்குச்சொல் விருத்தம்.

சதிர்பெருகரும்பையெள்ளைச் சலதத்திடில்மதராய்காட்டும்
அதுகொண்டுவேண்டுதாம்போய் அதோகதப்பார்த்திருக்கால்
சிதைத்துஅடக்கிசொன்ன நெறிப்படிநடந்துகொள்வான்
இதோதிருமுகமனுப்பி யிறையவர்களைவரச்செய்வாயே.

### வசனம்.

அகோகேளும் அரங்கநாதபிள்ளையே! சகலதேசத்து அரசர்களும் இப்போதே ஆற்காடுவந்து சேரும்படியாக பாதுஷா உத்தரவுசெய்திருக்கிறார்; ஆகையால், நீங்களனைவரும் வரவேண்டியதென்று ஒரு திருமுகம் எழுதி, தூதர்கையில் கொடுத்து அனுப்பும்; சுருக், சுருக், சுருக்.

### அரங்கநாதபிள்ளை வசனம்.

அப்படியே எழுதியனுப்புகிறேனையா திவான் பங்காருநாய்க்கரே.

### அரங்கநாதபிள்ளை திருமுகவிருத்தம்.

இப்பவும்பாளயக்காரர் யாவரும்மினைத்திருந்த
நடப்பதால்சுபிக்ஷஞ்செஞ்சி ராஜன்மேற்சமர்தொடங்கி
இப்பவும்அரசன்போக விசைந்ததால்நீங்களெல்லாம்
கொப்பெனசேனையோடுங் கூட்டமாய்வருகுவீரே.



### வசனம்.

அகோகேளுங்கள் பாளயக்காரரே! இப்பவும் நமது பாதுஷா நபாபுசாயபு தேசிங்குராஜன்மேல் யுத்தத்திற்குப் போகவிருப்பதால், நீங்களெல்லாரும் அதிசீக்கிரமாக ஆனைசேனைப் பரிவாரங்களோடுகூட வரவேண்டும் பாளயக்காரரே.

---

## தேசாதிபர் வருதல்.

### பொதுவிருத்தம்.

திருமுகம்கண்டமாத்திரம் தேசிங்குராஜன்வீரம்
அறிகிறேனென்றுசொல்லி அவரவர்தளத்தினோடே
முரசுயெக்காளஞ்சின்னம் முழங்கிடபாளயக்காரர்
செறிபராக்கிரமத்தோடு சினமுடன்வருகின்றாரே.

### வசனம்.

அகோதெப்படியென்றால், ஆற்காடுநபாபு அனுப்பிய திருமுகங்கண்டமாத்திரத்தில், எழுபத்தோர் மாகாணத்து அரசர்களும் தங்கள்தங்கள் ஆனைசேனைப்பரிவாரங்களோடுகூட எக்காளங்கள் தொனிக்க, மிகுந்த கோபத்துடனே தேசிங்குராஜனுடைய வீரத்தைச்சற்றுப்பார்ப்போமென்று அரசர்கள் நபாபுடைய கொலுவுக்கு வருகிறவிதங்காண்க.

தரு: இராகம், ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

### பல்லவி.

தேச மன்னர்கள் வந்தார்—மாகாணம் வாழ்
தேச மன்னர்கள் வந்தார்.

### அநுபல்லவி.

தேச மன்னர்கள் வந்தார் தேசம் புகழுஞ்செஞ்சி
தேசிங்கு மீதினில் திறமுடன் சமர்செய்ய; தேச.
அதிக உக்கிரமவை யத்துதி விக்கிரம—

### சரணம்.

சிரசில் மகுட மின்ன—இருகாதில்
திகழுங் குண்டல மின்ன
உரத்தில் பதக்கந் துன்ன—இருபுயத்தில்
ஒங்கும் கைவலைய மென்ன
இருகரத்தில் கங்கணம் இலங்க ஏனையா
பரணம் விசித்தார்—பல
வனிந்து வேல்வாள் கத்தி கேடயம்
ஆரவாரத் துடனே வீரசம்பவிதுடன்— தேச.

### தேசாதிபர் விருத்தம்.

நறைகமழ்மாலைமார்ப நராதிபர்தொழும்பொற்பாதம்
இறைவனேநபாபுசாயபே யெங்களைதானேயோடும்
வரவழைத்திட்டசெய்தி வகையுடனெங்களுக்கு
அறைகுவீரென்றுசொல்லி அடவுடன்சலாஞ்செய்தாரே.

### வசனம்.

சலாம் சலாமையா அஜரத் நபாபுசாயபே! தாங்கள் எங்களை இந்த சேனைப்பரிவாரத்தோடு வரும்படி அழைத்தசெய்தி இன்னதென்று திருவுளம்பற்றவேண்டும் மகாராஜனே.

### நபாபு விருத்தம்.

கேட்டீரோசெஞ்சிராஜன் கெறுவமாகனைப்புர்தாதை
ஓட்டியென்னுடன்போர்செய்ய உரங்கொண்டிருப்போன்தன்னை
வாட்டியத்தேசந்தன்னை வாங்கியுங்களுக்களிப்பேன்
கூட்டமாய்ப்படையுந்திரட்டி கொப்பெனவருகுவீரே.

### வசனம்.

அகோகேளுங்கள் எழுபத்தோர் மாகாணத்து அரசர்களே! செஞ்சி தேசத்துராஜன் கெறுவமாக நான் அனுப்பின ஆதாரங்களை அடித்து, ஓட்டி, என்னுடன் யுத்தஞ்செய்யும்படியாக எத்தனித்திருக்கின்றானாம்; ஆதலால், நீங்களெல்லாரும் என்னுடன் கூட்டமாய்ப் படையெடுத்து வாருங்கள்; நான் போய் அவனை ஜெயித்து அந்தத் தேசத்தை உங்களுக்கு வாங்கித் தருகிறேன்; வாருங்கள் அரசர்களே! வாருங்கள் வாருங்கள்.

### தேசாதிபர் விருத்தம்.

மங்கள ஆற்காடாளும் மன்னனே திருமுகத்தால்
எங்களை அழைத்ததெம்மா லிங்கிட்டதிருக்கலாகா
அங்கவனிடத்திற்சென்று அதிர்முரசறைந்தாசன்னை
சங்கையில்லாமற்செய்து சாதித்துவருவோம்வாரீர்.

### வசனம்.

கேளும் பாதுஷாவே! தாங்கள் எங்களை வரவழைத்தது சும்மாயிருக்கப்படாது; நாம் போய் அந்தத் தேசிங்கை வென்றுவருவோம்; இப்போதே வாரும்; அஜரத் நபாபுசாயபே.

## நபாபு செஞ்சியைநோக்கி யுத்தத்திற்கு வருதல்.

தரு: இராகம், பந்துவராளி, ஆதிதாளம்.

### பல்லவி.

வருகிறா ரிதோ பாரீர்—பாதுஷா நபாபு
வருகிறா ரிதோ பாரீர்.

### அநுபல்லவி.

வருகிறார் மருவலர் பொறைகொடா திருச்செஞ்சிக்
கிறைவன் தேசிங்கு பலம், அறிவே னறிவேனென்று,
ஆனை குதிரைகள் தானைப் பலமும்
சேனையுடன் வெகுமான வீரரும்— வருகிறார்.



### சரணங்கள்.

௧. பெரிதாய்ப் பாளயக்காரர் விருதா வீரியம் பேசிக்
கருதி அவனை வெல்ல அரிதா அரிதா வென்று,
அண்ட கோளமும் வெண்டி சாமுக
மண்டலங்களும் விண்டதிர்ந்திட— வருகிறார்.

௨. முடிமன்னர் கொடைமன்னர் விடைமன்ன ரேறி
கொடி முடியன் தேசிங்கை நொடியிற் கொல்வோமென்று,
சத்த சாகரம் வத்தி சோர்ந்திட
வெத்திமுரசு சமதிர்த்து சார்ந்திட— வருகிறார்.

௩. தாரணி புகழுஞ் செஞ்சித் தேரனிதன் தேசிங்கை
சேருடன் செயித்து நாளும் சீருடன் வருவோமென்று,
பூரி சின்னமும் பேரி காளமும்
வாரிபோல வெகு வீர சேனமுடன்— வருகிறார்.

### நபாபு விருத்தம்.

சங்கராபரணியாற்றில் சார்ந்திருதினங்களாக்க
இங்கொருசெய்திகாணேனும் ஏதுவேயெனச்சுபங்கி
அங்கவனூரிற்கொள்ளை யடித்திட்டாலவனுமுள்ளம்
பொங்கியேவருவானென்றான் அப்படிபுரிநீயென்றார்.

### வசனம்.

அகோ கேளும் மாகாணத்தலைவர் சிரோமணியாகிய சுபங்கிராஜனே! சங்கராபரணி ஆற்றின்கரையிலே நமது தண்டுவந்திறங்கி இரண்டு நாளாயிற்று; இந்த இரண்டு நாளாகியும் யாதொரு சமாச்சாரமும் காணோம்; இதென்ன ஆச்சரியமென்றார்.

### சுபங்கி படைகளுக்குச்சொல் விருத்தம்.

கனகமழ்மாலைமார்ப நாரியின்மொழிதப்பாமல்
செதியுடன்வருவீரித தியிஷத்திலேயவன்னா
திரைகடல்வளர்ந்தாற்போலே சென்றுநாம்கொள்ளைசெய்ய
வருவீர்நம்படையேயென்று வல்லமையாய்நடந்திட்டானே.

### சுபங்கி நபாபுக்குச்சொல் வசனம்.

சலாம் சலாமையா ஆற்காடு சுபா நபாபே! கொட்டிக்குல்தான் தேசு, கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சியல்லவா? ஆதலினால், அவனுடைய ஊரில் கொள்ளையிட்டால் அவன் தானே வருவான்; அப்போது நாம் ஜெயமடையலாமையா அஜரத் நபாபுசாயபே.

### நபாபு வசனம்.

ஆ, ஆ, ஆ, நல்லது அப்படியா? சபாஷ், சுபங்கி! அப்படியே உன் இஷ்டப்படி செய்.

## சுபங்கிராஜன் தேவனூரில் கொள்ளையடித்தல்.

தரு: இராகம், தோடி. ஆதிதாளம்.

பல்லவி.

சாடினானே சுபங்கியும் சாடினானே.

அநுபல்லவி.

சாடினான் சுபங்கி ராஜன் சாடினான் தேவனூரிலே
வாடியே முகம் குடிகள் ஓடியே மன்னற் குரைக்க— சாடி.

சரணங்கள்.

௧. மன்னவ ருரைத்ததை வஞ்சனை மொழியால் தினம்
தன்னிலே அடங்கிடாமல் மன்னவ ருரைத்த வாய்மை,
தாங்கி புயங்களை வீங்கி சேனையை
டாங்கா யழைத்திவி தோங்கி யுக்கிரமா— சாடி.

௨. வந்தவன் படையைக்கூவி இந்த ஊரினில் குடிகள்
சிந்தையில் மகிழ்வாய்த் தேடி சேர்த்ததில் படைத்து வைத்த,
பூஷணம் பணிகளும் காசும் நிறைகளும்
வேணதுசெய்யென ராஜவைத்தட்டனேமிக— சாடி.

௩. இந்தப்படி சொல்லிட்டுச்செய்ய அந்தவூர்க் குடிகளெல்லாம்
சிந்தையிற் பயந்தன்னடி வந்ததோ வென்ன சுபங்கி,
செஞ்சி ராஜனும் அஞ்சி வந்தேனே
கெஞ்சினால் விடு வெஞ்சினத்தென்று— சாடி.

## சுபங்கிராஜன் கொள்ளையிட்ட செய்தியைக் குடிகள் தேசிங்குராஜனிடம் முறையிட வருதல்.

பொதுவிருத்தம்.

கொள்ளைதான்சுபங்கிசெய்யக் குடிகளெல்லாருங்கூடி
அவ்வியேயிந்தசெய்தி அரசனுக்குரைப்போமென்று
மெள்ளவேகுடிகளெல்லாம் வெய்யகொலைப்பூனைக்கஞ்சும்
கிள்ளைபோலலறிசெஞ்சிக் கிறைவன்முன்வருகின்றார்.

வசனம்.

அகோதெப்படியென்றால், சுபங்கிராஜனவன் தேவனூரைக் கொள்ளையிடவும், அவ்வூரிலுள்ள குடிகளெல்லாம் பூனைக்கஞ்சிய கிளிகளைப்போல் சுபங்கிராஜனுக்குப் பயந்து, செஞ்சிதேசத்தை நோக்கி, தேசிங்குராஜனிடம் குடிகள் வருகிறவிதங்காண்க.



தரு: இராகம், தன்யாசி. ரூபகதாளம்.

பல்லவி.

குடிகள் வந்தாரே—தேவனூர்
குடிகள் வந்தாரே.

அநுபல்லவி.

குடிகள் வந்தாரே சுபங்கிராஜனும்,
கொள்ளை யிட்டசெய்தி
மெள்ளச் சொல்லிக்கொள்ள— குடிகள்.

சரணங்கள்.

௧. தலையிற் குல்லா சரிகைப் பாகை
சாலுவையும் மறந்தே அவர் மெய்யினில்
விலையுயர்ந்திடு கலை விடுத்தவர்
நிலை தாழ்ந்துடல் குலை குலைந்திட— குடிகள்.

௨. காதினிற் பெரிய கடுக்கனும் விட்டு
கையினிற் கடியும் கலையுமும் சொர்ண
டாபினுள்முதல் குறையில்லா திருந்
தந்தரமாய் வந்த விசனத்த் கயர்ந்து— குடிகள்.

௩. தேவேர் நகம்பெண்டு சேடிகளுடன்
மாடும் பணிகளும் விடுவல் கொள்ளைபோக
வாடும் மெய்களின் மனக்கிலேசந்தன்னை
நாடித் திருமென்று தேசிராஜனிடம்— குடிகள்.

குடிகள் விருத்தம்.

செஞ்சியை யாளுகின்ற தீரனேமன்னவர்க்கு
அஞ்சியெபுராவைபோல அடியர்கள்தம்மையெல்லாம்
பஞ்சுபோல்பறக்கவிட்டு பார்ப்பதும்அறமோபாக
தஞ்சமென்றடைந்தோமிந்த தருணத்தில்காத்திடு

வசனம்.

அகோகேளும் ஐயா தேசிங்கு மஹாராஜனே! சுபங்கிராஜன் எங்களைப் பஞ்சுபோல் பறக்கும்படி அடிக்க அவனுடைய கைக்கு இரையாய் விட்டு விட்டு, தாங்கள் பராமுகமாய் இருப்பது தர்மமா? தேவரீர் தாங்கள் அப்படி யிராமல், சரணாகதியென்றடைந்த அடியாரை இத்தருணத்தில் பாதுகாத்திடவேண்டும் மஹாராஜனே.

தேசிங்குராஜன் விருத்தம்.

தேவனூர்தனிலென்றும் செழித்துவாழ்குடிகளோநீர்
ஆவலாய்வருவதென்ன அதிலோர்சடைமங்காண்டும்
எவ்வியேவருஞ்சத்துருக்கள் தன்பயமற்றிருக்க
தீவிரமாகவந்த செய்தியையுரைசெய்வீரே.

வசனம்.

அகோகேளுங்கள் தேவனூரில் சுகஜீவியாய் வாழ்கின்ற குடிகளே! அதில் ஒருபாகனு செலுத்திக்கொண்டு, சத்துருக்களுடைய பயம் கொஞ்சமேனும் இல்லாமலிருந்தீர்கள், இப்போது கனமுறங்கண்ட பசுவைப்போல் ஆவலாய் இவ்விடத்தில் வந்தகாரணம் யாது? இதைச் சீக்கிரத்தில் சொல்லுங்கள் குடிகளே.

## குடிகள்வந்து தேசிங்குராஜனிடத்தில் முறையிடுதல்.

---

தரு : இராகம், புன்னாகவராளி. அடதாளம்.

கண்ணிகள்.

க. அய்யமையா செஞ்சிக்கரசே உன்பாத தஞ்சம்
ஆதரவுண்டாத் தின்னேர மாருயாய் எங்களுக்கொஞ்சம்.

௨. பெண்டுபிள்ளை சிறைபோச்சு குண்டையும் அத்துடன் போச்சு
மீண்டிடத் தடிபட்டும் மண்டையில் வந்தோம் காரும்.

௩. பூணும் பணிகளுங் கொள்ளை வேணமட்டுமே போச்சு
கோணிடாம நம்முட ராஜவத்தடனே வாரும்.

௪. வேதநிபேர் கொண்டாடுமென்ற உத்தம துரையே பரி
சுத்தனே ஆண்டிடி விந்த ரத்திசைபுங் கீர்த்தி புண்டு.

### தேசிங்குராஜன் விருத்தம்.

வாதைவேசெய்தானென்று வருத்திடுங்குடிகளே நீர்
எதக்கும்அஞ்சவேண்டாம் இனியிந்தகூளாத்திற்சென்று
ஆதலன்தன்னையடித்து அதாகதப்படுத்துவேனென்று
நீதியேகுடிகளுக்கு உரைத்தபின்னதுசெய்வார்.

வ ச ன ம.

அகோகேளுங்கள் குடிகளே ! அந்தச் சுபங்கிராஜன் உங்களை வருத்தப் படுத்தினானென்று சொன்னீர்கள்; நல்லதாகட்டும், நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நான் இந்தநேரத்திலேபோய் அவனைத் தவிடுபொடியாய்ச் சிதறஅடித்து சிட்சைசெய்வேன்; நீங்கள் அஞ்சவேண்டாம் குடிகளே.

### இதுவுமது விருத்தம்.

மந்திரிராம்சிங்கு மன்னனேலட்சுமணசிங்கு
தந்திரவாதிகளோநாலும் சாத்துதலுணர்வாய்க்கேட்பீர்
வந்தபோர்குடிகள்சொன்ன வார்த்தைக்காய்மோவுத்கானை
இந்தவோர்க்ஷணத்திற்குள்ளே இவ்விடத்தழைப்பிப்பீரே.

வ ச ன ம்.

அகோகேளுங்கள் ராம்சிங்கு லட்சுமணசிங்கு ! யான் சொல்லுகிற வார்த்தையைச் சற்று பாராமாரயோசனையோடுகேட்க் கேளுங்கள். நமது தேவனூரிலிருக்கிற குடிகள்வந்து முறையிட்ட செய்தியை மோவுத்கான் சாபிடத்தில் சொல்லவேண்டியிருப்பதால், அவனை அதிசீக்கிரமாக இவ்விடத்தில் அழைத்து வரும்படியாகச் செய்வீர்கள் மந்திரிமார்களே,



## தேசிங்குராஜன் முதலாம்முறை ஸ்ரீரங்கநாதனைப் பூசித்தல்.

---

### பொதுவிருத்தம்.

வருந்தியகுடிகளுள்ளம் மகிழ்ந்திடவுரைத்தேமந்திரி
திருந்துமன்முகத்தைநோக்கி சீக்கிரமாய்மோவுத்கானை
பரிந்தழைத்திடுவீரென்றே பரந்தாமனடியிற்சிந்தை
பொருந்தியேதுதிக்கலுற்றான் புனிதன்தேசிங்குராஜனே.

வ ச ன ம்.

அகோஇதெப்படியென்றால், குடித்தனக்காரர் மனவருத்தத்தை நல்ல வசனங்களால் நீக்கி, மந்திரிமாரை நோக்கி: வழுதாவூர் மோவுத்கான் சாயபை ஒருநிமிஷத்தில் இங்கே வரச்செய்வீர்கள் மந்திரிமார்களேயென்று உத்தரவுசெய்துவிட்டு, அரண்மனைக்குள்ளேபோய் ஸ்ரீரங்கநாதனை தேசிங்குராஜன் தோத்திரஞ்செய்கிற விதங்காண்க.

### தோடயம்.

சங்குசக்ர வில்கட்க தண்டமெனும் ஐந்துபடை
செங்கையினி லேதரித்த தீனதயாபரனே
மங்களகல்யாணகுண மாதவனே யுந்தனடிப்
பங்கஜ மீதிற்றாழ்ந்து பணிந்துதுதி செய்குவனே.

தரு : இராகம், சஹானா. ரூபகதாளம்.

ப ல் ல வி.

ஓம் நமோ நாராயண [illegible] அடியேன்றன்
வருத்தந்தனைப் பரிகரி.

### அநுபல்லவி.

காமதந்தனைப் போக்கும் தக்கவருளுண் டாக்கும்
பாமரனெனைப் போனாப்பதகறதனைக்காக்கும்— ஓம்.

சரணங்கள்.

க. நிசாசரட்சக தேவ மானுபரனே—வேலமிட்ட
ஆனைத்துயரை தீர்த்திட்ட செங்காழி யணிபரனே
மோனமுடிவில் நின்றுமெம் தீரதானே—அரியதுயர்கோணும்
ஆனினம் சேர்ந்திட் வேய்ங்குழ லூதிய தீரனே— ஓம்.

௨. மல்லிகை யிருவாக்ஷி புன்னையும்—உயர்ந்த வெற்றை
முல்லையோடும் பூந்துளவமும் மொழிகதிர் பச்சை தன்னையும்
அல்லி செந்தாமரை மாமலர் பின்னையும்—வீசம்வாசம்
நல்லமலர் கொண்டு நான் அர்ச்சித்தேன் உன்னையும்— ஓம்.

## தின்சிங்குராஜன் தேசிங்குராஜனைக் கோபமூட்ட வருதல்.

### பொதுவிருத்தம்.

மாதவன்பாதபூசை மகிழ்வுடன்செய்துகொண்டு
சாதுடனிருக்குமன்னன் தாயாதிதின்சிங்கு
போதவேநபாபுவந்த புதுமையைச்சொல்லிக்கோபக்கு
ரோதமுண்டாக்கவேண்டி கொப்பெனவருகின்றனே.

### வசனம்.

அதேதெப்படியென்றால், தேசிங்குராஜன் ஸ்ரீரங்கநாதர் பூசையை மனமகிழ்ச்சியாயும் மிக சாதுவாயும் செய்துகொண்டிருக்கும்போது, நபாபு வந்து கொள்ளையிட்ட செய்தியை தேசிங்குராஜனுக்குச்சொல்லி, நபாபுக்கும் தேசிங்குராஜனுக்கும் பகையை உண்டாக்கிவைக்கவேண்டுமென்று நினைத்து, தேசிங்குராஜன் தாயாதியாகிய தின்சிங்குராஜன் வருகிறவிதங்காண்க.

தரு: இராகம், மத்யமாவதி. ஆதிதாளம்.

### பல்லவி.

தின்சிங்கு ராஜன் வந்தான்—வேடிக்கையாக
தின்சிங்கு ராஜன் வந்தான்.

### அநுபல்லவி.

தின்சிங்கு ராஜன் இரு செழிக்கும் செஞ்சியையாளும்
மான்பரன் தேசிங்கு மன்னனைக் கோபமுண்டாக்க— தின்.

### சரணங்கள்.

௧. சிரசினில் முடிதரித்து பூஷித்து மிட்டு
கரத்தில் பட்டயங் கொண்டு கனகப் பணியுந் தொட்டு— தின்.
௨. நுதலில் இருநாமத்தை சதிரா விளங்க யிட்டு
கதிர்போ லொளி ஜொலிக்க அதிக வுல்லாச முடன்— தின்.
௩. தாயாதி தேசிங்கு தனையென்று செஞ்சிநாடு
பாயமாகவே ஆள உளவு நினைத்துக் கொண்டு— தின்.

### தின்சிங்குராஜன் விருத்தம்.

மன்னவ செஞ்சியாளும் மகிபனேபோற்றிபோற்றி
பின்னகர்தனிலாற்காடு நபாபுதன்சேனைவந்து
என்னிலாரொஷ்ட்டுசெய் தரங்கர்கோவிலிற்புகுந்து
பொன்சிலைநிதியெடுத்து போர்செய்யநெருங்கினரே.

### வசனம்.

சரணஞ்சரணமையா தேசிங்குமகாராஜனே! ஆற்காடு நபாபுசேனை வந்து நமது ஊரில் கொள்ளையிட்டதுமல்லாமல், ஸ்ரீரங்கநாதர்கோவி லில் புகுந்து சில பொற்சிலைகளையும் எடுத்துக்கொண்டு, நம்முடன் போர் செய்யவும் நெருங்கிவருகிறார்களையா மகாராஜனே.



## தேசிங்குராஜன் அனுப்பிய திருமுகங்கண்டு, மோவுத்கான் சாயபு தேசிங்குராஜனிடம் வருதல்.

### பொதுவிருத்தம்.

நெருங்கிநின்றசொல்லை நிருபனுஞ்சாதில்கேட்டு
இருசெவிதனில்காரசம் வத்தினப்போலேயிதி
எரியெழமிழுத்துபாலா யெத்தியேசமர்தொடங்கி
நறுவியேவருமுன்மோவுத் கானுமேவருகின்றனே.

### வசனம்.

அதேதெப்படியென்றால், நபாபுசேனை செஞ்சிதேசத்தில் வந்து கொள்ளையிட்டதும், ஸ்ரீரங்கநாதர்கோவிலில் புகுந்ததும், தின்சிங்குராஜன் தேசிங்குராஜன் பூசைமுகத்தில் வந்துசொல்ல, தேசிங்குராஜன் இரு கண்களிலும் அக்கினிப்பொறிபறக்க, உடைவாளை உருவிக் கையிலே பிடித்துக் கொண்டு பூசையைவிட்டு எழுந்திருந்து குதித்தார்! அச்சமயத்தில் வருதா ஞர் மோவுத்கான்சாயபு வருகிறவிதங்காண்க.

தரு: இராகம், மோகனம். அடதாளம்.

### பல்லவி.

முத்தலமும் புகழ் சுத்த ரணசூர,
மோவுத்கான் சாயபு வந்தான்—ஜெயவீர
மோவுத்கான் சாயபு வந்தான்.

### அநுபல்லவி.

மத்த கஜங்களை நெட்டிம் பெதிர்த்திட—
வித்தக சாதுர்ய சித்தன்விகசித— முத்த.

### சரணம்.

நீலவேணியின்மே லேறி—வெகு, நேத்தி யிதுவெனக் கூறி
ஆலகாலம் போற் சீறி—அவன், அடித்தான் குதிரை சவாரி,
அசியுடன் வெகு பசியினால் வரு அக்கினிபோல் வல கயாசய் வேகமாய்,
ஆண்மைப்படை சேனைந்தலை மீதிற்பத்தி வேகத்துடன்
காதத்தொரு நாழிகைக்குள் மோகத்துடன் ராஜற்செதிர்— முத்த.

### மோவுத்கான் விருத்தம்.

மதிமிகர்வதனரூப மன்னவாசலாம்பீரெனவே
அதிவிரைவாய்வழைத்தீர் ஆலஸ்யமியென்னாலிப்போ
கதிதப்பியிங்குவந்த கம்பமைடதனைஜெயித்து
சதிருடன்வருவோமிந்த க்ஷணத்திலிவ்வருகுவேனே.

வசனம்.

சலாம் சலாமையா தேசிங்கு மஹாப்பிரபு! தாங்கள் என்னை அவசரமாய் வரவழைத்து ஆலஸ்யஞ்செய்வதென்ன? தாமதஞ்செய்யாமல் வாரும்; நாம் அந்தச் சத்துருக்களை ஜெயித்துவருவோம், வாரும் வாரும் மஹாப்பிரபு.

தேசிங்குராஜன் விருத்தம்.

போவதுபின்னுகட்டும் புத்தியுமதியில்மிக்க
சேவகநீரனேயென் சினேகிதமோவுத்கானே
பாவமீதென்னகையில் புதக்கொடியிருக்குதித்தை
சாவதானமதாயென்முன் சாற்றுவீர்சரியாய்தானே.

வசனம்.

அகோகேளும் புத்தியிலும் அறிவிலுஞ் சிறந்த எனது சினேகிதனுகிய மோவுத்கான்சாயபே! நாம் யுத்தத்திற்குப் போவது பின்பாகட்டும்; உன் கையிலோ கங்கணமிருக்கிறது, இதென்னபாவம்? இதை எனக்குச் சாவதானமாய்ச் சொல்லவேண்டும் மோவுத்கான்சாயபே.

மோவுத்கான் விருத்தம்.

சாற்றுவதென்னவெங்கள் ஜாதியார்பச்சைபந்தல்
காத்திரமாயிருந்ததால் கட்டும்போதமைதனிலே
பாத்துடன்மனம்மகிழ்ந்து பரிமேல்மேலேறிக்கொண்டு
காத்தெனவந்தேன்வாருங் கடிதுபோய்சமர்செய்வோமே.

வசனம்.

கேளும் ஐயா மஹாராஜனே! யான் சொல்லவேண்டியது என்னவிருக்கிறது? எங்கள் சாஸ்திரவிதிப்படி பச்சைபந்தல் போட்டு சுற்றத்தார், யாவரும் சூழ்ந்திருந்து அரிசிபூ தடவிகட்டப்போனேன், அப்போது உமது ஓலைவந்தது; அதைப்பார்த்து யான் கலியாணத்தை நிறுத்திவிட்டு, குதிரையின்மேல் ஏறிக்கொண்டு காற்றைப்போல் பறந்துவந்தேன்; இதே ஏற்ற சமாச்சாரம், வேறொன்றுமில்லை நீர் வாரும், நாம் போய் யுத்தஞ்செய்வோம் மஹாராஜனே.

தேசிங்குராஜன் விருத்தம்

இப்படியாவும்செய்தி யிருக்கட்டும்மறுதில்மேலும்
ஒப்புள்ள அமச்சரேநீர் ஓடியிக்கணமேசென்றித்
தப்பாராஜனைஅழைத்து அணைட்டியில்தடையில்லாமல்
செப்பமாய்வருவீர்பின்பு சென்றுநாம்சமர்செய்வோமே.

வசனம்

அகோகேளுங்கள் அமச்சர்மார்களே! நீங்கள் சீக்கிரமாய்ப்போய் எனது பிதிய தந்தையாராகிய தோணிமஹாராஜனை அழைத்துக்கொண்டு வாருங்கள்; அதன்பின்பு நாம் போய் யுத்தஞ்செய்வோம் அமச்சர்களே.

மந்திரி, அல்லது கட்டியன் கவி.

தாரணிமகிழும்
தோணிராஜரே
சீருடனுமைஉன்று
மாரனழைத்தார்.



## தேசிங்குராஜன் இரண்டாம்முறை ஸ்ரீரங்கநாதரைப் பூசித்தல்.

பொதுவிருத்தம்.

தந்தைதேரணிராஜேந்திரன் தன்வரத்துதனுப்பி
மூர்த்தவேதனைரக்ஷிக்கும் முராஹரிமாயன்பாதம்
சிந்தையில்நினைத்துக்கொண்டு திவ்வியமலர்களாலே
வந்தனையாகபூஜை மகிழ்வுடன்செய்கின்றரே.

வசனம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குமஹாராஜன் தனது பிதியதந்தையாகிய தோணிமஹாராஜனை அழைத்து வரும்படி ஆளனுப்பிவிட்டு, ஸ்ரீரங்கநாதரைப் பரிசுத்தமலர்களாலே பூசைசெய்கிற விதங்காண்க.

கொச்சகம்.

நான்முகனும் தேவர்களும் நாகருநற் பாவலரும்
நான்மறையு மேதுதிக்க நம் பரம்பொருளே
நானுன்றனைப் பணிய நல்வழியில் சேரும்விதி
ஞானிலத்தை தானளந்த நாரணனேயருள்புரிவாய்.

தரு: இராகம், புன்னாகவராளி. ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவேளை வந்து காரையா—ஸ்ரீரங்கநாதா
இந்தவேளை வந்து காரையா.

அநுபல்லவி.

இந்த வேளை வந்தாளும் சுந்தரமார்ப முகுந்த, உன் அர
விந்த பீடனில் வந்தனைசெய்ய
சிந்தை மகிழ்வோடு வந்து யெந்தனை— இந்த

சரணங்கள்.

க. கோரகர ஹரி ரூபமாயனே—பக்தர்கள் [illegible]
மீதிடா வரமீயும் நேயனே—வாவியில் வந்து
சேருங்கரியுங் காராவுஞ் சமர் செய்ய
வேசாரிகரியும் ஆதாரமாரென
அந்தக்கர வின்சிரம் சிந்திவிழும் படிக்கு
வந்ததந் நேமியில்வென்றகர் தத்தனைவ மார்பா— இந்த

உ. சாதுஜன பரிபால சீலனே—விந்திரை யெனும்
மாதுபுகழ் கல்யாண லோலனே—அன்பனெனும்,
பிரகலாத ஜனைப்புகழ்ந் தோதமொழி
பிசகாதபடி அவன் தானதகாணவே
ஆக்ரோத்துடன் வந்தம்முற்கன் சிரந்தனித்து
சீக்கிரத்தினில் பத்தன்கேட்கும் வரமளித்தீர்— இந்த

௩. அந்நாயிற் சங்காழி புண்டவா—அடியேன் வினை
பஞ்சுறா வரிவேறும் அண்டவா—சகலபரனே,
அங்கனே உக்ரங்களை இரு
மங்கை பேரதும் பங்கனே பெரிய
துதித் திடுவாய் ஒரு பாதகத்துக் குள்ளாகாமல்
பிரமுதல் தொழும் ஹரி மாதவா, கொடுமே ரி—      ஐத்த.

## தேசிங்குராஜன் கொலுவுக்குத் தோணிராஜன் வருதல்.

### பொதுவிருத்தம்.

பூசையைச் செய்துசெஞ்சிப் புலவனிருக்கும்போது
ஆசையாய்மகனையழைக்க அர்ச்சநாதிலோமெனவே
தேசமேபுகழுமன்னன் தோணிமன்னராஜனும்
ராஜன்றன்கொலுவுக்கப்போ நலமுடன்வருகின்றனே.

### வசனம்.

அதோதெப்படியென்றால், தேசிங்குராஜன் ஸ்ரீ ரங்கநாதர்பூசை செய்துவிட்டு கொலுவில் வீற்றிருக்கும்போது, தோணிமகாராஜன் குமாரன் தேசிங்கு நம்மை ஆசையோடு அழைத்து செய்தியை அறியோமென்று, தேசிங்குராஜன் கொலுவுக்குத் தோணிராஜன் வருகிறவிதங்காண்க.

ராகம்: இராகம், சுருட்டி. ஆதிதாளம்.

### பல்லவி.

செஞ்சியில் வெகு கீர்த்தியுடைய மன்னன்
தோணிராஜன் வந்தான், தேசிங்குமுன்னே—      தோணி.

### அநுபல்லவி.

ஆதிப்பொருளா மரங்கர் அரவிந்த பீடத்தில்பூசை
நீதியுடனே செய்யும் திருமகன் தேசிங்கனழைக்க—      தோணி.

### சரணம்.

பவிரங்கு வருடமாய்ப் பட்டங்கட்டியே செஞ்சி
இன்மையா அரசாண்டு யிருக்கும் தேசிங்குராஜன்
தனி அமைச்சராலே சமுகத்தில் வரும்படி
என்னையழைத்திட்ட செய்தி யிதுவயோயிருக்கு காரோண,
யேதோ காரணம் தோன்றாதே யவருடன்
யாதோ நீ யறி யாதே சொல்மனம் மருவியே
நீருடன் அறியெனா மரசந்தன்—      தோணி.

### தேசிங்குராஜன் விருத்தம்.

ஐயனேபோற்றிபோற்றி அடியன்சொல்கேளிரேந்தன்
தையலான் ராணிதன்னை சமுகத்திலழைத்திராகுல்
உய்யவேஅவள்தன்னோடு ஒருமொழியினைவிசண்ட
செய்யவேபோறேனுந்தன் திருவடிசரணந்தானே.



### வசனம்.

சரணஞ்சரணமையா என் பிறியதந்தையே! என் பட்டத்தாராணியாரை இப்போது என்முன்பாக அழைத்துவரும்படி செய்யும்; அப்படிச் செய்வீரானால், நான் அவளோடு ஒரு வார்த்தை பேசிவிட்டு யுத்தத்திற்குப் போய் வருவேன் ஐயா.

### தோணிராஜன் விருத்தம்.

சண்டைதானென்பதென்ன சங்கதியெனக்குநன்றாய்
விண்டிடச்சொல்வாயிந்த மேதினிதனில்யென்றாலும்
பண்டைநாள்பகைகாம்மீதில் பாரதிலொருவரில்லை
சண்டிதமாய்போர்வந்த காரணமுரைசெய்வாயே.

### வசனம்.

கேளும் அப்பா என் புத்திரசிகாமணியாகிய தேசிங்கே! சண்டைக்குப்போறேனென்று சொல்லுகிறாயே! அதென்ன சமாச்சாரம்? உலகத்தில் நமக்குப் பகைவர்கள் ஒருவருமில்லை; அப்படியிருக்க, அகஸ்மாத்தாய் சண்டை வந்தகாரணம் என்ன? இதையெல்லாம் எனக்கு விஸ்தாரமாய்ச் சொல்லாயப்பா மகனே.

### தேசிங்குராஜன் விருத்தம்.

சாதகங்கேட்கவந்த தந்தையேபோற்றியந்த
பாதகம்உமக்கேன்தேவி பசுங்கிளிராணிதன்னை
நீதமாயிட்டிப்போ நிமிஷத்திலழைத்தால்தானம்
மாதுடன்வினவிசீக்கிரமவன்சமர்செல்கின்றேனே.

### வசனம்.

சரணஞ்சரணமையா என் பிறியதந்தையே! யான் யுத்தத்திற்குப்போகிறேனென்ற பாதகம் உமக்கு என்னத்திற்கு? இந்த நிமிஷத்திலேயே என் பட்டத்தாராணியாரை அழைப்பித்தால், அவளுடன் இரண்டொருவார்த்தை பேசிவிட்டு யுத்தத்திற்குப் போய்வருவேன்; செலவுதந்தனுப்பும் எனது ஐயாவே.

### தோணிராஜன் விருத்தம்.

நல்லதுமகனேநீயும் ராணியும்பரியுமின்னம்
செல்லுதற்கரியபூசை தோன்றியநாளும்தேவி
நல்லுதாராளும்சண்டை நடக்கின்றநாளும்பொல்லா
அல்லல்சோசுக்ரவார மாகையால்நீபோகொணாதே.

### வசனம்.

கேளும் அப்பா என் புத்திரசிகாமணியாகிய தேசிங்கே! நீ பிறந்ததும் வெள்ளிக்கிழமை, உன் பட்டத்தாராணியார் பிறந்ததும் வெள்ளிக்கிழமை, உன் குதிரை பிறந்ததும் வெள்ளிக்கிழமை, இப்போது நவராத்திரி பூஜாரம்பம் வந்ததும் வெள்ளிக்கிழமை, உன்தேவி புட்பவதியானதினமும் வெள்ளிக்கிழமை, சண்டைநடக்கிறநாளும் வெள்ளிக்கிழமை; ஆதலினால் இன்றைக்கு நீ யுத்தத்திற்குப் போகக்கூடாதப்பா மகனே.

## தேசிங்குராஜனும் தோரணிராஜனும் சம்வாதஞ்செய்தல்.

தரு: இராகம், புன்னாகவராளி. அடதாளம்.

கண்ணிகள்.

௧. தேசி. என்னவார்த்தை சொல்லவந்தீர் என்கோவே—வேலை
எப்படி முடிந்ததேமோ என்கோவே.

௨. தோர. முடிவதென்ன இன்றைக்கு என்மகனே—சண்டை
முடிந்து நடக்கவேண்டாம் என்மகனே.

௩. தேசி. மோசமாய் சபாபுசேலை என்கோவே—வந்து
விழுந்தார் தேவனூரில் என்கோவே.

௪. தோர. கொலைவிட்ட சேனைதன்னை என்மகனே—நாலை
வெல்லலாம் சமர்க்குப்போனால் என்மகனே.

௫. தேசி. அந்தாடு சேனைவந்து என்கோவே—இங்கு
அர்ந்தார் வெற்றிக்கொடியை என்கோவே.

௬. தோர. அடிந்தாலின்றைக்குப் பூசை என்மகனே—நாளை
ஆயுதம் வெடுத்து வெல்லுவோம் என்மகனே.

௭. தேசி. ஆயுதப்பூசையைப் பார்த்தால் என்கோவே—அவர்
அழிந்திடுவார் மோசம்வரும் என்கோவே.

௮. தோர. அப்படி நடக்குமானால் என்மகனே—உனக்
கெப்படி தோனுதோ பாரராய் என்மகனே.

௯. தேசி. சண்டையில் ஜெயமெய்யோ என்கோவே—தேவிமுகம்
கண்டுபோறேன் ராணிதன்னை என்கோவே.

௰. தோர. ஆறுமாதத்தினில் பாதி என்மகனே—நீயும்
ஆச்சது பார்க்கக்கூடாது என்மகனே.

௰௧. தேசி. மறைவாய் திரைக்குள்வைத்து என்கோவே—ஒரு
வார்த்தைதான் வினவிப்போறேன் என்கோவே.

௰௨. தோர. திரைக்குள் பேசலாமென்றால் என்மகனே—இதோ
தீவிரமாய் காளழைப்பேன் என்மகனே.

### தோரணிராஜன் விருத்தம்.

மன்னனே வுந்தன்தேவி மங்கையாள் ராணிதன்னை
கண்ணினால் பார்க்கப்போ நீயும் காணவேகூடாதென்றால்
பின்னமாய்த் திரைமுன்விட்டு பேசலாமென்றுநீதான்
சொன்னதோறபேசகூடியாலே தோகையைவரச்செய்வேனே.

### வசனம்.

கேளும் அப்பா என் புத்திரசிகாமணியாகிய தேசிங்கே! உன்னுடைய பட்டத்துராணியாளை, ஆறுமாதம் நீ கண்ணினால் பார்க்கக்கூடாதென்று விலக்கிவைத்திருக்கிறது; நீயோ திரைபோட்டுத் திரையின் மூலமாய்ப் பேசலாமென்று அபேக்ஷைகொண்டிருக்கிறாய்; அந்த அபேக்ஷைநிறும் பொருட்டு உன் இராணியை வரவழைக்கிறேனப்பா மகனே.



### இதுவுமது விருத்தம்.

நாடகக்கணிகைமாத நங்கையே சொல்லக்கேளீர்
ஏடவிழ்க்குழலாள் ராணி யென்னிருமணியைநீங்கள்
நாடியே பழமொத்து நங்கைமார்புடையேசூழ
நீடியசமுகத்திந்த நிமிஷத்திலழைத்துவாரீர்.

### வசனம்.

அகோ கேளுங்கள் நாடகமாதர்களே! என் அருமை மருமகளை அநேகதாதிமார்கள் புடைசூழ்ந்துவர, என் முன்பாக இந்த நிமிஷத்திலேயே அழைத்துக்கொண்டு வாருங்கள் நாடகமாதர்களே.

### நாடகமாதர் விருத்தம்.

அரசனே அரசரேறே அகமகிழ்ந்துவகையோடு
உரமுடனிருந்த உரைப்படி ராணிதன்னை
திரையுள்பணிகள்பூட்டி சேரிழைமாதர்சூழ
சரசரென்றொருநொடிக்குள் சமுகத்திலழைத்துவாரோம்.

### வசனம்.

சரணஞ்சரணமைய்யா ராஜாதி ராஜனே! நாங்கள் மனமகிழ்ச்சியோடு ஆக்ஞாபித்த பிரகாரம், உமது அருமை மருமகள் இராணியாருக்குச் சர்வாபரண வலங்காரஞ்செய்து, தாதிமார்கள் புடைசூழ்ந்துவர இந்த நிமிஷத்திலேயே அழைத்துவருகிறோம் மஹாராஜனே.

## தேசிங்குராஜன் மூன்றாம்முறை ஸ்ரீரங்கநாதனைப் பூசித்தல்.

### பொதுவிருத்தம்

திருவிளங்கியபொன்மார்ப தோரணிராஜன்தானும்
அருவையை அழையுமென்ன அடவுடன்மாதரேகி
வருகுமுன்தனைரட்சிக்கும் வள்ளல்ரங்கனைவணங்க
கருமலர்கொண்டுசெஞ்சி ராஜனும்நடந்திட்டானே.

### வசனம்.

அகோ தெப்படியென்றால், தோரணிமஹாராஜன் நாடகப்பெண்களைவிட்டுத் தன் அருமை மருமகளை அழைத்துவாருங்களென்று சொல்ல, மாதர்கள் ஓடினார்கள்; அப்படி அந்த மாதர்கள்போய் வருமுன், தேசிங்குராஜன் ஸ்ரீரங்கநாதர்பூசைக்கு உகந்த திவ்ய மலர்களைத் தன் பவித்ரக்கரங்களினால் எடுத்துக்கொண்டுபோய், ஸ்ரீ ரங்கநாதனைப் பூசைசெய்கிற விதங்காண்க.

வெண்பா? / கொச்சகம்.

வாசவனும் நான்முகனும் மாதவரும் வேதியரும்
பாசமுடன் வந்துதொழும் பாரளந்த பதாம்புயனே
வாசமலர் கொண்டுவந்து உன் மலரடியில் பூசைசெய்வேன்
மாசகவிர்த்த தேசிங்கு ராஜன் மாதவனை யெங்கோனே.

தரு : இராகம், தன்யாசி. ஆதிதாளம்.

பல்லவி.

கருடகமனு சரசி ஜநேத்ரா.

அநுபல்லவி

உருவில் மதனு உரக சயனா, கந்த சுந்தர கோவிந்த
திரு வைகுந்த ஹரி முகுந்தா— கருட.

சரணங்கள்.

௧. ராமராமா வீரராமா முகசோமா சார்வபூமா— கருட.
௨. தேவதேவா மூலகாவா ஆதிதேவா எனைக்காவா— கருட.
௩. மணிரூபா திருகோபாலா குணசீலா அனுகூலா— கருட.
௪. பாவநாசா பாலநேசா ஸ்ரீவாசா வேங்கடேசா— கருட.
௫. இந்திரையா நிபமெய்யா ஹரி எனையாள் அப்பனையா— கருட.
௬. இங்கேவாரும் உயர்நிரும் எனைக்காரும் பதந்தாரும்— கருட.

---

## இராணியாரும் அவளது சேடியர்களும் கூடி பந்தாடுதல்.

---

பொதுவிருத்தம்.

மாயவன்பாதபூசை மன்னவன்செய்துகொண்டு
நேயமாயிருக்கும்போது நேரிழைமாதரோடி
ஆயவேஅரசன்செய்தி அறிவிக்குமுன்னேராணி
தாயார்தெந்நமாதர் சகுந்தலையாரிமையாரே.

வசனம்.

அகோதெட்படியென்றால், தேசிங்குமகாராஜன் ஸ்ரீ ரங்கநாதர்பூசை அகமகிழ்ச்சியாய்ச் செய்துகொண்டிருக்கும்போது, காட்டிமாதர்கள்போய் தேரணிராஜன் அம்போடும் இன்போடும் தெரிவிக்கச்சொன்ன செய்தியை இராணியாருக்கு இவர்கள்போய்த் தெரிவிக்குமுன், இராணியாரும் பசுங்கிளியையொத்த மாதரும் பரிசுத்தமாகிய பந்தையெடுத்து, தங்கள் அழகிய செந்தாமரை மலருக்கொத்த கைகளால் வீசியாடும் விதங்காண்க.



தரு : இராகம், மத்தியமாவதி. ஆதிதாளம்.

பல்லவி.

சேடிமார்களே வாரீர்—பந்தாடுவோம
சேடிமார்களே வாரீர்.

அநுபல்லவி.

சேடிமார்களே நாடி பந்தை
விடாமல் கையெடுத் தோடி பரிவுடன்— சேடி.

சரணங்கள்.

௧. கல்லுக்குள் வாராதே மறந்துக் கனத்தைப் பாராதே
அங்கையாற் பந்தை அமுத்திப் பிடியாதே,
அந்தமுற்றிடு பந்தை நீரெடுத்
திந்த மண்டபத்தில் சிந்தை மகிழ்வுடன்— சேடி.
௨. முத்து நகைபடைத்த தோழிகளே என் முன்னுட்டமுந்தோர்த்து
சித்தத்தில் மெத்த ஆயர்முண்டாக்குதென்,
செங்கையிலிருந்து தங்கும்படிமனம்
பொங்கிடாமல் நின் றிங்கேவரவடி— சேடி.
௩. அதென்ன பாபமடி பந்தான தெப்போதும் தவறிவிழுவென்
பாதகமோ முன்செய் பழிபாவமோ தோழி,
பந்து நின்று வுறுத்து கைகளை
எத்திப் பிடிக்கவும் தத்தி விழுகுதடி— சேடி.

இராணியார் விருத்தம்.

அம்புஜபாணியென்னும் அலிலிலவேணியென்னும்
சம்பிரமமிகுந்துயர்ந்த தாதியேசொல்லக்கேளீர்,
அம்பலமானபந்து ஆட்டத்தில்யெத்திகாணேன்
சொம்புடன்மினம்ஓராட்டம் சொக்கட்டான்ஆடுவோமே.

வசனம்.

அகோகேளுங்கள் அம்புஜபாணி, அலிலிலவேணியென்னும் தாதியர்களே! நாம் ஆடுகிற இந்தப் பந்தாட்டத்தில், ஓராட்டமாவது உங்கள்பேரில் பாக்கியாக வைத்து நான் ஆடினதில்லை; எனக்குத் தோல்வியாகிறதேயல்லாது வெலிப்பில்லை; ஆகையினால் மறுபடியும் ஓராட்டம் நாம் சொக்கட்டான் ஆடுவோம் வாருங்கள் தாதியர்களே.

தோழிகள் விருத்தம்.

காரெழுமளகமொத்துக் கயலெனும்கண்மொத்து
மேரெழுநகிலமொத்த மொல்லிடைசொல்லக்கேளாய்
சேருடனுன்மனதிலேநான் நினைத்திடும்படிநாமெல்லாம்
விருடனசொக்கட்டானே விளையாடுவோமே.

வசனம்.

கேளும் அம்மா மேகத்தையொத்த கூந்தலும், சேற்கண்டைநிகர்த்த விழியும், மலையையனைய தனமும், மிருதுவாகிய சொல்லையுமுடைய ராணியாரே! தங்களுடைய இஷ்டப்பிரகாரம் நாம் எல்லாருமாகக்கூடி சொக்கட்டான் ஆடுவோம்; வாரும் அம்மா ராணியாரே.

## இராணியாரும் அவரது சேடியர்களுங்கூடி பகடையாடுதல்.

பொதுவசனம்.

அகோதெப்படியென்றால், இராணியாரும் அவரது சேடியர்களுங்கூடி பகடையாடுகிற விதங்காண்க.

தரு: இராகம், யமுனாகல்யாணி. அடதாளம்.

பல்லவி.

பரிவாயிவிடத்திருந் தொருமையுடனே நாமும்
பகடையாடுவோம் வாரீர்—தோழிகளே நாம்,
பகடையாடுவோம் வாரீர்.

அநுபல்லவி.

வருவீர் குங்குமம் பச்சை மஞ்சள் கருப்புடனே
சரியுங் காய்கள் தன்னை தடங்கையினி லெடுத்து— பரிவா.

சரணங்கள்.

பதாரம வாடுங்கடி தோழிகளே நீர்
பதாரம வாடுங்கடி,
௧. பதாரம லெடுத்துக்கை பக்குவமாய்ப் போட்டு
கதிதப்பி வருங்காயைக் கணக்காயெடுத்துவெட்டி— பதார.

பனிரெண்டு மூவெட்டுடன் யிருக்கால் அனைத்தும்
பத்தும் கண்டுதேயானால்,
௨. தனதா யிவிடத்தினில் சதுரா காய்களை வெட்டி
குணமாய் சோடுகட்டி குதிக்கும் பழத்தைக்கெட்டி— பனிரெண்டு.

எப்படியும் மானே இந்த ஆட்டந் தன்னை
நானே கெலிக்கிறேனபார்,
௩. தப்பிதமாய் விழ தள்ளாதே பாச்சியாட்டி
ஒப்பாயுனது காயை ஒயில்போகாமலே வாட்டி— எப்படி.

அய்யய்யோ என்செய்வேன் சேடிமாரே நான்
அய்யய்யோ என்செய்வேன்,
௪. அய்யோ மூன்றுடும் பந்தயம் பகடை நேரத்தில்
வையக மளந்த நெடுமால் தயவுகள்ளூறோ— அய்யய்யோ.

———



## தேசிங்குராஜன் அனுப்புவித்த தாதிவந்து இராயணியாரை அழைத்தல்.

வந்த தாதி பத்தியம்.

காரொத்த குழலுற்று கயலொத்த விழிபெற்று
மதியொத்த முகமுற்ற திவ்விய ரூபி,
அமுதொத்த யிதழுற்ற தரளத்தி னகைபெற்ற
நகமொத்த முலையுற்ற நளின ரூபி,
அரியொத்த விடையுற்று பட்டொத்த வல்குலும்
கமுகொத்த கண்டபெற்ற அதிக ரூபி,
குயிலொத்த குரலுற்ற மயிலொத்த சாயலும்
கம்பொத்த கால்பெற்ற காம ரூபி.

அதிகுண ரூபராணி உன்னடிகள் சரணம்
பதியுயர் செஞ்சியாளு பார்த்திபன் தான்
கதையின்மொழி சொல்லி யழைத்துவரத் தோன்றல் சொன்னார்
சதியே விரைவுடன் சடுதியில் வருகுவாயே.

இதுவுமது விருத்தம்.

மாதருக்கரசியேபொன் வடிவுள்ளராணியேயுன்
மாதலன்செஞ்சியாளும் மன்னன்தேசிங்கிராஜேந்திரன்
மாதுகாரணமோவுன்னை யிக்ஷணந்தழைத்துக்கொண்டு
சாதுடன்வரவேசொன்னார் தாயேநீவருகுவாயே.

வசனம்.

கேளும் அம்மா இராயணியாரே! உம்மை, உமது நாயகர் யாது காரணத்தினாலோ, என்னைவிட்டு உம்மைப் பக்குவமாய் அழைத்து வரும்படி யாய்ச் சொன்னார்; அதைப்பற்றி நான் வந்தேன்; நீர் வரவேண்டும் அம்மா இராயணியாரே.

———

## அழைக்கவந்த தாதியை இராயணியார் வினவுதல்.

தரு: இராகம், சங்கராபரணம். அடதாளம்.

பல்லவி.

அழைத்த விவரமென்னடி—சேடியே என்னை
அழைத்த விவரமென்னடி.

அநுபல்லவி.

அழைத்த தென்னடி யென்னை அந்தப்புரத்தைவிட்டு
தழைத்த செஞ்சியில் இனம்செழித்த மாதவ ரென்னை—அழைத்த.

சரணங்கள்.

௧. மன்னர் நிறைசபையில் என்னை வரவழைத்தீ
நின்னகாரண மென்று அன்னையிதைச் சொல்லடி— அழைத்த.

௨. இந்த முகாந்தரங்க ளெத்தனை பணிவிலக்க
சந்தத் தனங்குலுங்க சீக்ரமாகவே யெம்பொற்க— அழைத்த.

௩. சந்தசம்பகி யென்றன் மார்பை மறைத்திட
சேதி யென்னவது நீயுடனே சொல்வாய்— அழைத்த.

தாதி வசனம்.

கேளும் அம்மா இராயணியாரே! உம்முடைய மாமனார் உம்மைப் போய் அழைத்து வரும்படியாய்ச் சொன்னகாரணம் எனக்குத் தெரியாது; நீர் வாரும் அம்மா இராயணியாரே.

## நாரிகளழைக்கவும் இராயணியார் அந்தப்புரத்தைவிட்டு வருதல்.

பொது விருத்தம்.

அன்னமும்நடையிலஞ்ச அருந்ததிகற்பிலஞ்ச
மின்னலும்வடிவிலஞ்ச நிலவேருணர்கொஞ்ச
உன்னிதயிடையாள்ராணி உயர்ந்தபணிகள்பூண்டு
மன்னவன்சமுகம்நாடி மகிழ்வுடன்வருகின்றாளே.

வசனம்.

அதோதெப்படியென்றால், உமது மாமனாரிய தேசிங்குமஹாராஜன் உம்மை அழைத்துவரச் சொன்னாரென்று தாதி இராயணியாருக்குச் சொல்ல, இராயணியார் அந்தப்புரத்தைவிட்டு தேசிங்குமஹாராஜனிடம் வருகிறவிதங்காண்க.

தரு: இராகம், மோகனம். ஆதிதாளம்.

பல்லவி.

வந்தாள் சிங்காரமதுவே— ராணியம்மாளும்
வந்தாள் சிங்காரமாகவே.

அநுபல்லவி.

வந்தாள் சிங்காரமாக வனிதை மார்க ளழைக்க
சிந்தை மகிழ்வாய் ராஜன் திருமுகங் காண்போ மென்று,
ஜெஜெஜெகண ஜெகண ஜெகண
தித்தளங்கு தித்தரிகிட தோமென— வந்தாள்.



சரணங்கள்.

௧. சொர்தியில் இலர்ந்திட்டு நிலவான்னப் பட்டுடுத்தி,
தத்தைமொழி ராணியரும் தாதிமார்கள் புடைசூழ,
திருர்தத் திமிதச் ஜெணுதத் தமித் தளாங்கு
தகதிக ததிங்கிணத் தோமென— வந்தாள்.

௨. நீண்டை வெண்குடைய் சதங்கை யெண்டிசைகளு மதிர
மண்டி கைகொண் மொழியான மாது,
மத்தள தாளம் ஒத்து முழங்க
தத்தளங்கு தத்தரிகிட தோமென— வந்தாள்.

௩. பதியையர்ந்த செஞ்சிச் சதிபணிட்டு சென்று
பதியின் பதத்தைச் சரணமடைவோ மென்று,
தீச்ஜெம் தகஜெம் தரிகிட
ஜெம் தணங்குதகுடு தகதிங்கிணத் தோமென— வந்தாள்.

## இராயணியார் அந்தப்புரத்தைவிட்டு வருகிறவழியில் துர்ச்சகுனங்கண்டு துயரப்படுதல்.

பொது விருத்தம்.

கன்னலைப்பழித்தசெஞ்சொற் கனிதனைப்பழித்தசெவ்வாய்
மின்னலைப்பழித்தராணி மெல்லிமார்புடையேசூழ
மன்னனைக்காணவேண்டி வரும்வழிதன்னில்கண்ட
துன்னிமித்தங்களாலே துயரமாயுரைசெய்வாளே.

வசனம்.

அதோதெப்படியென்றால், தேசிங்குமஹாராஜன் கொலுவுக்கு இராயணியம்மாள் அந்தப்புரத்தைவிட்டு வருகிறவழியிலே துர்ச்சகுனங்கள் கண்டு தோழிமாருக்குச் சொல்லி துயரப்படுகிற விதங்காண்க.

தரு: இராகம், நீலாம்புரி. சாப்புதாளம்.

கண்ணிகள்.

௧. வலியன் வலமாய்க் காகம் வருகுதிடத்தி லிதைப்பீரும்— இதேதோ
வரும்வழி கண்டயெந்தன் மனதுத்தெளிய நீங்கள் கூறும்.

௨. போத்து நரையான் முயல் ஓரிக்கிடம் எதிர் ஓடி— அது
போகுமிடத்தில் பழி யேதோ தெரிந்துரைப்பீர் சேடி.

௩. தலைவிரி தட்டுமட்டை தடபிசன்னுதிபெரு ஆழி— அதை
நிலைதப்பி ஓப்போவென எதிரில் வருகிறார் பாரேதோழி.

௪. செக்கான் விஸ்வக்கியன் முட்டை சுமையும் வருகுதெதிர் நில்லு— இதற்
கொக்கும் நன்மை இன்மைகள் பக்குவமறிந்து நீ சொல்லு.

௫. ஒத்தைக் குரலும் ஞானி கத்தனுங் குரலுங் கேட்டுப் போனபோனால்தற்
கொத்த பலனை யெந்தன் சித்தமறிய நன்று யோது.

௬. பிறந்தகுளம் முந்தியாக பெருந்துறையில் இருந்து இப்போது ராஜன்
பேட்டைகாணவே நாளும் புறப்பட்டு வருவதும் தப்பிதமோ.

௭. பந்தும் பசுவும் பின்று பலிக்கும் சகுனங்களைப் போகுதே—ஐயோ
என்றன் நாயகன் தம்பியெவ்வாறு எப்படி இருக்கிறார் மாதே.

௮. இந்த தீச் சகுனத்தை யெல்லோரும் அறுதியிட ஏது—நீயே
சென்று அரசன் திருமுகத்தைக் காணுவோம் வாடி.

நேர்ழி விருத்தம்:

அன்னையேயெமைரக்ஷிக்கும் அரசியேநாயேனானி
கன்னியேயப்போதியும் கண்டிடுஞ் சகுனமெல்லாம்
உன்னிலைவந்துறுமொரு மனதாயிந்தான்
என்னிராங்கலாயமைக்கு அடவுடனடக்கின்றாயே.

வசனம்.

கேளும் அம்மா இராயணியாரே! இப்போது நீர் கண்ட தூர்ச்சகுனங்களெல்லாம் உம்முடைய மனசுக்கு அனுகூலமாகாது; நீர் ஏகமனமாக ஸ்ரீ ரங்கநாதரை மனதில் தியானஞ்செய்து நடவாரும் அம்மா இராயணியாரே.

## துர்ச்சகுனங் கண்டநிமித்தம் இராயணியார் புலம்பிக்கொண்டு தேசிங்குராஜனிடம் வருதல்.

தரு: இராகம், முகாரி, அடதாளம்.

பல்லவி.

என்ன செய்குவேன் அன்னமே—இந்த விதிக்கு
என்ன செய்குவேன் அன்னமே.

அநுபல்லவி.

என்ன செய்குவேனடி யென்றுமைமாதே நாளும்
கண்ணில் கண்டிடும் இந்த துர்ச்சகுனங்களுக்கு— என்ன.

சரணங்கள்.

௧. முன்செய்த தீவினையோ முடிவான காலமோவென்
வன்சிறை நீங்கிவரும் வழியி-லிப்படி கண்டால்— என்ன.

௨. விதியின் செயலெப்படி விளையுமோ அறியேன் மெய்
அதிருதே யென்றன் மன மலையுதே மெழுகாய்— என்ன.

௩. சேடிமார்களே ராஜன் திருமுகம் காண யெதிர்
நின்று இலையிருக்கும் சோர்வை யென்னமோ யிதற்கு— என்ன.

இராயணியார் விருத்தம்.

மாரனும் மினைதானை வடிவுந்திவ்வியார்ந்த
பிராணபிராணநாதா திருவடிபோற்றிபோற்றி
நெருடனென்னையமைத்து நெடுகீழெலாம் விட்ட
காரியமின்னதென்று கண்டுவிருமாசெய்வீரோ.



வசனம்.

சரணஞ்சரணம் என் பிராணநாயகரே! தாங்கள் என்னை வரவழைத்து நடுவே இரையிட்ட காரணம் என்ன? அதைச்சொல்லும் என் பிராணநாயகரே.

தேசிங்குராஜன் விருத்தம்.

சேருவையற்றரசியே செந்தேனெனுமொழியினளே
அரிவையென்பிராணநாயகி அடவுடனுரைக்கக்கேளாய்
முருவலன் நபாபுமீதில் வன்சமர்செய்யப்போறேன்
விரைவுடன் நீயெனக்கு விடைகொடுத்தனுப்புவாயே.

வசனம்.

கேளும் என் பிராணநாயகி! நான் நபாபுமேலில் யுத்தத்திற்குப் போக வேண்டும்; அதலினால் நீ நல்லமனதுடன் எனக்கு உத்தரவுதந்தனுப்புவாய் என் ஆசைக்குரிய பிராணநாயகி.

## இராயணியார் தேசிங்குராஜனை வினவுதல்.

தரு: இராகம், [illegible], ஆதிதாளம்.

பல்லவி.

என்ன சொன்னீரென் பிராண நாதா—மனது வந்து
என்ன சொன்னீரென் பிராண நாதா.

அநுபல்லவி.

என்ன சொன்னீர் மண்டலத் திறையவர் பணியும் வீர
மன்னவரே உமது மனது மகிழ்ந்திதாமோ— என்ன.

சரணங்கள்.

௧. அரையிலிருந்து என்னைப் பாரும்—வரவழைத்து
இரையை நடுவிலிட்டு சாரும்—சமருக்குப்போக
உரையுமென் றிப்போது நீரும்—எனைக்கலந்து
மருவ மனதுவைத்து வாரும்—உம்மிடமொழி,
காதில் கேட்டவுடனே காதலதிகமாகி
ஏதுந் தோன்றாமல் மனம் வாதைப்படுதென் சாமி— என்ன.

௨. சொல்லுவேன் எனதுமொழி கேளும்—நற்புதுச்செஞ்சி
வல்லமையுடனிருந்து ஆளும்—உகாந்தகாலம்
செல்லலாம் ஒன்றலவோ என்றாலும்—இன்றைக்கு அந்த
மல்லுக்குப் போகவேண்டாம் நீர் தாளும்—ஆயுதபூஜை,
இன்றைக்கிருந்து நாளை நன்னும் படைமேல் சினமி
யன்னி சமருக்குப் போனால் ஒன்றும் குறைவாராது— என்ன.

௩. அடுக்குமோ சுக்ரவாரம் இன்று—ஆயுதம் நாளை
எடுத்து சமருக்கு நீரும் சென்று—போனதேயானால்
முடிக்கா ஆச்சேனைஅவை வென்று—ஜெயம்பெறுவீரே
அடுக்காய் வரலாம் அது நன்று—எந்தேசகாலம்,
சொந்த அரசர்வந்து இத்த மாணியம் வெகு
வெற்றி புருமரசே இந்த மெப்படி தாமோ— என்ன.

### தேசிங்குராஜன் விருத்தம்.

புக்ககினம்பூவையின் போகவேண்டாமென்று
[illegible] வந்த வஞ்சியேசொல்லக்கேளாய்
[illegible] பட்டணமழிக்கக்கண்டும்
[illegible] சொந்தமாய்வெல்லுவேனே.

### வசனம்.

கேளும் என் பிராணநாயகி! இன்றையதினம் சங்கரி புகாரம்ப மாதனிருக்கும் என்னை யுத்தத்திற்குப் போகவேண்டாமென்று சொல்லுகிறாய்; அப்படியே நான் உன் வார்த்தைப்படி போகாமல் [illegible] விரும்பியிருந்தால், [illegible] நம்முடைய பட்டணத்தை நாசஞ்செய்துவிடுவார்கள்; அப்போது [illegible] அந்த நம்முடைய எதிரிகளும் நம்மை அற்பமாய் [illegible] என் பிராணநாயகி.

### இராயணியார் விருத்தம்.

சேனைகள்வெகுவாய்வந்து [illegible]
[illegible] மன்னனே [illegible]
[illegible]
[illegible] செய்யுமே.

### வசனம்.

கேளும் என் பிராணநாயகரே! [illegible] சேனைவந்து நம்முடைய பட்டணத்தை அழித்திடக்கொண்டு சொல்லுகிறீர் அதனால், நான் தங்களிடம் ஒரு விண்ணப்பம் கேட்கிறேன். அதாவது: உலகத்திலுள்ள ஞானவான்களும், பராக்கிரமசாலிகளும், [illegible], [illegible] முண்டானவர்களும், தங்கள் [illegible] பொல்லாங்கை உண்டாக்கத்தக்க [illegible], அந்நாளில் [illegible] பெரியோர்கள் சொல்லுவார்கள் என் பிராணநாயகரே.

---

## இராயணியார் தேசிங்குராஜனை யுத்தத்திற்குப் போகவேண்டாமென்று தடுத்தல்.

தரு: இராகம், அடாணா. ஆதிதாளம்.

### பல்லவி.

இன்னைக்கிருந்து நாளை யோகாம் [illegible]
[illegible]

### அநுபல்லவி.

இன்னைக்கு [illegible] கண்ணாளா [illegible]
[illegible] படை [illegible]
உந்தன் [illegible] வந்தவனைக் கைக்கொண்டு
[illegible] சந்தேகம் [illegible]—இன்னை.



### சரணம்.

தேவரீர் பிறந்தநாளும்—உம்முடைய
பாராஜாரி பிறந்தநாளும்
அடியேனாளும் தேவி பிறந்தநாளும்
மணமும் செங்கோல் செலுத்த அமர்ந்தநாளும்
பாவிநான் ருதுவான நாளும் படைக்கல பூசைநாளும்
இராமர் சண்டைவிந்து ஜெயித்தநாளும்—புகர்,
இன்மாலையிலும் மனதிற் சமர்க்காயுத்த
இனமே விடுத்திந்த தினமே நற்படி செலுத்தி,
தேசத்தில் பாசமுடன் வாசமுள கேசவனை
நேசமுடன் பூஞ்சபுரி மாசகலும் ராஜாதிராஜா— இன்னை.

### தேசிங்குராஜன் விருத்தம்.

ஆகாரமக்கிரமாரம் அமைந்தநாளென்றுசொன்ன
தோகையேயெதிரிவந்து தோன்றியேயுநர்த்தஞ்செய்ய
நாதாகயிருக்கனானை வகையுடன்பார்த்தாலல்ல
தாருமோசுயம்ருப்போக அடக்காய்தந்தனுப்புவாயே.

### வசனம்.

கேளும் என் பிராணநாயகி! இன்றைய நான் ஆகாரதென்று சொல்லுகிறாய்; அப்படி நாம் ஆகாரநாளைப் பார்த்துக்கொண்டிருந்தால், எதிரிகள்வந்து நம்முடைய பட்டணத்தை நாசஞ்செய்துவிடுவார்கள்; அப்படி அவர்கள் செய்யாமல் பாதுகாக்கவேண்டியிருப்பதால், நீ தடை சொல்லாமல் நான் போகுங்காரியம் ஜெயமாகும்படி உன் கையால் தாம்பூலந் தந்தனுப்புவாய் என் பிராணநாயகி.

### இராயணியார் விருத்தம்.

கொத்தவர்பணியுமவீர கோவேதன்பாததஞ்சம்
வெற்றிசேர்அடக்காயென்னை வினவிநீர்குறைவொன்றில்லை
சத்துருதனைஜெயிக்கும் கட்டுக்கையை அடியாளகோ
சித்தமும்மகிழக்காட்டும் திருவடிபோற்றிபோற்றி.

### வசனம்.

சரணஞ்சரணம் என் பிராணநாயகரே! தாங்கள் என்னைத் தாம்பூலந் தரும்படி கேட்டீர்கள்; அதற்கு யாதொரு தடையுமில்லை. யுத்தத்திற்குப் போய்ச் சத்துருக்களை ஜெயித்துவரும்படியான தங்களுடைய செந்தாமரை மலரையொத்த கையை அடியாள் கண்டு மகிழும்படியாய்க் காண்பிக்க வேண்டும் என் பிராணநாயகரே.

### தேசிங்குராஜன் விருத்தம்.

மங்கைநல்லாளேயுந்தன் மனங்களிப்பெய்தவேயென்
அங்கையைப்பார்த்தென்மீது அன்புவைத்தடைக்காயீந்து
பொங்கமாய்விடைகொடுத்துப் போர்செய்யஅனுப்புவித்தால்
சங்கையில்லாமல்சென்று சூரிந்துவருவேன்பெண்ணே.

### வசனம்.

கேளும் என் பிராணநாயகி! நீ என்னுடைய கையைப்பார்த்து என் பேரில் அன்புவைத்து தாம்பூலந்தந்து அனுப்புவித்தால், நான் போய் யுத்தத்தை நிறைவேற்றி வருவேன் பெண்ணே.

## இராயணியார் தேசிங்குராஜனுடைய கையைப்பார்த்துப் புலம்புதல்.

தரு: இராகம், முகாரி. அடதாளம்.

பல்லவி.

இத்தனை அழகுடைய நற்கரன் தன்னைக் கண்ணில்கண்,
டெப்படி அணிந்திருப்பேன் என் பிராணநாதா.

அநுபல்லவி.

சற்போத மேவும் வாயில் நித்தம் சஸ்திருக்கும்
சத்திசை புகழுஞ் சத பத்திர மலரை நிகர்த்த— இத்தனை.

சரணங்கள்.

க. அம்பரீஷன் பிரகலாதன்—விபீஷணன்
சம்பிரமாய்த் தொழும் பொற்பாதன்—ஸ்ரீ ரங்கநாதன்,
நவன் மனதிலுள்ள ஆவலைத் தணிக்கத் திரு
பாவலை யுட னமர்ந்த ஒளிய மலரை யொத்த— இத்தனை.

உ. தேவர்க ளெல்லாருங் கூடி—அவரவர்கள்
சிந்தையில் மகிழ்வாய்ப் பாடி—பதம்பணிந்து,
மாசகற்றுந் தாயேயென்று பாசமுடனே பணிய
நேச வரந்தருந் திரு வாசமலரை நிகர்த்த— இத்தனை.

ங. தாரணி மன்னவர் நிதமும்—அணியாய் வந்து
சிருடன் பணியும் பதமும்—உற்றிடு மதி,
காரனே அழகுயர் மாரனே வலுவில் வீர
ரேறணி புயம்படைத்து இருள்ள என் பிராணநாதா—இத்தனை.

தேசிங்குராஜன் விருத்தம்.

எத்தனைதான்சொன்னாலும் எதிர்மொழியுரைத்தனையே
பத்தியேமயில்வாய்ப்பட்ட பாம்புபோல்அலறுகின்றாய்
சத்தவீரரைமறிக்கத் தோகையற்கடவோஉன்றன்
புத்தியில்மகிழ்வாயென்னை போர்செய்யஅனுப்புவாயே.

வசனம்.

கேளும் என் பிராணநாயகி! நான் உனக்கு எத்தனை, தாம்மை சொன்னாலும் நீ அதற்கெல்லாம் எதிர்வார்த்தை சொல்லிக்கொண்டு, மயில்வாயில் அகப்பட்ட சர்ப்பத்தைப்போல் அலறுகிறாய். சத்தவீரரை யுத்தத்தில் தடுப்பது ஸ்திரீகளுக்கு அழகல்ல; ஆகையால் நீ மனமகிழ்ச்சி யோடு செலவுதந்து யுத்தத்திற்குப் போகச்செய்வாய் என் பிராணநாயகி.

இராயணியார் விருத்தம்.

வீரனேவீரர்க்கெல்லாம் வேந்தனேஅழகில்மிக்க
மாரனேயெனதுபிரானே வல்லபாதுருவின்மைப்பம்
போர்செய்யில்சாயந்தானும் புறமுதுகிலேனாகாது
மார்பினில்காயமானால் மண்டலமதிக்குந்தானே.



வசனம்.

கேளும் என் பிராணநாயகரே! நான் எத்தனையாய்ச் சொல்லியும் நீர் கேளாமல் யுத்தத்திற்குப் போய்வருகிறேனென்று சொல்லுகிறபடியி னாலே, நீர் உம்முடைய மனச்சம்மதியின்படியே போய்வாரும்; அப்படி நீர் போய்வரும்போது யுத்தத்தில் படப்பட்ட காயம் புறமுதுகிலாகாது, மார்பில் பட்டிருந்தால்தான் உலகத்தார் மதிப்பார்கள்; இல்லாவிடில் மதியார்கள். சுகமாய்ப் போய்வாரும் என் பிராணநாயகரே.

தேசிங்குராஜன் விருத்தம்.

ஆரென்றுபார்த்தாயென்னை அன்புள்ளராணிகேளாய்
மேருவில்அரியைக்கண்ட வெங்கரியடங்கியோடும்
வாறுபோல்வந்திருக்கும் மருவலன்சேனைதன்னை
நீறுநீறுயடித்து நிமிஷத்தில்வருவேன்பாராய்.

வசனம்.

கேளும் என் பிராணநாயகி! என்னை நீ ஆரென்று பார்த்தாய்; நான் போய் அந்த நபாபுடைய சேனையை நீறுநீறுயப் போகும்படி அடித்து விட்டு, இந்தநிமிஷத்திலேயே திரும்பிவருகிறேன் பார், என் பிராணநாயகி.

இராயணியார் விருத்தம்.

அடிக்கடிதடுத்தாலுந்தான் அருஞ்சமர்செல்வேனென்று
மடித்திடல்சொல்லுகின்ற சொல்மறுத்திடுவாருண்டோ
படிக்குளென்தொடிப்பலத்தின் பாக்கியமெப்படியோஉந்தன்
வடிப்படைவலிமையெவ்வாறோ மாதுநானேதுசெய்வேன்.

வசனம்.

கேளும் என் பிராணநாயகரே! அடிக்கடி நான் தடுத்துத் தடுத்துச் சொல்லியும் நீர் கேளாமல், யுத்தத்திற்குப் போய்வருவேனென்று ஒரே சாதனையாய் உடல் மடித்துச் சொல்லுகிற சொல்லைத் தடுப்பாரு முண்டோ! ஆயினும் என் மங்கல்யத்தின் பலன் எப்படியோ, உம்முடைய எதிரிகளின் வலிமை எப்படியோ, நான் ஏதும் அறியேன்; இனி நான் என்ன செய்வேன் என் ஆசைக்குரிய நாயகரே.

## இராயணியார் ஸ்ரீரங்கநாதரிடத்தில் மனக்குறைகளைச் சொல்லிப் புலம்புதல்.

பொது விருத்தம்.

தடுத்துரைத்திடினும்ராஜன் சமர்செய்யப்போறேனென்று
துடுக்குடன்சொல்லும்போது தோகையாள்ராணிதானும்
இடிக்கயர்நாகம்போல ஏங்கியேமனதுவாடி
மடுக்கடல்துயில்வோன்பாதம் நண்ணியேபுலம்புவாளே.

வசனம்.

அகோதெப்படியென்றால், இராயணியார் தேசிங்குராஜனை யுத்தத்திற்குப் போகவேண்டாமென்று தடுத்தும் அவர் கேளாமற்போனபடியினாலே

இடிக்குப்பயந்த சர்ப்பத்தைப்போல் இராயணியார் ஏங்கி, மனமாளாது வாடி, கண்கலங்கியிட்டு ஆலிலைமேல் பள்ளிகொண்டிராநின்ற ஸ்ரீ ரங்கநாதரிடத்தில் குறைகளைச்சொல்லி, இராயணியார் புலம்புகிற விதங்காண்க.

தரு: இராகம் எதுகுலகாம்போதி. அடதாளம்.

கண்ணிகள்.

௧. ஐயனே ஸ்ரீ ரங்கநாதா செய்யாள் விளங்கு மார்பா
மைவிழி கேசவா—திருமாலே.

௨. செஞ்சிப் பதியை யாளும் சிறுவன் என் கணவன்
சிந்தைப்படி யாமோ—திருமாலே.

௩. படைக்கலப் பூசைசெய்து படையெடுக்க லாமென்று
பள்ளிப் பணவி புரிந்தேன்—திருமாலே.

௪. தடித்த மருவலன்மேல் சமர்செய்ய ரேமனதாய்
முடிக்காய் செல்கிறே னென்றார்—திருமாலே.

௫. ஆகாத நாள் தன்னி லரும் பாவி நவாப் கூட
போனாம் பலனிதுவோ—திருமாலே.

௬. விதியா லிழைத்த செயலைக் கூடவி யிருந்தாலும் நீர்
சதிசெய்ய லாமோ ஐயோ—திருமாலே.

௭. சத்துருவை என் கணவன் சங்கிக்க வரவே உன்
சித்தத்திலே நினைப்பாய்—திருமாலே.

௮. எத்தனைத் துயர்வந்தாலும் கர்த்தனே உன் பாத மல்லால்
வைத்தொருவர் துணை யறியேன்—திருமாலே.

---

## இராயணியார் புலம்பிக்கொண்டு அரண்மனைக்குப்போனபின், தேசிங்குராஜன் ஸ்ரீரங்கநாதனைத் துதிசெய்தல்.

பொது விருத்தம்.

பலபலவிசாரமெய்யவிப் பாவையும்புலம்பிக்கொண்டு
விலேசமாய்மனையிற்சேர்ந்து கேவலமிருக்கும்போது
நலமுள்ளசெஞ்சியாளும் நாதன்தே சிங்குமன்னன்
மலைவளர்ரங்கர்பாதம் வணங்கி துதிசெய்வாரே.

வசனம்.

அதோதெப்படியென்றால், இராணியார் ஸ்ரீ ரங்கநாதரிடத்தில் குறைகளைச்சொல்லிப் புலம்பிக்கொண்டு அரண்மனைக்குப் போனபின்பின்னர், தேசிங்குமஹாராஜன் ஸ்ரீ ரங்கநாதனைத் துதிசெய்யும் விதங்காண்க.

கொச்சகம்.

பச்சரவில் பள்ளிகொள்ளும் நாராயண முகுந்தா
மெச்சியுனை யான்பணிய மேவுமலர் மங்கையெனும்
லட்சுமியின் மார்பிலங்க நற்கெருடன் மீதிலிவண்
இட்சணமே வரமளித்து மீட்டருள மெய்க்கோனே.



தரு: இராகம், தன்னியாசி. ஆதிதாளம்.

பல்லவி.

வந்தா தரிசித்தருள்வாய்—ஸ்ரீ ரங்கநாதா
வந்தா தரிசித்தருள்வாய்.

அநுபல்லவி

வந்தா தரிசித்தருள் வடவேங்கடத்தில் வாழ், கோ
விந்தா பரமவைகுந்தா பாதாரவிந்தா,
யிச்சையாய்ப் பணிவிடை மெச்சவே செய்திட
நச்சரவணைமிசை யிட்சணம் வேகமாய்— வந்தா

சரணங்கள்.

௧. ஆலிலைத் துயில்நாதா—என்னைப், பாலிக்க லாகாதா
மேலா தேவர்களெல்லாரும் உன்னை நம்பினேன்
நாலுமறைகளுக்கு மூலமாகிய சோதி,
நாதா விநோதா அரியே இப்
போதே வருக முகுந்தா விரைவினில்— வந்தா.

௨. தண்டமிழ்த் துதிப்பானே—அநுதினம், தொண்டர்களுக் கிதனே
கொண்டல் நிகர் மேனியனே புண்டரீக பாணியனே
அண்டர்கள் துயரகற்றும் விண்டுவே கெருடன் மீதில்,
வந்தே வரமது தந்தே ஆண்டிடும்
சிந்தையில் மகிழ்வுடனெந்தனை யிப்போது— வந்தா.

௩. நந்தநந்தா முகுந்தா—ஹரிகோ, விந்தா திருவை குந்தா
செந்தாமரை யுதித்தத் திருமார்பினி லிலங்க
அந்த சயனந்தன்னை அகற்றி உன் பாதமலர்,
அடியிணை துதிசெயு மடியவன் மனபயம்
இடியக் கெருடனேறி னொடியிற் பரிவுடனே— வந்தா.

---

## ஸ்ரீரங்கநாதர் கெருடவாகனத்தின்மீது தேசிங்குராஜன்முன் பிரத்தியக்ஷமாய் வருதல்.

பொதுவிருத்தம்

தேசிங்குராஜன்தானும் ஸ்ரீரங்கநாதர்பாதம்
ஆசையாய்ப்பூசைசெய்து அடவுடனிருக்கும்போது
நேசமாய்அலமேல்மார்பில் நின்றிட கெருடனேறி
வாசமாயரங்கநாதர் வரசன்முன்தோன்றுவாரே.

வசனம்.

அதோதெப்படியென்றால், ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்டநாயகராகிய ஸ்ரீ ரங்கநாதர், தேசிங்குராஜன் பூசைக்கிரங்கி கெருடவாகனத்தின்மீது பிரத்தியக்ஷமாய் வருகிறவிதங்காண்க.

ராகம்: பூரிகல்யாணி. ஆதிதாளம்.

பல்லவி.

ஜெகத்தில் புகழ்படைத்த மகத்தான செஞ்சியில் வாழும்
ஸ்ரீ ரங்க நாதர் வந்தார்—வேடிக்கையாக,
ஸ்ரீ ரங்க நாதர் வந்தார்.

அநுபல்லவி.

இகத்தில் பணிபவற்கும் சுகத்தைத் தருவதன்றி
மிகுத்தப் பதிவிலென்றுஞ் சுகித்திருக்கச் செய்யும்,
கௌஸ்துப மணிதார மேவு மார்பினில் திரு
தொழுதிருந்திட அணிஅரி மீதினில்— ஜெகத்தில்.

சரணம்.

சென்னியிலணிநவ மணிமகுடந் துலங்க
செவியினிற் றிகழொளிக் குண்டலமிரும் பிலங்க
பொன்னெழில் வடிவுடன புருவிழியுந் துலங்க
பூமகள் மருவிய மார்பிற் பொருடை யிலங்க,
பொருந்திய தங்க வளைகொள் கரத்தினில்
சங்க மருங்கில் விளங்—சொழுந்தயில்,
புயங்களை வஜ்ர மிளிர்கள் பலந்தையிருள
வளைமுமுகளில் ஒளிபடா வருமதாகி,
மாளிகைத்தேசிங்கு மகிழ்ந்திட
தேசமாத நெறியின்று உரைத்திட— ஜெகத்தில்.

---

## கெருடவாகனத்தின்மீது ஸ்ரீரங்கநாதர் வரவும், தேசிங்குராஜன் கண்டு துதிசெய்தல்.

ராகம்: [illegible] ஆதிதாளம்.

பல்லவி.

சரணஞ் சரணமையா—ஸ்ரீ ரங்கநாதா
சரணஞ் சரணமையா.

அநுபல்லவி.

அருண கிரணம்போ லாகுஞ் சோதிப் பிரகாச
திருவடியையென்னை யிந்த தருணத்தில் காத்து ரக்ஷி—சரணம்.

சரணம்.

அண்ட ரண்ட பகிரண்ட மெய்யடியவர்
உண்டோராசியையில் மிகுக,
கண்டுயன்றிடும் விண்ணிலே யிந்த
கொண்டாடுவந்தே னிவை—உத்தமனை,
பதந்தொழுது பணிபவன்
[illegible] அருளைவேண்டும்
காதலா ஊரோபமைக்கஞ்சு



வராத்தினில் கொடுத்து மானங்கெடாமல் காத்த
ஞான சொரூபா ஹரி— சரணம்.

தேசிங்குராஜன் விருத்தம்.

கஞ்சனையுதைத்தபாதா கனசகடுதைத்தபாதா
நஞ்சினைமோடித்தபாதா நன்னிலமளந்தபாதா
செஞ்சிலம்பணிந்தபாதா செய்யபங்கயபொற்பாதா
அஞ்சனையாரும்பாதா மலரடிபோற்றிபோற்றி.

ஸ்வாமி விருத்தம்.

சிந்தையிற்பரிவோடென்னைத் தேடியேபூஜைசெய்து
வந்தனையுடனிருக்கும் மன்னனேசொல்லக்கேளாய்
விந்தையாயுனக்குமிப்போ வேண்டியவரங்களென்ன
சந்தேகமின்றிஎன்முன் சாற்றுவாய்சாற்றுவாயே.

வசனம்.

கேளும் அப்பா பக்தசிகாமணியாகிய தேசிங்கே! நீர் நம்மை ஆசையாய்ப் பூசைசெய்து அழைத்தகாரணம் என்ன? இப்போது உனக்கு வேண்டிய வரங்கள் என்ன? அவைகளையெல்லாம் நீ நம்மிடத்தில் சந்தேகமின்றி சொல்லப்பா சொல், பக்தசிகாமணியாகிய தேசிங்கே.

தேசிங்குராஜன் விருத்தம்.

செய்தபத்தனுக்கிரங்கி தெரிசனந்தந்துகாத்த
அய்யனேநபாபுசேனை அடங்கலும்வந்துரொஷ்டு
செய்கின்றனஞ்சமர்தொடங்கி வென்றதால்உலகுள்ளோரென்
கைபலம்பார்த்தபின்பு கழல்தந்தாரக்ஷிப்பாயே.

வசனம்.

சரணஞ்சரணம் ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்டநாயகா! ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! அண்டினபேரை ஆதரித்திடுகின்ற தீனதயாளமூர்த்தி! கடைசியுங்கடையேனாகிய அடியேனுடைய தபத்திற்கிரங்கி காக்ஷி தரவந்த ஐயனே! ஆற்காடு நபாபுசேனை நம்முடைய தேசத்தில்வந்து அதிக ரொஷ்டு செய்கிறார்கள்; ஆகலால் நான் அவர்களோடு யுத்தஞ்செய்ய வேண்டும். அப்படி நான் யுத்தஞ்செய்து உலகத்தார் என்னுடைய கைப்பலத்தைப் பார்த்தபின்பு, தேவரீர் தாம் தம்முடைய அருட்பிரகாசத் திருவடியைத் தந்து ரக்ஷிப்பதே அடியேன் தேவரீரைக் கேட்கும்படியான வரம்; ஈதன்றி வேறொன்றில்லை பக்தவற்சல மஹாப்பிரபு.

ஸ்வாமி விருத்தம்.

வீராதிவீரமுள்ள வேந்தர்க்கும்பலமுள்ளோர்க்கும்
சூரானபடையுள்ளோர்க்கும் கோபமே அதிகமென்பார்
ஆராலுமடக்கொணாத ஆண்மையைப்படைத்தவீரா
பாராள்வாய்நாளைக்கந்த படைமுகத்தேகுவாயே.

வசனம்.

கேளும் அப்பா பக்தசிகாமணியாகிய தேசிங்கே! வீராதி வீரமுள்ள அரசருக்கும், அதிக பலமுள்ளோருக்கும், சேனைகள் அதிகமுள்ளோருக்கும் கோபம் அதிகமென்று ஜகத்தில் சொல்லுவார்கள்; ஆதலினால் நீ உன்

கோபத்தை விடுத்து இன்றையதினம் யுத்தத்திற்குச் செல்லாமல் நாளைய தினம் செல்லுவாயப்பா தேசிங்கே.

---

## தேசிங்குராஜன் ஸ்ரீரங்கநாதனைத் தரிசனம் கேட்குதல்.

---

தரு: இராகம், பைரவி. ஆதிதாளம்.

### பல்லவி.

இத்தனைக் கோபமேன் சுவாமி—என்மீது உமக்
கித்தனைக் கோபமேன் சுவாமி.

### அநுபல்லவி.

இத்தனைக் கோபமுமக்கு வுற்றதென்னமோ அறியேன்
சித்தமுவந்து அதிசெய்யும் பக்தனுக் கிரங்கிடாமல்— இத்தனை.

### சரணங்கள்.

க. செருநர படைகள் வெகுவாய், வந்தென்னிடை—
தேசமழித்து பெருவாய்—இறையிடுவது,
குறவியவர்கள் செய்யும் கொஷ்டம் பொறுத்திடாமல்
வரும் குடிகளுக் கென்னவகை சொல்வேனென்மீதில்— இத்தனை.

உ. தடுக்கவும் ஞாயமுண்டோ, ஒன்னலர்படை
சாதிக்க ஒருவருண்டோ—சென்டாயடித்து,
முடிக்க செஞ்சியழித்து முனிந்து முந்தனக்குதக்
கெடுத்தப் படையுடைய கெருவமறிந்துமைக் — இத்தனை.

ங. ஆகில்ப்படி வெறுப்பாய், சொல்வுமக்குத்
தகாதென் மனநெருப்பாய்—இவம்பொருமல்,
வருத்த நற்கெப்போது விசனப்படவும் வேண்டாம்
சாகப் பயந்தால் தீரும் தடைசொல்ல உண்டு உமக்— இத்தனை.

ச. ஒருவரால் வினை தீரும், மனதாரத்து
இருகில்லாமலே தாரும்—அதென்னென்றுலென,
கரபெலந் தன்னையிந்த தரணியோர் கண்டபின்புன்
திருவடி தனையெனக் கொருமையுடனே தாரும்— இத்தனை.

### சுவாமி விருத்தம்.

இன்னைக்கிசமருக்குச்சென்றால் என்விடபதமுனக்கு
கன்னவேதளிப்பேன்செஞ்சிக் காசனுமிருக்கவென்றால்
இன்னைக்குயிருந்துநாளை யேகினால்நலநாள்சென்றென்
வன்னமாம்பதமளிப்பேன் மனப்படிநடந்திடாயே.

### வசனம்.

கேளும் அப்பா பக்தசிரோமணியாகிய தேசிங்கே! இன்றையதினம் யுத்தத்திற்குச் செல்லவென்று இருந்தால், சீக்கிரத்தில் என்னுடைய பதவியை உனக்கு அளிப்பேன்; அல்லது இன்னும் சிலநாள் செஞ்சிதேசத்தை ஆண்டிருக்க மனதிருந்தால், இன்றையதினம் யுத்தத்தை நிறுத்தி நாளைய தினம் போனால் சிலநாள் சென்றபின்னர் என்னுடைய பதவியை உனக்குத் தருவேன். உன்னுடைய மனச்சம்மதிப்படி நடப்பாயப்பா தேசிங்கே.



### பொதுவிருத்தம்.

அரிகரிரங்கர்பாதம் அரசனுங்கண்டுபோற்றி
திருவிலாவரமும்பெற்று சேனையைக்கூட்டிக்கொண்டு
மருவலன்நபாபுமீதில் வன்சமர்செய்யவேண்டி
வருங்கதையினிமேற்சொல்லும் வகையினியறியலாமே.

### வசனம்.

அகோதெப்படியென்றால்; தேசிங்குமஹாராஜன் ஸ்ரீரங்கநாதனைக்கண்டு தெரிசித்து, தனக்கு வேண்டிய வரங்களைப்பெற்று, தன்னுடைய சேனைகளைக் கூட்டிக்கொண்டு, ஆற்காடு நபாபுபேரில் யுத்தத்திற்கு வரப்போகிற கதையை இனிமேல் சொல்லுவோம் சபையார்களே:

-(0)-

# இரண்டாம் பிரிவு.

---

## தெய்வவணக்கம்.

---

### விருத்தம்.

ஆரணுபோற்றிவேதந் தந்தமேபோற்றிஞான
காரணுபோற்றித்தூய கார்வண்ணுபோற்றியின்பப்
பூரணுபோற்றிந்தொல்லைப் புராதனுபோற்றியாதி
நாரணுபோற்றியுந்த னின்னபொற்பாதம்போற்றி.

---

## தேசிங்குராஜன் நபாபு பேரில் யுத்தத்திற்கு ஆயத்தஞ் செய்தல்.

---

### தேசிங்குராஜன் கட்டியனுக்குச்சொல் விருத்தம்.

கட்டியக்காராகேளாய் கடுகவேயிருந்திடாமல்
திட்டமாய்த்தடி எந்தன் சேனைக்குமுதன்மையர்ன
பட்டத்துவாசிதன்னை பணிதியிட்டலங்கரித்து
சட்டமாய்ப்பிடித்துக்கொண்டென் சமுகத்தில்வருகுவாயே.

### வசனம்.

அகோகேளாய்க் கட்டியக்காரா! நீ அதிசீக்கிரமாகப்போய் எனது சேனைகளுக்கெல்லாம் முதன்மையாகிய பட்டத்துப் பாராஜாரிக் குதிரைக்குச் சகல பணிகளும் இட்டு அலங்கரித்துக்கொண்டு வருவாய் கட்டியக்காரா.

### கட்டியன் தரு.

உனர்வுள ராஜே
குணமுள வாசியை
பணிதிகள் பூட்டி
வெகுணமதில் கொணர்வேன்.

வசனம்.

சரணஞ்சரணமையா மகாராஜனே! தங்களாக்ஞாபித்தப் பிரகாரம் அடியேன் தங்களுடைய பட்டத்துப் பாராஜாரிக் குதிரைக்குச் சர்வ பணிகளும் இட்டு இப்போதே அழைத்துவருவேன் மஹாராஜனே.

பாராஜாரிக்குதிரையைப் பார்த்துத் தேசிங்குராஜன் சொல் விருத்தம்.

வாசியேசொல்லக்கேளாய் மருவலர்நபாபுசேனை
மோசமாயிவிடம்வந்து முயிக்குசெஞ்சியையழித்தார்
பாசமாய்நாமும்செல்லுப் படையெனும்பஞ்சுதன்னில்
நேசமாய்நெருப்பையிட்டு நீறாக்கிவருவோமவாராய்.

வசனம்.

கேளாய் எனது பட்டத்துப் பாராஜாரியே! ஆர்க்காடு நபாபுடைய சேனை இவ்விடத்தில் வந்து நம்முடைய செஞ்சிதேசத்தை அழித்தார்கள்; அவர்கள் அப்படிச் செய்தபடியால், நாம் போய் அந்த நபாபுடைய படைகளாகிய பஞ்சியில் நெருப்பையிட்டு நீறாய்விடும்படி தகனித்து வருவோம். வாராய் பாராஜாரியே.

பெர்து கவி.

அவ்வுரை கேட்ட
செய்கிய மாவும்
நிலவிய சிரமங்
கவ்வியின் றறவே.

வசனம்.

அதேதெப்படியென்றால், தேசிங்குராஜன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு பாராஜாரிக் குதிரையானது பூமியை நோக்கித் தலையைக்குனிந்து அழுதுகொண்டு நின்றது. அப்படி அந்தப் பாராஜாரிக் குதிரையானது அழுது நிற்கவும், தேசிங்குமஹாராஜன் மந்திரிகளை நோக்கி என்னசொல்லுகிறாரென்றால்:

தேசிங்குராஜன் மந்திரிகளுக்குச்சொல் விருத்தம்.

பார்த்திரோமந்திரிமாரேயிப் பரிசெய்தமோசந்தன்னை
தோற்றியபடைமேல்சண்டை தொடுத்துநாம்செல்வோமென்று
சாற்றியேஅருகில்வந்தால் தலைசாய்த்தழுவதென்னே
கூற்றுவன்தனக்கேயிவன் கூறவிர்கூறுவீரே.

வசனம்.

பார்த்தீர்களா மந்திரிமார்களே நமது பட்டத்துப் பாராஜாரிக்குதிரை செய்த மோசத்தை. நான் ஆர்க்காடு நபாபுபேரில் யுத்தத்திற்குப் போகவேண்டுமென்றால், பூமியைநோக்கித் தலையைச்சாய்த்து அழுகிறது; எனக்கு என்ன இதனால்? சற்றுசொல்லுங்கள் மந்திரிமார்களே.

மந்திரி விருத்தம்.

அப்படிச்சொல்லப்போமோ அரும்பரிதனைப்போலிந்த
முப்புவிதன்னிலேதான் மூன்றுகாலமுமுணர்ந்த
நற்பெரியோர்களுண்டோ நன்மையாயருகிற்சென்று
இப்பவும்பிதற்றுசொல்ல இதனையேதுவீரே.



வசனம்.

கேளுமையா தேசிங்கு மஹாராஜனே! தாங்களிந்த பாராஜாரிக் குதிரையைப்பற்றி அப்படிச் சொல்லவேண்டாம். இந்த நமது பாராஜாரியைப்போல் முன்னிருந்த உலகத்திலகூட வருங்காலம், சென்றகாலம், நிகழ்காலம் என்று சொல்லப்பட்ட மூன்றுகாலங்களையும் அறிந்த பெரியோர்கள் உண்டா? இல்லை. ஆனபடியால், தாங்கள் நன்மையாகவே அதின் அருகிற் போய் உபசார வார்த்தைகளைச்சொல்லி இந்நேரத்திலேயே போய் வரும் மஹாராஜனே.

## தேசிங்குராஜன் பாராசாரிக்கு உபசார வார்த்தைகள் சொல்லுதல்.

தரு. இராகம், நாதநாமக்கிரியை, அட்டதாளம்.

பல்லவி.

வாசியே கேளாய் — என்தன் மொழி,
வாசியே கேளாய்.

அநுபல்லவி.

வாசியே நாளுமே மோசஞ் செய்வதில்லை
கேசவன் பதத்தின்மேல் ஆசையாய் மொழிகிறேன்— வாசி.

சரணங்கள்.

௧. படை முகத்துக்குச் செல்லப் பரியே உனையழைத்தால் நீயும்
தடைசொல்லுவ துனக்குத்தகுமோ அறமோ இது— வாசி.

௨. வேணபொருளழித்து நாணுமுனை வளர்த்தேன்
தோணும் படையில் ஜெயம் காணுமென் றிருந்தேனே— வாசி.

௩. அந்தச் சமரில் ஜெயம் வந்தா லுனக்கு நானும்
உந்த னுடன் வருவேன் சந்தேகம் நினையாதே— வாசி.

௪. சண்டை ஜெயித்து வந்தால் தங்கக் கொலுசுங் காப்பும்
தண்டைச் சதங்கை தரும் தரிப்பேன் மகிழ்ந் துனக்கு— வாசி.

## தேசிங்குராஜன் நபாபுபேரில் யுத்தத்திற்குப் போகுதல்.

பொது விருத்தம்

இந்தசொல்கேட்டவாசி யேக்கமுற்றுயரம்நீங்கி
முந்தவேஅனுமானித்து மூர்க்கமாய்நடக்கும்போது
மந்தரபுயம்படைத்த வள்ளல்தேசிங்குராஜன்
விந்தையாய்ச்சமர்தொடங்கி விரைவுடனடக்கின்றாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குமஹாராஜன் சொல்லிய வசனத்தை, மந்திரிகளை பாராஜனிக் குறிக்கேட்டு, அதற்கிருந்த பக்கமும் ஆயாரமும் நீங்கி, மூர்க்கமாய் நடந்தது; அப்படி நடக்கவும் தேசிங்குமகாராஜன் ஆற்காடு நபாபுபேரில் யுத்தத்திற்குப் போகிற விதங்காண்க.

## தேசிங்குராஜன் மோவுத்கான் சாயபுக்குச் சொல் விருத்தம்.

மந்திரிவழுதாவூர்க்கு மன்னன்மோவுத்கான்சாயபே
விந்தையாயுனதுநீல வேணியையலங்கரித்து
அந்தமாயுனதுகையின் ஆயுதமெடுத்துக்கொண்டு
வந்திடும்சமர்க்குநாமும் வரிசையாயேகுவோமே.

வசனம்.

அகோகேளும் வழுதாவூரில் வாழும் மோவுத்கான் சாயபே! நீர் உமது நீலவேணியை அலங்கரித்து அதின்மேல் பதிக்கொண்டு கையில் ஆயுதமெடுத்துவாரும்; நாம் நபாபுபேரில் யுத்தத்திற்குப் போகலாம் மோவுத்கான் சாயபே.

## தேசிங்குராஜன், அரசர் மந்திரிகளுக்குச் சொல் விருத்தம்.

அரசரேமந்திரிமாரே அடவுள்ளபடையோகேளீர்
திருவில்லைசமர்க்குச்சென்றால் ஜெயமொருவர்க்கள்பங்கல்ல
இருமையாய்ப்பெண்டுபிள்ளை யெழில்பதிதனிலேயிருப்பீர்
குருதியுஞ்சோறுமுண்ணக் கொண்டவர்வருகுவீரே.

வசனம்.

அகோகேளுங்கள் அரசர்களே, மந்திரிகளே, படைகளே! நாம் யுத்தத்திற்குப் போகிறோம்; அப்படி நாம் போய் யுத்தஞ்செய்யும்போது ஜெயம் ஒருவருடைய பங்கல்ல; ஆதலினால் பெண்சாதி பிள்ளைகள் வேண்டுமென்ற ஆசையுள்ளவர்கள் அவரவர்கள் இருப்பிடத்திலேயே யிருங்கள்; அப்படியல்லவென்று யுத்தத்தில் இரத்தமுஞ் சோறும் தின்னப் பிரியமுள்ளவர்கள், என்னோடு யுத்தத்திற்கு வாருங்கள்.

---

## சகலபடைகளோடுங்கூட தேசிங்குராஜன் நபாபுபேரில் யுத்தத்திற்கு வருதல்.

---

பொது விருத்தம்.

இவ்வகைஅரசன்கூற யிருந்திடும்படைகள்போக
செவ்வைபாயாலர்மைமிக்க திரள்படைகளியுமாவும்
ஒவ்வவேஅழைத்துக்கொண்டு வோங்குமோவுத்கானுந்தானும்
யெவ்வென்றுவருவதாக சீக்கிரமாய்நடந்திட்டாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால், இவ்விதமாகத் தேசிங்குமஹாராஜன் சொல்லவும், யுத்தத்திற்குப் பயந்து போனவர்கள் போக, இரணமுகத்திற்கு அஞ்சாத சில சுத்தவீரரையும் தன் உயிர்த்தோழனாகிய மோவுத்கான் சாயபையும் தேசிங்குமஹாராஜன் அழைத்துக்கொண்டு, நபாபுபேரில் யுத்தத்திற்கு வருகிறவிதங்காண்க.



தரு: இராகம், மோகனம். ஆதிதாளம்.

பல்லவி.

சண்டைக்குப் புறப்பட்டாரையா—தேசிங்குராஜன்
சண்டைக்குப் புறப்பட்டாரையா.

அநுபல்லவி.

அண்டரண்ட பகிரண்ட, மெண்டிசைகளும் நடுங்க,
கண்டபேர்களெல்லாம் பயந்து, சண்டையென்று மெய் யொடுங்க,
கரிகளும் பரிகளும் கிளையுள படைகளும்
திரைகடலொலியெழ குறுகியே வீரகுட்டன்— சண்டை.

சரணம்.

கரிகள்மேல் பரிதன்ன, பரிகள்மேல் கரிதன்ன
காலாள் படைகள் கையில் கனத்த ஆயுதமின்ன
தரையைச் சுமக்கும் நாகம் தானே நிலைதளர்ந்து
தாரையின் குலமுழுதுந்தே தனக்கிட மெங்கே யென்ன,
சந்திர சூரியருந் தான் திசை மாறிட
மூந்திய பேரி நகாறு முழங்கிட
விந்தையா மாதர் வெண் சாமரை வீசிட
சுந்தராபரணச் சோபிதன் கூடிட,
வீரவுதார கெம்பீர பராக்கிரம
சூரன் மருவலர் தீறுசெய்யவே யெண்ணி— சண்டை.

---

## நபாபு தாழநூர் ஏரியை உடைத்துவிட்டதைப் பற்றி, தேசிங்குராஜன் படைத்தலைவரைக் கேட்குதல்.

---

பொது விருத்தம்.

மேஷத்தின்மேல்வியாழன்வரம் மேவும்பாவனையாய்ரோஷத்
வேஷமாய்மன்னன்வரும் விந்தையைபாஷாகண்டு
மோசம்வந்திடுமென்றெண்ணி முன்னதாய்த்தாழநூரில்
வாசயேரியையுடைத்து வரவிட்டான்வழியில்தானே.

வசனம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குமஹாராஜன் ரோஷத்தோடு வருகிறதை பாஷா நபாபுகண்டு, ஏதோ நமக்கு மோசம் வரப்போகிறதென்றெண்ணி, தாழநூர் ஏரியை தேசிங்குராஜனும் அவரது படைகளும் வருகிற வழியில் உடைத்துவிட்டு வெள்ளம் பிரவாகமாய் வரும்படி செய்தான்; இதைத் தேசிங்குராஜன் கண்டு படைத்தலைவரைக் கேட்கும் விதங்காண்க.

## தேசிங்குராஜன் விருத்தம்.

குறுகியபடையேகீழ் குணவமச்சர்களோசிரேகு,
திரமுள்ளமோவுத்கான்சாயபே சேனையோநாமெல்லோரும்
வரும்வழிதன்னிலாறு வந்திடும்சோர்வமென்ன
திரமுடனுரைப்பதன்றி சீக்கிரமாய்நடந்திடிரே.

வசனம்.

அகோகேளுங்கள் படைகளே, மந்திரிகளே, என் அன்பிற்குரிய சிநேகிதரான மோவுத்கான் சாயபே! நாம் வருகிறவழியில் ஏதோ ஒருபிரவாகமான ஆறு வருகிறகாரணம் என்ன? நீங்கள் இதை எனக்குச் சந்தேகமறத் தெளிவாய்ச் சொல்லுங்கள்; அப்படிச் சொல்வதன்றியும், என்னுடன் சேர்மாய் நடந்துவாருங்கள், மந்திரிகளே, படைகளே, என் அன்பிற்குரிய மோவுத்கான் சாயபே.

மந்திரி முதலாயினோர் சொல் விருத்தம்.

இறைவனே நிதானிக்கே யிதுவரைக்குமிடந்தன்னில்
வருவதேயில்லை நாமும் வாரதோசைக்கயர்ந்து
மருவலன் நபாபுசெய்த மகிமையதாரிதன்னை
திருகறவுடைத்துவிட்ட சேதியாய்க்காணுதையா.

வசனம்.

சரணஞ் சரணமையா ராஜாதிராஜனே! இதுவரையில் இவ்விடத்தில் ஒரு ஏரியை நாங்கள் கண்டதேயில்லை; இப்போது வருகிற இந்த ஏரி, மலையார் ஏரி. நபாபு நாம் வருகிறதைப் பார்த்துப் பயந்து இந்த ஏரியை உடைத்துவிட்டான்போலக் காணுதையா மஹாராஜனே.

---

## நபாபுசெய்த மோசத்தை; தேசிங்குராஜன் படைகளுக்கும் இன்னும் மற்றுமுண்டானவர்களுக்கும் சொல்லுதல்.

தரு: இராகம், ஆநந்த பைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

என்னசெய்தான் மன்னரே—பார்சா நபாபு
என்ன செய்தான் மன்னரே.

அநுபல்லவி.

என்ன செய்தான் மனதினில் சின்னமென்று உன்னிடாமல்
பின்னமா ஏரியுடைத்தென் முன்னிலே வருவதாக— என்ன.

சரணங்கள்.

க. மந்திரியவன் சிந்தையில் லெந்தயவை யோசியாமல்
யர்ந்து படை யந்திமுன் அந்தகதி மூர்த்திவர— என்ன.
உ. ஆரபார வீரமா யின்னேரம் நாம் வருகுமோசதை
சேருணதிர் தேரியைச் சீரியோ நதியாய் வர— என்ன.
ங. அம்பரம் வீதியில் வளர் உம்பர்க ளதிசயிக்க
சம்பிரமா நதிகடந்து சொம்புடன் நடப்போம் வாரீர்— என்ன.

தேசிங்குராஜன் விருத்தம்.

ராமலட்சுமணசிங்கு நற்றலைவரேபரியும்நாமும்
ஏமனெனிகர்த்தகிர யெனவிடபடையேகேளீர்



கோமமாய்நதியிரங்கி நீந்தி அக்கரையிற்சென்று
பூமியுமதிர்வதாக போர்செய்வோம்வருகுவீரே.

வசனம்.

ஆ, ஆ, ஆ! என் மனதுக்கிசைந்த ராம்சிங்கு, லட்சுமணசிங்கு, இன்னுமற்றுமுண்டான சேனைத்தலைவர்களே! நீங்கள் யாவரும் நான் சொல்லும் வார்த்தையைக் கேளுங்கள்: இப்போதே நாம் இந்த ஆற்றைக் கடந்து நபாபுடைய சேனைகளையெல்லாம் கொன்று, நபாபையும் கையுந்தல்லாவையும் அடித்து, இன்று பன்னிரண்டு மணிக்குள்ளாக ஆற்காட்டில் வெற்றிக்கொடியை நாட்டிவருவோம்; வாரும் மோவுத்கான் சாயபே.

மோவுத்கான் வசனம்.

அப்படியே போய் வரலாம்; வாரும் மஹாராஜனே.

---

## தனியாய் நபாபுபேரில் யுத்தத்திற்குப்போக, தேசிங்குராஜனை மோவுத்கான்சாயபு உத்தரவுகேட்குதல்.

விருத்தம்.

பார்த்தீரோ ஆற்காட்லெப்பை பண்ணியகுதினாலே
கார்த்திரமாஜர்ஜவீரர் கரியுடனதியில்போனார்
கூத்துவன்போலே நானும் கூடி அப்படைமேல்சென்று
சாத்திகிற்றுணிசெய்வேன் சதிருடனனுப்புவீரே.

வசனம்.

கேளுமையா தேசிங்குமஹாராஜனே! அந்த லெப்பைப் பயல் செய்த குதினாலே நம்மோடுகூடவந்த வீரபராக்கிரம சூரர்களில், ஐந்நூறுபேர் யானை குதிரைகளுடன் ஆற்றிலே முழுகிப்போய்விட்டார்கள்; இனித் தாமதஞ் செய்யாமல் இப்போதே உத்தரவுதாரும்: நம்மையெதிர்த்த சேனைகளையெல்லாம் சிற்றணியாய்ப் போகும்படி செய்துவிட்டு, அந்த நபாபைப் பிடித்தபிடி விடாமல் கட்டிக்கொண்டு ஒரு க்ஷணத்திற்குள்ளாக வருகிறேன்; என்னை அனுப்பிவையுமையா மஹாராஜனே.

தரு: இராகம், நாதநாமக்கிரியை. ஆதிதாளம்.

பல்லவி.

உத்தரவு நீர் கொடுக்க வேணும்—சண்டைக்குப் போக
உத்தரவு நீர் கொடுக்க வேணும்.

அநுபல்லவி.

உத்தரவு நீர் கொடுத்தால் சித்தமாயனுப்பினாலென்
பத்திர மெடுத்துச் சென்று வெற்றியாய் வருவேனென்க— உத்த.

சரணங்கள்.

க. அஞ்சினேன்று நான் வினவும் வார்த்தை—அப்படையென்னும்
பஞ்சின்மேல் நெருப்பிட யிப்போதே—மனது வைத்து,
கொஞ்சமா யொரு மொழிநீர் வஞ்சனையில்லாமல் தந்தால்
செஞ்சிகொள்ளை யிட்டவனை அஞ்சிட சிரம் துணிப்பேன்— உத்த.

உ. அந்தப்பட்டணம் பெண்ணைச் சுமந்து—என்றனுடைய
சிறைதனில் இவிரமாகக் கொண்டு—விருக்குமென்னை,
சந்தோஷமாய் நீயனுப்பி என்றன் வசு பலத்தைப் பாரும்
சந்தேகமிருந்தால் பின்பு சிந்தைசெய மெய்ப்பொருளே— உத்த.

௩. தாதையே மகன் பரிவாய் வந்து—கருத்தில் வெகு
ஒளையாய்க் கேட்கும் வர முவந்து—கொடுத்திடாமல்,
நீ செய்ய யுத்தத்துக்கு நீயோ சமர்க்குப் போக
ஒருவிதமில்லாவிட்டால் எப்போதும் என்றனிர் விடுவேன்— உத்த.

## தேசிங்குராஜன் விருத்தம்.

தனியேநான் சமர்க்குப்போகச் சாத்தியமுத்தர வென்றேன் நீ
மனவியவெனத் துரோகம் வராமோவுத்கான்சாயபே
அவ முடிப்பவனாத்கூட்டிநீயும் நிறைபிள்ளையாளையாலே
அவர்களுமாகச்சென்று அருஞ்சமர் செய்குவோமே.

## வசனம்.

கேளும் மோவுத்கான் சாயபே! நீ தன்னந்தனியாய் யுத்தத்திற்குப் போக வேண்டுமென்று என்னைக் கேட்டுக்கொண்டு உத்தரவு கேட்கிறாய்; நீயோ சிறுபிள்ளை, அவர்களோ வல்லவர்களான சேனைகள்; ஆதலினால் நாமெல்லோருமாகப் போய் யுத்தஞ்செய்யலாம் மோவுத்கான்சாயபே.

## மோவுத்கான்சாயபு விருத்தம்.

அப்படைதனிலெல்லோரும் அருஞ்சமர்செய்தமென்றால்
முப்புவிதன்னிலுள்ளோர் முறைமையில்லாதவரென்றே
மெய்ப்புடன் தனியாய்நானும் மேவியச்சமர்புரிந்து
இப்புவி வென்றுடனே மீள்வேன் அனுமதியளிப்பீரே.

## வசனம்.

கேளுமையா மகாராஜனே! நாமெல்லோருமாகப் போய் யுத்தஞ் செய்து வெற்றியடைந்தால், சொர்க்கமத்திய பாதாளமென்னும் மூன்று லோகங்களிலுள்ளவர்களும், இது அநியாயமென்று அவரவர்கள் மனதில் தோன்றியபடி சொல்லி முறையிடுவார்கள்; ஆதலினால் நான் தனியே போய் யுத்தஞ்செய்து அவர்களை வென்று வருவேன். தேவரீரென்னைத் தடை செய்யாமல் சீக்கிரத்தில் அனுப்பிவையும் மகாராஜனே.

---

# மோவுத்கான்சாயபைத் தனியாய் யுத்தத்திற்குப் போகவேண்டாமென்று, தேசிங்குராஜன் மறுத்தல்.

இராகம். மத்தியமாவதி. ஆதிதாளம்.

## பல்லவி.

நல்ல மொழி புகல்வாய்—மைந்தா தோழா
நல்ல மொழி புகல்வாய்.



## அநுபல்லவி.

நல்ல மொழி புகல்வாய் வல்லாமின் முகம் பார்த்து
சொல்லும் வசனந் தன்னைத் தள்ளாதே மைந்தா— நல்ல.

## சரணங்கள்.

௧. சின்னஞ் சிறிய வயதா—பிள்ளை புலவோனாலே
முன்னே சமர்க்கனுப்பினால்,
மன்னவனென்று என்னை மதிப்பாரோ உலகத்தில்
சின்னஞ் சொல்லாகிறதென்ன செய்குவேன் நீயும்— நல்ல.

௨. காத்திருந் தங்கையைந் தாடனே—மணந்தன்னை
நிறுத்தி வைத்தேனே
சிரித்து முப்புரந் தன்னை யெரித்த ருத்திரனைப் போலவே
பரித்துச் சமர்க்கு என்னை நிறுத்திப் போகிறேனென்று—நல்ல.

௩. இருவரும் ஒர் மனதாய்—அப்படை தன்னில்
குருதிச் சமரில் தானாய்,
வருமாசர்கள் பிரபலமிக்கப் படையை வென்று
இருவரும் ஜெயம் பெறலாம் குறைவொன் றில்லை—நல்ல.

## மோவுத்கான் விருத்தம்.

ஈதென்ன அரசர்கோவே யென்னையச் சமர்க்குநீயிப்
போதனுப்பினால் அன்றிச் சபோகாமல் மறுத்தீரானால்
இதல்லாமல் முன்னென் ஜீவனை விடுவேனிப்போ
சாதுடனென்னை நீரும் தடைசொல்லாதனுப்புவீரே.

## வசனம்.

"கேளுமையா தேசிங்குமகாராஜனே! நீர் என்னை யுத்தத்திற்குத் தடை சொல்லாமல் அனுப்பினால் சரி; அப்படியில்லையென்று தடைசெய்வீரானால், என்னுடைய ஜீவனை உமக்கு முன்பாகப் பிராணத்தியாகஞ் செய்து கொள்ளுவேன்; அப்படி நடவாமற்படிக்கு நீர் சந்தோஷமாய்ச் செலவு தந்தனுப்பும் மகாராஜனே.

## தேசிங்குராஜன் விருத்தம்.

உன்மனக்கிலேசமென்ன ஒருநொடிதனிலேசென்று
நன்மையாய் நீயுமானை கடாமலெதிர்த்தோர் தம்மை
இன்மையாய்வென்று ஜெயம் திசைதனக்கனுப்பிவிட்டு
என்மனம் களிக்க நீயும் மீளவும் வருகுவாயே.

## வசனம்.

கேளும் மோவுத்கான்சாயபே! உன் மனதில் இவ்வளவு வருத்தம் என்னத்திற்கு? ஒரு நொடிக்குள்ளாகப் போய், உன்னை எதிர்க்காமலிருக்கப் பட்டவர்களை விட்டு, உன்னை எதிர்த்து வருபவர்களையெல்லாஞ் ஜெயித்து, மேன் இருக்கப்பட்ட தென்திசைக்கு அனுப்பிவிட்டு, என் மனமானது களிக்க இந்த நேரத்திலேயே வருவாய் மோவுத்கான்சாயபே.

## நாதூர் மீரூசாய்பு முதலானவர்களை மோவுத்கான்சாயபு, யுத்தத்தில் ஜெயங்கிடைக்கவேண்டுமென்று பிரார்த்தித்தல்.

அல்லாஹூநாகூர்மீரா அஹூத்தையேக்காதர்
வல்லிமொலாலிகள் மலரடிபோற்றிசெய்தேன்.
நல்லஆயுதமெடுத்து வாடிப்படைமேல்சண்டை
செல்கிறேன்அடியேன்தானும் ஜெயம்பெறஅருள்செய்வீரே.

தரு: இராகம், இந்துஸ்தான்காப்பி. ஆதிதாளம்.

பல்லவி.

நின்மௌலாலி துவோ—பஞ்சா தேக்கோ, சலாம் லேவோ.

அநுபல்லவி.

நின்மௌலாலி முஞ்சே தேரே கதம் தேக்கோ
மேனத்கர்ரோ பாஷா முஞ்சே தேக்கோ ட்ரேப்கா— நின்

சரணங்கள்.

௧. அல்லா குதா நபி அசேன் உசேன் காதர்
வல்லி மஹம்மதாரு வில்லா பாரா வீமாம்— நின்.

௨. ஜனோ லோகசான் ருப்பர் அஜாத் தேரே கதம்
மைமி சலாம் கர்கா மாஜூகி காலத் நியார்லோ— நின்.

௩. லோபா சட்லோ தோப் காலோ லடு பாக்லோ தல்மியா
கேடாஹித் யாத்தோ பின்லே தோடா சம்மத் மருபுவா— நின்.

## மோவுத்கான் சாயபு தபாபுபேரில் யுத்தஞ்செய்தல்.

பொது விருத்தம்.

அக்கிலேபார்த்தமெத்த அதிகன்மோவுத்கான்சாயபு
புட்கைமேல்கோபத்தோடே போயெதிர்ம்போலே
வாக்கமெசெனத்தைவெனை யுதத்திலமொழியாமிங்கு
மாக்குமைச்சோதமென்று மாட்டுவாலுவாட்டுவாரே.

வசனம்.

அதுகோரெப்படியென்றால், மோவுத்கான் சாயபு தபாபுடைய சேனை களைக் கண்ணினால் உக்கிரத்துடனே பார்த்து, காட்டிலே திரியிற யானைகளைக் கொல்லுகிற சிங்கத்தைப்போலே அதிக கோபங்கொண்டு, சத்துருக்களுடைய படையிற் புகுந்து, ஸ்திமைக்குமைச்சேதம் என்றுசலித்துபொடியாய்ப் போகும்படி மோவுத்கான் சாயபு யுத்தஞ்செய்கிறவிதங்காண்க.



தரு: இராகம், தோடி. அடதாளம்.

பல்லவி.

அடித்தானே வரும் அரும் படைகளை ஒரு
எறும்பெனத் தரையினில் மடித்தானே வீரன்.

அநுபல்லவி.

அடித்துக் கையினில் கத்திப் பிடித்து வரும் படையைத்
தடித்து முகங்கள் தடி கலைத்து மோவுத்கான் தானும்— அடித்.

சரணங்கள்.

௧. செஞ்சிப் பதியை யாளும்—வெகு,
தீரன் உதாரன் கெம்பீரன் தேசிங்கு பதம்
தஞ்சம் பணிய விடைதான்
செஞ்சொலவர் அல்லாவை
அஞ்சிப் பணிந்து எதிரிமிஞ்சி வரும் படைகள்
செஞ்சிப் பதந்திடவே— அடித்.

௨. தாளுங் கரங்களுடனே—அவர்,
தலைகளு முலைகளும் மூலிகைள் காலிகளும்
தோளுங் கைகளுடனே—மூளை குடல்சரிய
முடிக்குங் குலைந்தே யவர்
தானிலப் பணிய வெற்றி
வாளை வீசி வெட்டி— அடித்.

௩. பருந்துங் காகமுடனே—வெகு,
பலபல பறவையும் நல்லகையுங் கூடியே
விருந்து களிப்புடனே—அருமையாய்
செய்யும் பெருவிருந் திதுவென்று
குருவிக் குலங் களித்துப்
பெருஞ்செயத் தினை புன்னை— அடித்.

## சுபங்கிராஜன் மோவுத்கான்சாயபுபேரில் யுத்தத்திற்கு வருதல்.

பொது விருத்தம்.

இப்படிமோவுத்கானு மிகுஞ்சினந்தலைக்கொண்டேறி
மெய்புடன்வாளினாலே வீசிடசேனையெல்லாம்
தப்பறமடித்தலாலே தரியலன்சுபங்கிராஜன்
கொட்டியனமுடிவத்து கோபமாயுரைசெய்வானே.

வசனம்.

அதுகோதெப்படியென்றால், வழுதாவூர் மோவுத்கான் சாயபு தபாபு வைத்தல்லாவுடைய சேனைகளையெல்லாம் வாளினாலே வெட்டி அதஞ்செய்ய, சுபங்கிராஜன் கண்டு கோபத்துடனே மோவுத்கான் சாயபோடே எதிர்த்து யுத்தத்திற்கு வருகிறவிதங்காண்க.

தரு: இராகம், மோகனம். ஆதிதாளம்.

### பல்லவி.

ஆரடா வந் தெதிர்த்த திங்கே—அச்சமில்லாமல்
ஆரடா வந் தெதிர்த்த திங்கே.

### அநுபல்லவி.

ஆரடா வந் தெதிர்த்தாய் நீ, கூறடா வுனது பெயர்
வீரம் நான் அறிவேன் விரதப்போர் செய உன்னாலாகாது—ஆரடா

### சரணங்கள்.

௧. வார்த்தை யெனும் படையிலே—வெகு
தீரனைப் போலே முடியிலே,
வீரியமாய் வந்தா யுந்தன் காரியமறிவேனே னென்
கூரியவாள் கைபிடித்துச் சிரமறுத்தெறிவேன்— ஆரடா

௨. அத்திபன் யென்று சொல்லும்—சேனைகளுனக்
குத்தரவில்லாமலே வெல்லும்,
சக்தி யுண்டோடா வுனக்குப் புத்தியில்லாமலே வந்த
சிற்றறி வுடைய பேயா கத்தியா லுனை யறிப்பேன்— ஆரடா

௩. கந்துகந் தனிலே யேறி—சமர்தொடங்கி
முந்தி வந்தாய் சின மீறி,
எந்த விதத்திலும் உன் சிரசறுத்து பூமியிலே
பந்துபோல் விழச்செய்குவேனே யென்றன் கைப் பட்டாவாலே—ஆரடா

## மோவுத்கான்சாயபும் சுபங்கிராஜனும், யுத்தசம்வாதஞ் செய்தல்.

### பொது விருத்தம்.

சுபங்கியில்வாறுசொல்ல சூரன்மோவுத்கான்சாயபு
தபனன்போல்சீறியுன்னைச் சாடுவேனென்றல்லாவை
ஜெபம்செய்துகையில்பட்டா ரெடுத்துச்சண்டை
சபமோரம்செய்குவோமிச் சமயமிவ்வாவென்றானே.

### வசனம்.

அதோ, எப்படியென்றால், சுபங்கிராஜன் இவ்விதஞ் சொல்லவும், மோவுத்கான் சாயபு சுபங்கிராஜன்மேல் சிங்கத்தைப்போல் சீறி, தனது சமய தெய்வமாகிய அல்லாவைத் தியானஞ்செய்து பட்டாவை கையில் எடுத்துக் கொண்டு சுபங்கிராஜனைச் சண்டைக்குவாவென்று அழைக்க, சுபங்கிராஜனும் மோவுத்கான் சாயபும் யுத்தசம்வாதஞ் செய்கிற விதங்காண்க.



தரு: இராகம், கெண்டாரபி. ஆதிதாளம்.

### கண்ணிகள்.

௧. சுப. ஆரடா வென்று சொல்லி அதட்டி சுபங்கிராஜன்
வீரப் பரிமேலேறி விரைந்து வந்தனனே.

௨. மோ. வந்தவன் தன்னைக்கிட்ட வாவென்று மோவுத்கானும்
கந்துகந் தன்னைத்தட்டி எதிர்த்து நின்றனனே.

௩. சுப. நின்றவன் தன்னுடைய கெதியுமறிந்து சுபங்கி
கொன்றிட வெண்ணி செஞ்சாலி குண்டுகள்தன்னை விட்டானே

௪. மோ. விட்ட குண்டுகள் தன்னை தட்டி வீரன் மோவுத்கானும்
மட்டிவிட்டுப் படையை வதைக்கிறான் வாளாலே.

௫. சுப. வாளால் படைகளெல்லாம் மடிய மனம் சகியா
தாளாமல் பிரம்பிதன்னை விடுத்தனனே.

௬. மோ. விடுத்த பிரம்பி குண்டை தடுத்து மோவுத்கான் பரி
விடுத்துச் சேனையை வாளால் வீழ்க்கொன்றனனே.

௭. சுப. கொன்ற சேனைகள்தன்னைக் கண்டு சுபங்கிவனை
நின்று கொல்லுவேனென்று எதிர்த்து வந்தனனே.

௮. மோ. வந்தவன் தன்னைப்பார்த்து கொந்து மோவுத்கானும்
உந்தனைக் கொல்வேன் விட்டுப்போ ஓடாதே என்றான்.

௯. சுப. ஓடிப்போகாதேயென்று நாடாண்மைக் குரைத்தாய்
வாடா வுனது வாளால் வதைக்கிறேனுன்னை.

௰. மோ. வதைக்கிறேனென்று சும்மா பதைக்காதே உன்னுயிரை
சிதைக்கிறேன் ஓடாதே திடமாகவே நில்லு.

௰௧. சுப. நில்லென்று தெனை புகலக்க வல்லமை யுண்டோ வுனைக்
கொல்லவே விடுத்த பாலா கூர்மையைப் பாராய்.

௰௨. மோ. கூர்மை யறிந்தே னுனைக் கொல்ல நினைவும் என்விட
நேர்மை யறியா நிந்த நிலைவிட்டுப்போடா.

௰௩. சுப. போடாவென் றென்னை யுந்தன் பெண்டுபோலவே எண்ணி
யடா கோட்டிகள் சொன்னா யினி விடுவேனோ.

௰௪. மோ. விடுவேனோ வென்று சும்மா வீரம் பேசாதே உன்னைக்
கடிந்துக் கொல்லுவே னிந்தக் களம்விட்டுப் போடா.

௰௫. சுப. களம் விட்டுப் போடா வென்று கடிந்தே விடுத்தேன் பாலா
தளராதே எதிர் நின்று சண்டை செய்யடா நீயும்.

௰௬. மோ. செய்யென மோவுத்கான் சினந்து பரியை மெள்ள
சைகை செய்யக் காலைத் தலையில் வைத்ததுவே.

## சுபங்கிராஜன் யுத்தத்தில் தோல்வியடைந்தோடுதல்.

### பொது விருத்தம்.

சண்டையிற்பரிதானுனைத் தலையின்மேல்காலைவைக்க
மண்டழல்போலேசீறி வாதுவன்சிரந்தனிக்க
கண்டுதான்சுபங்கிநெஞ்சங் கலங்கிதன்பெருகைகூப்பித்
தொண்டாய்ப்பணியஓர்வாகத் தனித்தனன்மோவுத்கான்தானே.

### வசனம்.

அகோதெப்படியென்றால் மோவுத்கான் சாயபு ஏறிவந்த நீலவேணிக் குதிரையானது, சுபங்கிராஜன் ஏறிவந்த யானையினுடைய தலையின்மேல் தனது இரண்டு கால்களையும் வைத்தமாத்திரத்தில், மோவுத்கான் சாயபு யானைப்பாகன் தலையை அறுத்தான்; அதைக்கண்டு சுபங்கிராஜன் தனது இரண்டு கரங்களையும் சிரமேற்கூப்பி மோவுத்கான் சாயபுக்கு அடியனாகப் பணிய, மோவுத்கான் சாயபு சுபங்கிராஜனுடைய ஓர் கையை வெட்டினான்; இப்படி வெட்டவும், சுபங்கிராஜன் சொல்லுகிற விதங்களாவது.

### சுபங்கிராஜன் விருத்தம்.

என்னநாள்செய்வேனையா யிதுவரைக்குந்தன்வீரம்
தன்னைநானறிந்திடாமல் சாத்தியப்பழுதுவார்த்தை
மன்னனேமனம்பொறுத்து வன்சமர்நிறுத்திநீரும்
என்னையுமனுப்பிவிட்டால் வீட்டேகிப்போவேனையா

### வசனம்.

கேளுமையா மோவுத்கான் சாயபே! நான் தங்களுடைய விருதைப் பாராமல் சொன்ன அவதூறான வார்த்தைகளைத் தாங்கள் மனம் பொறுத்து, இந்த யுத்தத்தை நிறுத்திவிட்டு என்னைத் தேவரீர் அனுப்பிவிட்டால் நான் தங்களுடைய பேரைச்சொல்லிப் பிழைப்பேனையா மோவுத்கான் சாயபே.

### மோவுத்கான்சாயபு விருத்தம்.

அல்லவேசுபங்கிராஜே அரசனென்றுனையழைத்து
வல்லமையுடையோனென்று வரவிட்டான் சமர்க்குபாதகா
மல்லுசெய்தொருகையற்றாய் மனந்தளர்ந்தூர்க்குச்சென்றால்
நல்லதோவிதைக்கேட்போர்கள் நகைமாய்நகைசெய்யாரோ.

### வசனம்.

கேளும் சுபங்கிராஜனே! அந்த உன்னுடைய பாதுஷா உன்னை ஒரு வல்லமையுடைய ராஜனென்று யுத்தத்திற்கு அனுப்பிவைத்தான்; நீயோ ஒரு கையில்லாமல் மனமானது தளர்ந்து உன்னுடைய ஊருக்குப் போகிறாய்; இது உனக்கு நன்மையாயிருக்குமா? அந்த உன் ஊரில் உள்ளவர்கள் உன்னை நகைக்கமாட்டார்களா சுபங்கிராஜனே.

## சுபங்கிராஜன் புலம்புதல்.

தரு: இராகம், முகாரி. அடதாளம்.

### பல்லவி.

ஐயனே நான் ஓடிப்போறேன்—என்னை
ஆதரிக்க வேணும் நீரே.

### அநுபல்லவி.

ஐயனே நானுந்த நாண்மை அறியாமல்
செய்யப் புத்தியால்வந் தையப்பட லானேன்— ஐயனே.



### சரணங்கள்.

௧. எந்தன் சேனை தன்னை நீரும்—ஐய
வெள்ளளவு வைத்துக் காரும்;
உந்தனோடே சமர்வந்து புரிவதற்
கெந்தனாலே யாமோ கொந்துநொந் தேகங்கள்— ஐயனே.

௨. தீவிரமாய் வந்தேனையா—எந்தன்
சேனையெல்லாந் தோற்றேன் மெய்யா,
ஆவிபோகக் கை களந்துப் போச்சுதந்தப்
பாவிப் பேச்சைக் கேட்டுப் பழிக்கானே னிப்போது— ஐயனே.

௩. பார்க்கவந்தே னும்மை தானும்—எந்தன்
பதியிற் போய்ச் சேர்வேனே நானும்,
ஏக்க முடனாளும் பேர்க்கு வரவுமில்லை
சேகரத்திலே என்னைக் காக்கக் கடனுமக்கே— ஐயனே.

### மோவுத்கான்சாயபு விருத்தம்.

அவனியமுடனேயென்கை வாளாயுதத்தாலேகொல்ல
ஞாயமில்லை அரசன்முன் சாத்தியந்தனைக்கைப்போ
எவளவுங்குறைவில்லாம லிருந்தேனுன்னைவிட்டேன்
ஜயமோயிக்களத்தைவிட்டு சடுதியிலோடிப்போடா.

### வசனம்.

கேளடா சுபங்கிராஜனே! உன்னை என் கையிலிருக்கப்பட்ட கரவாளினாலே கொல்லுகிறதற்கு யாதொரு தடையுமில்லை. அரசன் முன்பாகநீ சொன்னதற்கு எள்ளளவுமேனும் குறைவில்லாமல் இந்த நேரத்திலேயே ரணகளத்தை விட்டு சீக்கிரமாக ஓடிப்போடா செத்தப் பிணமே.

## காறுசாயபு மோவுத்கான் சாயபுபேரில் யுத்தத்திற்கு வருதல்.

### பொதுவிருத்தம்

பலருள்ளசபங்கியிந்தப் பாடுபட்டோடிப்போன
நிலைதெரிந்துடல்பதைத்து நெடுமூச்சுவிட்டயர்ந்து
சலமுடன்காறுசாயபு தன்படைக்கூட்டிக்கொண்டு
நிலமதிர்ந்திடவேவந்த நிமிஷத்திற்புறப்பட்டானே.

### வசனம்.

அகோதெப்படியென்றால், இவ்விதமாகச் சுபங்கிராஜன் மோவுத்கான் சாயபினிடத்தில் படாதபாடெல்லாம் பட்டு ஓடிப்போனதை, காறுசாயபு கண்டு உடல்பதைத்து நெடுமூச்சுவிட்டயர்ந்து, தன் ஆனைசேனைப் பரிவாரங்களோடுங்கூட பூமி அதிரும்படியாக அந்த நிமிஷத்திலேதானே, காறுசாயபு மோவுத்கான் சாயபுபேரில் யுத்தத்திற்கு வருகிறவிதங்காண்க

தரு: இராகம், கல்யாணி. ஆதிதாளம்.

பல்லவி.

சண்டைக்கு வந்தவ னாரடா—உன்றன்
தண்ட மடக்கிறேன் பாரடா.

அநுபல்லவி.

சண்டத் தழல்போல் சீறி கண்டத் தலைமா வீரு
அண்டொளுப் படைமீதில் ஒண்டியாய்ப் பரிமீதி— சண்டை.

சரணங்கள்.

௧. தாய்தந்தையரை நீ மறந்து—வாராய்
மாயப் போரும் மெய்மறந்து,
—ய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ வென்று
பேயா சமர்ஜெயிக்க நீயா யிப்படை தன்னில்— சண்டை.

௨. கொல்லத் தெருவினி—லூசிவிற்க
செல்லுமோ நீ கெட்டாய் சீச்சீ,
அல்லா வென்று புலம்பி செல்லா தெதிரியுயிர்
சொல்லா தோடிப்போக சொல்லுகிறேன் பாரிங்கே— சண்டை.

௩. போராத காலத்தி னாலே—நீயும்
போராட வந்தா யென்மேலே,
ஆரடா உனக்கிந்த வீரம் தந்தவன்
கூறடா உனைக் கொல்வேன் பாரடா வெகுவேகத்திலே— சண்டை.

இருவருமறு விருத்தம்.

ஆரடாவொருவனிங்கே அச்சமும்பயமில்லாமல்
நீரலைப்போலேவீசிச் சேனையாம் கடலில்வந்து
ஆரபாரமதாய்நின்ற ஆண்மையும்வீரமெல்லாம்
கீழதீருயடிந்து நிமிஷத்தில்பார்த்தவேனே.

வசனம்.

ஆ, ஆ, ஆ! ஆரடா இங்கே கொஞ்சமாவது அச்சமும் பயமுமில்லாமல் ஒற்றைக்குதிரையின்மேல் ஏறிக்கொண்டு சமுத்திரத்தைப்போல் இந்த எங்கள் சேனையாகிய கடலில்வந்து ஆரபாரஞ்செய்கிறவன்; நீதானா அந்தச் சுபங்கிராஜனை அடித்துத் துரத்திவிட்டவன்? நல்லதாகட்டும்; அந்தச் சுபங்கிராஜனைத் துரத்திவிட்ட உன்னை, நான் இந்த நிமிஷத்திலேயே துரத்தி விடுகிறேன் பாரடா.

மோவுத்கான் சாயபு விருத்தம்.

காத்தவாருமையொன்றில்லை குரங்கேநீதானிங்கே
நிரத்தடனிருப்பதன்றி சேனைகளோடிடாமல்
மதித்துவைத்திருமென்வீர வாளினுன்படைகள்யாவும்
சிரத்தினைத்துணிப்பதன்றி வேறேவாங்குவேனே.

வசனம்.

அடாய் கேள்: காணுசாயபே! உன் பின்னாக வரப்பட்ட உன்னுடைய சேனைகளை மதித்து வைத்திரு: என் வீரவாளினாலே அவர்களுடைய சிரசை வாங்குவதல்லாமல் உன் ஜீவனையும் வாங்குகிறேன். இருக்கட்டும்; சற்று நில்லடா பார்ப்போம்.



## மோவுத்கான் சாயபும் காணுசாயபும், யுத்தசம்வாதஞ்செய்தல்.

---

தரு: இராகம், கெண்டாரம். ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. கா. வாங்குவே னென்று சமர் வேரங்கி வந்தாய் என்படை
தாங்க உன்வச மல்லடா மோவுத்கானே.

௨. மோ. அல்லடா வென்று உரம் சொல்லினும் சமர்செய்ய
வல்லமை உனக்குண்டோடா காணுசாயபே.

௩. கா. உண்டோடா வென்றென் னெதிர் கண்டிதம் பேசாதே
குண்டு வருகுது பார் மோவுத்கானே.

௪. மோ. குண்டு வந்தாலுமதை துண்டுசெய்தே உன் சிரம்
ரெண்டாய்த் துணிப்பனடா காணுசாயபே.

௫. கா. துணிப்பே னென்று மன மிணிப்பு சொல்லாதே நான்
அனுப்பினேன் செஞ்சாவிருண்டைமோவுத்கானே.

௬. மோ. குண்டுகள் வந்தென் காலில் தெண்டனிட் டோலமிட்டு
கண்டே யோடுதுபார் காணுசாயபே.

௭. கா. பாரடா ஆனைபரி வீரரும் சேனைகளும்
சீறி வருகுது பார் மோவுத்கானே.

௮. மோ. வருகு தென்றே மனது பெருமை சொல்லாதே அதின்
சிரங்கள் உருளுவதைப் பார் காணுசாயபே.

௯. கா. பார்த்தயா வென்று வெகு சாத்திரிக்கம் சொல்லாதே
கூத்தவ னென்று பார் என்னை மோவுத்கானே.

௧0. மோ. என்ன சொன்னாலு முன்னை யென்ன பின்னங்களாய்
கொன்று விடுவேன் பாராய் காணுசாயபே.

௧௧. கா. பேசுவா யென்று வெகு ரோஷம் பேசாதே உனை
வீசி யெறிவனடா மோவுத்கானே.

௧௨. மோ. எறிவதும் உன் சிரசை அரிவதும் யெனக்குப்
பெரிதா ஒரு நிமிஷம் காணுசாயபே.

௧௩. கா. ஒருவன் நீ யிங்கே சமர்புரிய வந்தாயுன் சிரம்
அரிவேன் அறிவேனடா மோவுத்கானே.

௧௪. மோ. அரிவே னென்றிங்கே சமர் புரியும் உன் சிரம் வெட்டி
எறிவேன் நிமிஷத்தில் பார் காணுசாயபே.

பொது விருத்தம்.

காணுசாயபுமேல்கொள்ளுங் கரிமுடி மீதில்மோவுத்க்
கான்சாயபுமேல்கொள்ளுங் கலந்துதங்கமுலகைக்க
அனைமேல்சீறுகின்ற ஆளிபோல்மோவுத்கானும்
சேனையோடவனைக்கூட சிரமதைத்துணித்திட்டானே.

வசனம்.

அகோதெப்படியென்றால், காறுசாயபு எதிர்கொண்டுவந்த யானைத்தலை மேல் மோவுத்கான் சாயபுடைய நீலவேணிக் குதிரையானது தன்னுடைய முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கிவைக்கவும், மோவுத்கான் சாயபு யானைமேல் சீறுகின்ற ஆளிபோல் சீறி, காறுசாயபையும் அவனுடைய சேனைகளின் தலையையும் வெட்டினான்; அப்படிவெட்டவும் படைகளெல்லாம் யுத்தகளத்தை விட்டு ஓடுகிறவிதங்காண்க.

---

## படைகள் யுத்தத்தில் முறிந்தோடுதல்.

---

### படைகள் விருத்தம்.

சமரினிற்காறுசாயபு தரியலரிடத்திலேர்த
எமபுரம்சேர்ந்தபின்பு யிருந்திடும்படைகளெல்லாம்
ஏழைமையுமீதமையுமப்பா அனைவருமாயக்கூடி
நமதாயில்லறத்துக்கிப்போ நடப்போம்ஓடுவோமே.

வசனம்.

கேளுங்கள் அண்ணமார்களே! தம்பிமார்களே! நாம் அவரவர்கள் இல்லறத்திற்குப் போய்விடுவோம், நாம் இந்த யுத்தகளத்தில் நின்று யுத்தஞ்செய்ய நம்மால் முடியாது. வாருங்கள் அண்ணமார்களே; தம்பிமார்களே ஓடிப்போய் விடுவோம்.

தரு: இராகம், பரசு. ஆதிதாளம்.

பல்லவி.

ஓடிப்போவோம் வாரீரண்ணமாரே—யிப்போ
உத்தமு சொல்யே வொற்றன் சித்தமறி வீரே.

அநுபல்லவி,

மாடு மனை பிள்ளை பேரமாரே—அன்பாய்
நாடி நமிருந்தால் வெகு சுடுநேரம் கண்டீரே—

சரணங்கள்.

௧. செஞ்சி நகராண்டிடு சிமானே—நாம்
பஞ்சுபோல் பறந்து பதம் கெஞ்ச அடித்தானே
மிஞ்சினு மிங்கே யிருந்தால் தானே—அவன்
கொஞ்சத்தில் விடானென் றுங்கள் நெஞ்சத்தினில் காணே—ஓடிப்.

௨. பாக்ஷாவி ஏவைப்படி நாம் வந்து—இந்த
காயநிகள் கண்டோம் சேனைகள் போச்சதே பறந்து
அச்சு இனிமே லெங்கவன் வந்து—நம்மை ஓர்
முச்சி லடித்துத் தரையில் தேய்த்து விடுவான் முந்தி— ஓடிப்.

௩. ஆற்காடு ஆளுகின்ற மன்னன்—செஞ்சி
ஆண்டாலென்ன சமர் மீண்டாலென்ன அண்ணே
வீரம் பேசிடாமல் முன்னோர் சொன்ன—உப்பு
வித்து உண்டால் சிவன் தனை வைத்திருப்போம் கண்ண— ஓடிப்.



## மோவுத்கான்சாயபு பிரேதமாயிருப்பதைக்கண்டு, தேசிங்குராஜன் புலம்புதல்.

---

### பொது விருத்தம்.

கான்சாயபுதன்னைவெட்டக் கதறியேசேனையோட
தான்பாப்புநாய்க்கன் தன்கைசெஞ்சாலிகுண்டால்மோவுத்
கான்றனைக்கொன்றான்நீல வேணியச்சிரத்தைக்கவ்வி
தேன்மடிமாலைமார்பனான தேசிங்குமுன்னேவைக்க.

வசனம்.

அகோதெப்படியென்றால், மோவுத்கான் சாயபுபேரில் எதிர்த்துவந்த் சேனைகளெல்லாம் முறிந்தோடினதின் பின்னர், தன்னோடு எதிர்த்து யுத்தஞ் செய்வதற்கு வேறே யாரும் இல்லாததினாலே, மோவுத்கான் சாயபு இந்தச் செய்தியை தேசிங்குமஹாராஜனுக்குச் சொல்லுவோமென்று இரணக் களத்தைவிட்டு வருகிறவழியில், அங்கே பாப்புநாய்க்கனென்னும் ஒரு சேவகன் அத்திமரத்தின்மீது பதிவிருந்து தன்கையிலிருந்த செஞ்சாலி குண்டைவிட்டு மோவுத்கான் சாயபைக் கொன்றான்; அதைக்கண்ட நீலவேணிக் குதிரையானது அத்திமரத்தைச் சுற்றிச்சுற்றி வருகையில், அந்தப் பாப்பு நாய்க்கன் கண்டு ஓடிப்போய் விட்டான்; அப்போது அந்த நீலவேணிக் குதிரையானது மோவுத்கான் சாயபுடைய சிரசை வாயினால் கவ்விக் கொண்டு வந்து தேசிங்குராஜனுடைய பாதத்தில் வைத்தது. அதைக்கண்ட தேசிங்குராஜன் நீலவேணிக்குதிரையை நோக்கி: மோவுத்கான்சாயபு எங்கே யென்று கேட்க, நீலவேணிக்குதிரையானது மோவுத்கான்சாயபு விழுந்திருந்த அத்திமரத்தின் அடியிற்போய் நின்றது; அப்படி நிற்கவும் மோவுத்கான் சாயபு பிரேதமாயிருப்பதைக்கண்டு தேசிங்குராஜன் புலம்புகிற விதங்காண்க.

தரு: இராகம், புன்னாகவராளி, ஆதிதாளம்.

11686

பல்லவி.

இந்தவிதிக்கென்ன செய்குவேன்—என் சிநேகிதனே
இந்தவிதிக் கென்ன செய்குவேன்.

அநுபல்லவி.

இந்தவிதிக் கென்ன செய்குவேன் எந்தனைத் தனியவிட்டு
சிங்கம்புலி வெருவி சிறப்பதுபோ லுருண்டு மாண்டாய— இந்த.

சரணங்கள்.

௧. என்னிட திருமுகந் தன்னை—கண்டு உன்மனம்
உன்னி துக்கமதையோ டன்னை
தன்னையும் பந்து ஜனங்கள் தன்னையும் விட்டு மனைப்
பெண்ணையும் பிரிந்து வந்த கண்ணே எந்தன் கண்மணியே— இந்த.

உ. ஏதந்தப் படையி லெல்லையே—இரத்தி நான்
குதித்துச் சென்று அச்சேனையே
சிதைத்து ஒன்றொ டொன்றுகச் சேர ஒட்டாமல் நீயும்
வதைத்து ஜெயமாய் வரும் வழியி லிப்படிக் கானல்— இத்த.

ந. எப்படி நான் தனித்திருப்பேன்—உன்னைத் தவஞ்செய்
தின்றவற் கென்னென் றுரைப்பேன்
இப்படி வருமென்று கனவ் என்னை வந்தால் மனம்
நம்பியே சமர்க்கு முந்தி உன்னை அனுப்பு வேனே— இத்த.

### பொது விருத்தம்.

இந்தமட்டேந்தான்வேத வெழுத்திதாமென்றுமன்னன்
சிந்தைநொந்தவந்தன்னைச் சீக்கிரமாயெடுமாவேறு
சந்தசம்வீரசொர்க்கம் சாரெனன்மந்திரிமாரே
இந்தனன்விலத்திலேதா னெழிந்கோரிசட்டென்றரே.

### வசனம்.

அதோதெப்படியென்றால், தேசிங்குராஜன் மோவுத்கான் சாயபு இறந்ததைக்குறித்துப் பிரலாபித்து ஒருவகையாய்த்தேறி, அவனேறிவந்த அசுவத்தைப்பார்த்து: நீலவேணியே! நீயும் வீரசொர்க்கஞ் சேர்வதே மஹா உத்தமமென்று சொல்லவும், அதைக்கேட்ட அசுவமானது அப்படியே சம்மதித்து வீரசொர்க்கஞ் சந்தோஷமாகச் சேர்ந்தது. அதைக்கண்ட தேசிங்குராஜன் மந்திரிமாரைப் பார்த்து: இந்த இடத்திலேதானே கோரிகட்டி வையுங்களென்றார். அப்படியே கட்டிவைத்தார்கள்.

## மோவுத்கான் சாயபு இறந்துபோனதைப்பற்றி, தேசிங்குராஜன் மந்திரிகளுக்குச்சொல்லித் துயரப்படுதல்.

தரு: இராகம், சௌராஷ்டிரம். அட தாளம்.

### கண்ணிகள்.

க. அய்யையோ வெனக்கொரு ஆதரவைக் காணேன் மந்திரிமாரே—இந்த வெய்யவன் முன்பவி சிசம்வா முனேனே மந்திரிமாரே.
உ. ஆளழகன் மன்னன் அரசத்த மோவுத்கான் மந்திரிமாரே—அவன் வாளின் வலுமையை வருத்திட வருமோ மந்திரிமாரே.
ந. பாதகா அனுப்பும் படைகள் முழுமையும் மந்திரிமாரே—ஒரு மேச்சி லடித்து முறிந்தோடச் செய்தபின் மந்திரிமாரே.
ச. சந்தோஷமாய் வார்த்தைச் சாற்ற வரும்போது மந்திரிமாரே—நவிர்க சுந்தரன் வந்த தன்விதத்தைப் பாருங்கள் மந்திரிமாரே.

### இவ்விதம் துயரப்படும் அரசனைப்பார்த்து மந்திரிசொல் விருத்தம்.

ஐயனேயெமையாட்கொண்டவபோற்றிபோற்றி
மெய்யனேயிதைநினைந்து விசனம்நீர்கொண்டிருந்தால்
உய்யும்வழியென்னகாரு முண்மைக்குநெறிக்குமிந்த
வையகமளந்தோன்வந்து வரமதருளுவாரே.



### வசனம்.

சரணஞ்சரணமையா எமையாதரிக்கும்படியான ஆண்டவனே! தாங்கள் இதைநினைத்து விசனப்பட்டால் நாங்கள் பிழைக்கும்வழியென்ன? உமது உண்மைக்கும் நெறிக்கும் இந்த உலகத்தை மூன்று அடியாலளந்த ஸ்ரீ ரங்கநாதரே வந்து உமக்குவேண்டிய வரத்தைத் தருவார்; தாங்கள் விசனப்படவேண்டாம் மஹாராஜனே.

## தயாபுபேரில் யுத்தத்திற்குப்போக நின்சிங்குவையும், மந்திரிகளையும் படைகளையும் தன்னுடன் வர தேசிங்குராஜன் அழைத்தல்.

### விருத்தம்.

தின்சிங்குராம்சிங்கு அருளலட்சுமணசிங்கு
மான்சிங்குசிரீப்சிங்கு மற்றுள்ளபடையேகேளீர்
கான்புகுமடங்கல்போல் கடுகியிடாமலிப்போ
நானுரைத்தியேவலிதனை நலமுடனிருந்திடீரே.

### வசனம்.

அதோ கேளுங்கள் மந்திரிமார்களே! நாம் வியாகுலப்பட்டுக்கொண்டிருப்பதினால் என்னபலன்? தின்சிங்குவே, ராம்சிங்குவே, லட்சுமணசிங்குவே, மான்சிங்குவே, சிரீப்சிங்குவே, என்று சேனைத்தலைவர்களே! நீங்களெல்லாரும் என்னுடனே வாருங்கள்; நாமெல்லாருமாகச் சென்று அந்தச் சத்துருக்களைச் சங்காரஞ்செய்வோம்; வாரும் வீரர்களே.

தரு: இராகம், காம்போதி. அட தாளம்.

### பல்லவி.

வாரும் வாரும் பாரம்பரிய மறியும் மந்திரிமார்களே—அவரேவாரும் வாரும் வாரும் பாரம்பரிய மறியும் மந்திரிமார்களே.

### அநுபல்லவி.

சேரும் விதியுடன் நான் கூறும் மொழியை யுற்றுப்
பாரும் படையனைத்தும் யாருமொருமிக்கவே— வாரும்.

### சரணங்கள்.

க. பட்டீ மயும் இசைத்து வட்ட மெதிர்த்துச் சண்டை
திட்டமா யதிலே ஓர் கஷ்டம் வராமல் செய்ய— வாரும்.

உ. அரிபத்தர் சிவபத்தர் நெறிமுத்தர் குருசித்தர்
தருமத் தலைவர்கள் தனைவிட்டுச் சார்செய்ய— வாரும்.

ந. அறிஞர்கள் தபசிகள் அபயமென் றவர்களை
மறித்தவரை விடுக்க யுத்தத்தால் படைதொடுக்க— வாரும்.

## தேசிங்குராஜன் இரணக்களத்திற் புகுந்து நபாபுடைய சேனைகளை அதஞ்செய்தல்.

### பொது விருத்தம்.

அத்தருணத்திற்சேனைக் கதிபனைநோக்கியும்
இத்தரையினிலேவெற்றி யெனக்குத்தந்தருளுமென்றே
முத்தலம்பரவும்ரங்கர் முனைநிதானபரவிப்பட்ட
கத்தியைப்பிடித்தெதிர்த்துக் களத்தினிற்புகுந்திட்டானே.

### வசனம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குராஜன் தன் சேனைகளைப்பார்த்து: ஓ, படைவீரர்களே! என் சுற்றத்தார்களே! எதோ பார்ப்போம் உங்கள் வீரத்தைக் காட்டுங்கள், ஸ்ரீரங்கநாதனைத் தோத்திரஞ் செய்யுங்கள், எதிரி சேனைகளை வாட்டுங்கள், கீர்த்தியை நாட்டுங்கள் நான் பாராஜாரியின்மேல் எதி சக்கர் ஆடிக்கிறேன் பாருங்கள் என்று சொல்லி, தேசிங்குராஜன் ஸ்ரீ ரங்கநாதனைத் தியானஞ்செய்து பட்டாவைக் கையிலெடுத்துக்கொண்டு, இரணக்களத்திற்புகுந்து நபாபுடைய சேனைகளை அதஞ்செய்கிறவிதங்காண்க.

தரு: இராகம், தோடி. அடதாளம்.

### பல்லவி.

வெட்டி வெட்டி யெறிந்தானே
சொரிந்தானே, தேசிங்குராஜன்.

### அநுபல்லவி.

பட்டய மீட்டியும் வட்டம் பரிசையும்
செட்டை யெடுத்துக்கொண் டெட்டிக் குதித்துக் கை
தட்டித் தட்டிக் காலை மட்டிப் போட்டுக்கொண்டு
வெட்டும் துண்டிரெண்டாய் மிட்டி வரும் படையை—வெட்டி.

### சரணங்கள்.

க. ஆனைப் படை சிதி—யெழுந் தேரி, அயியால் மெய்க் கிரி
சேனைத் தலைவனை யடுத்து படையா லடித்து நகரயில் படுத்து,
மானைத் துரடரும் புலிபோ லடர்ந்து மாவைத்துரடரும் வலிபோல் துரடர்ந்து
யேனைத்துரடரு மரிபோ லடுத்து
இருபதி னாயிரங் கரியைத் தடுத்து— வெட்டி.

உ. கந்தகக் கூட்டத்தைக் கண்டு—கோபங் கொண்டு, ஊரமெல்லாம் விண்டு
பந்துபோல்விழ்ந்திட வாறு செய்வேன்பாரு என்று கோபஞ்செய்தாறு
வந்திடு மக்கினிபோலவே சிதி வரவரக் கோபமானது மீறி
சிந்து சிந்தாய் விழவே அறுபத் தெட்டு
இரண்டாயிரம் பரிக்காயக் கைப்படைதொட்டு— வெட்டி.

ங. காலாள் படைதனைப் பார்த்து—ஒன்றாகச் சேர்ந்து, இதுவெல்லாம் நான்
கூர்ந்து, ஆனாக்கும் ஊரிக்காகாமல்சேருட்டாமல் யிவதக் கொல்லாமல்
நாலத்திசியினத விடுவேனோ நானென்று தலைதலையாக வுருண்டிடவே
பாலாவும் யீட்டி வளைதடி பரங்குடன்
பட்டயங் கையிலெடுத்து முடுக்குடன்— வெட்டி.



## தாவுத்கானும் தேசிங்குராஜனும் யுத்தசம்வாதஞ் செய்தல்.

### பொது விருத்தம்.

சிந்தையிற்கோபங்கொண்டு தேசிங்குநபாபைப்பார்த்தே
எந்தன்மந்திரியைக்கொன்ற யிரைவனேதென்ன
அந்தவன்மொழியைக்கேட்டே அயர்ந்துளந்தாவுத்கானை
யெதிர்ந்துநல்சமர்செய்யென்று அறிஞன்சிறினானே.

### வசனம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குராஜன் நபாபைப்பார்த்து: என் மந்திரியைக்கொன்ற சூரதீர பராக்கிரம வலசுதல்லாவே, ஓடிப்போகாமல் நில்லென்று சொல்லவும்: அதைக்கேட்ட நபாபு பயந்து அருகில்நின்ற தாவுத்கானைநோக்கி: நீ தேசிங்கைக் கொல்லுமென்ன; அவன் தேசிங்குராஜன் முன்னேவர, தாவுத்கானும் தேசிங்குராஜனும் யுத்தசம்வாதஞ்செய்கிற விதங்காண்க.

தரு: இராகம், மோகனம். ஆதிதாளம்.

### பல்லவி.

தாவுத்கான் சொல்லுதல்.

என்னடா வெகுசாய்த் துள்ளுறாய்—செஞ்சிக் கதிபா
என்னடா வெகுசாய்த் துள்ளுறாய்.

### அநுபல்லவி.

என்ன செஞ்சி நகர்க்கு மன்னனே யிவிடம் வந்து
சின்னமாய்ப் பேசுகிறு யுன்னை நான் கொல்லுவேன் பாராய்—என்ன.

### சரணங்கள்.

தேசிங்குராஜன் சொல்லுதல்.

க. துள்ளிறு லென்னடா செய்குவாய்—தாவுத்தனே நீ
துள்ளிறு லென்னடா செய்குவாய்,
துள்ளலாய்ப் பேசாதே சின்னப் பிள்ளை யென்றுனை நான் புறந்
தள்ளினுலாச்சது பாருள் வள்ளலை யறுவேன் போடா—

தாவுத்கான் சொல்லுதல்.

உ. செய்குவ தறியா யோடா நீ—தேசிங்கு மன்னு
செய்குவ தறியா யோடா நீ,
பையலே உன் சேனையும் நீ அய்யமென் றலறி யோட
செய்கிறேன் கெடிணத்தி லெந்தன் ஐயன் மனமே மகிழ— செய்கு.

தேசிங்குராஜன் சொல்லுதல்.

ங. அறிவே னுனது வீரத்தை—தாவுத்தனே நான்
அறிவே னுனது வீரத்தை,
அறிவே னுனது சிர மரிவே னென்னுடனே நீ
சரியா யிருந்து சமர் புரிய உன்னாலாகுமோ— அறிவே.

## தாவுத்கான் சொல்லுதல்.

௪. வீரத்தை நீயென்ன கண்டாய்—எந்தனுடைய
வீரத்தை நீயென்ன கண்டாய்,
சூரத் தனமாய் வெகு வீரத் தனம் பேசாதின்
னோரத்தி லுன்னை யெமனூருக் கனுப்பி வைப்பேன்— வீரத்.

## தேசிங்குராஜன் சொல்லுதல்.

௫. கண்டாயோ வென்றாம் பேசாதே—தாவுத்தனே நீ
கண்டாயோ வென்றாம் பேசாதே,
கண்டரவம்போ லெழுந்தன் மண்டலந் தனிலே யுன்னை
சண்டனிடஞ் சேரும்படி தண்டு செய்குவேன் பாரடா— கண்டா.

## தாவுத்கான் சொல்லுதல்.

௬. பேசினா லென்னடா செய்குவாய்—அதிகமாய் நான்
பேசினா லென்னடா செய்குவாய்,
பேசுவேன் வாயிடும்பா நான் ஏசுவேன் உன்னிடம் என் நம்
வாசமுள்ள சேனை யாவும் வீசுவேனென்பது பொய்யோ— பேசி.

## தேசிங்குராஜன் சொல்லுதல்.

௭. செய்யும் வகை நீ யறியாயோ—கடிக்குமே நான்
செய்யும் வகை நீ யறியாயோ,
தொய்யலர் மிகவே பட்டுன் மெய்யுடனே நீயு மிந்த
வையம்விட் டேமனைக் காணச் செய்குவேன் தெவுணத்தி லுன்னை—செய்.

## தாவுத்கான் விருத்தம்.

என்னடாநீயுமிங்கே யெந்தனுக்கெதிரிபோலென்
முன்னில்வந்திருந்துக்கொண்டு மொழிபுகன்றிடுகிறாயுன்
சென்னியைப்பூமிமீதில் சிதறியோடச்செய்துன்னை
சின்னபின்னங்கள்செய்வேன் சீ அப்பாலோடிப்போடா.

## வசனம்.

என்னடா தேசிங்கே! நீ எனக்கு எதிரியாகவந்து என்முன்னே நின்று கொண்டு உறுத்த வார்த்தைகளைப் பேசுகிறாய். ஆ ஆ ஆ! அப்படியா! நல்லதாகட்டும்; உன் தலையானது பூமியில் தேங்காய் உருளுகிறதுபோலே உருளச்செய்து, உன் சரீரத்தைச் சின்னபின்னமாகச் செய்வேன். சீ சீ, அப்பாலே ஓடிப்போடா தேசிங்கே.

## தேசிங்குராஜன் விருத்தம்.

ஓடியாபோகச்சொன்னா யுன்னையேதனியவிட்டுன்
கோட்டகத்துடனேசேனை குஞ்சரமுதலெல்லாம்
காடிவந்தயிருலே நறுக்கிடுதன் திசையைநோக்கி
ஓடியேபோகச்செய்வேன் உணர்வில்லாப்பேயாபோடா.

## வசனம்.

கேளடா தாவுத்கானே! நீ என்னை ஓடியா போகச்சொன்னாய், நல்லதாகட்டும். நான் உன்னையும், உன் ஆனைசேனைப் பரிவாரங்களையும் தென்திசையைநோக்கி ஓடிப்போகும்படியாய்ச் செய்வேன்; போடா போ, உணர்வில்லாத பேயா.

# தாவுத்கானும் தேசிங்குராஜனும் யுத்தஞ்செய்தல்.

தரு: இராகம், புன்னாகவராளி ஆடதாளம்.

### கண்ணிகள்.

௧. தா. என்னடா நீ யொரு மன்னவன் போலவந்,
தெங்கள் முன்னே உறம் பேசுறாய்—பலந்
தங்கள் போலே யென்னை பேசுறாய்—உன்
அங்கத் துடனே மா தங்கத்தையுங் கூட
சங்கரித் திடுகிறேன் பாரடா.

௨. தே. பாரடா வென்றெதிர் போராட வந்தா யுன்,
மலத்தையும் பலத்திறுடக் குலத்தையும்—உன்
கலத்தையும் அக்கமை பலத்தையும்—நான்
ஆலத்தைப் போல வந்தன் சேனையு முனையுமித்
தாலத்தில் மடிக்கிறேன் பாரடா.

௩. தா. மடிப்பே னென்றாய் ஒரு நொடிக்குள்ளே அனுப்பினேன்,
வருகுது கரித் திரள் கூட்டங்கள்—கூட
பெருகுது பரித்திரள் பட்டங்கள்—வந்துன்
சிரமதைத் தரைதனில் உருளவே
காத்திருக்கிறது பாரடா.

௪. தே. எதியச் சமத்துள்ள உன் கரியும் பரிக்குலமும்,
எந்தன் கை ஆயுதத்தா லிப்போ—தலை
பந்துபோல் உருளுது பாரிப்போ—சும்மா
விந்தைப் பேச்சுகள் நீயும் வீணாகப் பேசாதே
விரைவினில் நீ ஓடிப்போடா ஓடிப்போடா.

௫. தா. ஓடிப் போடா வென்று நீயா சொல்லுகிறவன்,
உனைக் கொல்ல பீரங்கி குண்டுகள்—சேனைத்
தனைக்கொல்ல செஞ்சாலி குண்டுகள்—இதோ
நினைக்குமுன்னே ஒரு க்ஷணத்தில் கோடாகோடி
உனக்கு முன் வருகுது பாரடா.

௬. தே. வருகுதென்றே வெகு பெருமை சொல்லாதே யெதிர்,
வந்திடும் பீரங்கி குண்டையும்—கூட
சந்தித்த செஞ்சாலி குண்டையும்—இப்போ
எந்தன் கைப் பட்டாவால் உந்திவிட்டே
வந்து உன் கண்ணிருக்கல் பாரடா.

௭. தா. பார்த்தா லென்னடா நீயும் கூத்தடிக்கிறா யென்,
பாலா உருவியதோ விடுத்தேன்—உனை
நாலாய்ப் பிளக்க முகங் கடுத்தேன்—தப்பில்
காலாயிரம் உனை எந்தன் வாளால் துணித்து ஒரு
காலா லெத்தி யெறிவேன் பாரடா.

௮. தே. எதிவா வென்னுடன் சமர் புரிவா யுத்தனை நான்,
என் சும்மா யின்னம்விட்டி யிருந்தால்—நீயா
எந்தனைத் திட்டிவா யுந்தன் வாயால்—உனை
சின்னபின்னங்களாயோர் க்ஷணத்தி லுந்தனுடைய
சென்னி உருளச் செய்தேன் பாரடா.

பொது விருத்தம்.

இப்படியாகவேதான் இருவர்சண்டையிலேராஜன்
மெய்ப்பரியானைசெலவி மீதிலேயடியமைக்க
கைப்பரிசையிருல்ராஜன் கடுஞ்சினத்தாலேவின
செப்பருந்தாவுத்கானும் செருக்களத்திலில்வீழ்ந்தானே.

வசனம்.

அகோதெப்படியென்றால், தாவுத்கானும் தேசிங்குராஜனும் இவ்விதமாக யுத்தஞ்செய்யும்போது, பாராஜாரிக் குதிரையானது தாவுத்கான் ஏறிவந்த யானைத்தலையின்மேல் தன் முன்னங்கால்கள் இரண்டையும் வைத்தது; அப்படி பாராஜாரி வைத்தவுடன், தேசிங்குராஜன் அதிக கோபங்கொண்டு தன் கையிலிருந்த பட்டாவினால் தாவுத்கானை சாயப ஒரே வீசாக வீசினான்; அப்படிவீசவும், அவன் அல்லாரே என்று சொல்லி இரணக்களத்தில் வீழ்ந்திறந்தான்.

---

# நீன்சிங்குராஜன்வந்து நபாபு உயிரோடிருக்கிறானென்று தேசிங்குராஜனுக்குச் சொல்லுதல்.

பொது விருத்தம்.

வந்ததாவுத்கான் தன்னின் மணிச்சிரமறுவவெட்டி
சுந்தரவாசியேறி சொற்சங்கராபரணியாற்றில்
வந்துகைகால்கள்சுத்தி செய்துகொண்டிருக்கும்போது
சொந்தமாற்றீன்சிங்கு தொழுதடிவீழ்ந்துசொல்வான்.

வசனம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குராஜன் தாவுத்கானைக் கொல்லவும், அவன் சேனைகளெல்லாம் தலைவிரிகோலமாய் ஓடிவிட்டது; அப்படி ஓடிப்போய்விடவும், தேசிங்குராஜன் இரணக்களத்தைவிட்டு சங்கராபரணியாற்றில் கைகால் கழுவிக்கொண்டிருக்கும்வேளையில் அவரது தாயாதியாகிய நீன்சிங்குராஜன்வந்து தேசிங்குராஜனை வணங்கிச் சொல்லுகிறவிதங்காண்க.

தரு: இராகம், கல்யாணி. ஆதிதாளம்.

பல்லவி.

வந்தீர் சமரை விட்டீ—நபாபுயிரோ
டிருக்கின்றானவன் தலை வெட்டி.

அநுபல்லவி.

வன் சங்கு மாழியும் வைத்த சங்கார ரங்கர்
வாசமா னிரும் வுப வாசம் புரி ராஜனே— வந்.

சரணங்கள்.

௧. தன்னைப் போல் மறவோடந் தவ்வுத் கானையும் போட்டு
முன்னே சமர்க்களப்பி மோசஞ்செய் தவனிருக்க— வந்.

௨. படையின் மத்தியிலொரு பருதிபோ லவனிட
நெடிமுரா சுடன் வெற்றி கொடி பறந்திட நீரும் வந்.

௩. அவனைச் சமரில் சிர மறுத்தனுப்பு ஜெயங்கொண்டால்
அவனி புகழு மிந்த ஆற்கா டரசைக்கரம்— வந்.



# நபாபு இன்னமும் உயிரோடிருக்கிறானென்று தேசிங்குராஜன் நீன்சிங்குராஜனைக்கேட்குதல்.

---

பொது விருத்தம்.

கேளையாயுயிரோடின்னவன் கொடிகொள்நபாபிருக்க
வாளைபோகவுமீனென்றால் மையமப்பழித்திடாதோ
வேளைநேர்நீன்சிங்கு மெய்தரித்திருக்கின்றானே
காளைபோல்வெட்டிநானும் கழிக்கிறேனழிக்கிறேனே.

வசனம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குராஜன் தாயாதியாகிய நீன்சிங்குராஜன்வந்து நபாபு இன்னம் உயிரோடிருக்கிறானென்று சொல்லவும், தேசிங்குராஜன்: நல்லதாகட்டும்; அந்த நபாபு இன்னமும் உயிரோடிருக்கிறானென்று நீன்சிங்குராஜனைக் கேட்கிறவிதங்காண்க.

தரு: இராகம், யதுகுலகாம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

இன்னமு மிருக்கிறான்—நபா பென்பவன்
இன்னமு மிருக்கிறான்.

அநுபல்லவி.

முன்னமே யவன் செய்த வன்றுடனுலாத்தானவன்
சென்னியறுத் தணிந்து வெற்றி கன்னவே கொணர்வே னவன்—இன்ன.

சரணங்கள்.

௧. நாகத் தருகில் நலமா—னனை வெல்லவும்
சாகத் துடனே சலமா,
வாகைப் பெறுவோமென்று மனதில் நினைத்துக்கொண்டு
ஆகப் புளகமுடனவ் விடையிற் சேனைகள் சூழ— இன்ன.

௨. பாரிலென் பேர் புகழவே—நபாபை யிரு
கூறுசெய்வே னீ மகிழவே,
சீறினவப் படை மீதில் போர்செயி லவனிருகைக்
கூர்வாளா லவன்சிரசை பாரினில் விழச் செய்குவேன்— இன்ன.

௩. மாதங்கக் கூட்டம் வெருவாய்—வந்து சின்னம் பட்டோர்
போது மடங்கலை வெல்லுமோ பிருவாய்,
ஆதவன் முன் பனிபோ லவனையும் படையையும்
ஓதியநீ பார்க்க வெட்டி வுயிர்வதை செய்குவே னவன்— இன்ன.

## தேசிங்குராஜன் நபாபையெதிர்த்து யுத்தஞ்செய்யவருதல்.

---

### பொது விருத்தம்.

இன்னமும்நபாபுசாயபு இருப்பதுமெய்யேயானால்
உன்மனங்களிக்கயிப்போ ஒருநொடிதன்னில்சென்று
அன்னவன்சிரந்துணித்து ஆற்காட்டுக்கதிபனாகி
கன்னலே வருவேனென்று கடிவமாய்ப்புறப்பட்டானே.

### வசனம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குராஜன் நீன்சிங்குராஜனை நோக்கி: நபாபு இன்னம் உயிரோடிருப்பது மெய்யேயானால், உன் மனமானது களிக்கும்படியாக இப்போதே ஒரு நொடிக்குள்ளாகப்போய், அந்த நபாபுடைய சிரசை வெட்டி, நானே அந்த ஆற்காட்டிற்கு அரசனாகி வீசினம் வருகிறேனென்று சொல்லி, கோபத்தோடு தேசிங்குராஜன் நபாபுபேரில் யுத்தஞ்செய்ய வருகிற விதங்காண்க.

தரு: இராகம், சாதாரமக்கிரியை, அடதாளம்.

### பல்லவி.

வருகிறார் பாரும்—தேசிங்குராஜன்
வருகிறார் பாரும்.

### அநுபல்லவி.

வருகிறாரே யிந்த அரசையை யாள் வனவல்லா
அனையைச் சிமறுக்கச் சரியைக் கொல்லு மரிபோல— வருகி.

### சரணங்கள்.

௧. பாராசாரிபி லேசி வீரா வேசங் கூடி
பாரிலுள்ளோர் மயங்க நேராய்ப் பட்டவைத் தாங்க— வருகி.

௨. தாய் மந்திரிதன்னை பேதமாய்ச் சொன்னதினால்
சாதா வுனைப்பெற்ற தாதையுடன் கொல்வேனென— வருகி.

௩. கண்டதுதலைவா வோட கண்டோர் முகம் வாட
மண்டல மதிர்ந்திட சண்டை செய்ய செம்பீரன்— வருகி

---

## தேசிங்ராஜன் யுத்தஞ்செய்ய வருவதை நபாபு அறிந்து, தரகனை அனுப்பிச் சமாதானஞ் சொல்லுதல்.

---

### பொது விருத்தம்.

இப்படியாகவேதா னிறையவன்வருகுமோதை
செப்பமாய்பாஷாகண்டேன்செய்குவேனென்றயேங்கி
தப்பிதம்வருமென்றெண்ணி தரகனைவரவழைத்து
ஒப்புடனவனைப்பார்த்து உகந்தவனேதுசொல்வான்.



### வசனம்.

அகோதெப்படியென்றால், இவ்விதமாக தேசிங்குராஜன் நபாபை யெதிர்த்து யுத்தத்திற்கு வருவதை பாஷா நபாபுகண்டு என்னசெய்யப் போரோமென்று ஏக்கமுற்று, தரகனையழைத்து நபாபு சொல்லுகிற விதங்காண்க.

### நபாபு விருத்தம்

மந்திரிபங்காருநாய்க்கா மற்றுமென்படையேகேளீர்
இந்தநர்மன்னன்பின்று மிவ்விடம்வருவதென்ன
சந்தேகமறவேநீயி க்ஷணம்செல்றுராசிபேசி
வந்தவன்தனைத்திருப்பி வருகுவாய்கொடியிற்றானே.

### வசனம்.

கேளும் மந்திரி பங்காருநாய்க்கா, இன்னும் மற்றுமுள்ள என் படைகளே! அந்தத் தேசிங்குராஜன் மறுபடி மீண்டும் இவ்விடம் வரவேண்டிய தென்ன? தோன்றமல்லோஜியே நமக்குள்ளிருக்கும் சந்தேகமறும்படி யாக நீ இந்தநேரத்திலேயே போய் இராஜியாய்ப் போகும்படி பேசி, நம்மதுமேல் யுத்தத்திற்கு வருகிறவனைத் தடுத்து, வராமல் அப்படியே போகும்படிசெய்துவிட்டு வரவேண்டும் தோன்றமல்லோஜி.

### தோன்றமல்லோஜி விருத்தம்,

சொன்னதுமெய்தானந்த தோன்றமல்பால்தரவுக்கேகி
அன்னலேநான்தான்பட்ட அவஸ்தையையினைந்துக்கொண்டால்
என்மனம்நடுங்குதந்த யிறையவன்முன்போறுல்லீனேன்
மன்னரேஉமதுசித்தம் மறுக்கிலேன்வசனந்தானே.

### வசனம்.

கேளுமையா பாஷாவே! நான் அந்தத் தேசிங்குராஜனிடத்தில் முன் ஒருதரம் தரவுக்குப்போய்ப் பட்டவருத்தத்தை நினைத்துக்கொண்டால் என் மனமானது நடுங்குகிறது. மறுபடியும் இப்போதும் என்னைப் போகச் சொல்லுகிறீர், உமது வார்த்தையை நான் தடுக்கவில்லை; நான் போனாலோ மறுபடி மீண்டும் இவ்விடத்தில் வருவது அரிது. உமது சித்தம் அடியேன் அறிகிலேன் பாஷாவே.

### நபாபு விருத்தம்.

அப்படிஉரையாதேசென் றுநும்ராசியதுபண்ணராக்கம்
எப்பவுந்தொடுக்கவேண்டா மிதுமுதல்மானியமாக
ஒப்புதல்சொல்லிசெஞ்சிக் குறுதியாய்த்திருப்பிவந்தால்
செப்பமாயாழியீவேன் தேசத்தோர்மகிழத்தானே.

### வசனம்.

கேளும் தோன்றமல்லோஜி! நீ அப்படிச் சொல்லாதே; அந்தத் தேசிங்கு ராஜனிடத்தில் போய், செஞ்சிதேசத்திற்குத் தரவேண்டிய பகுதிபணத்தை எப்போதும் தரவேண்டாமென்று அன்பான வார்த்தைகளைச்சொல்லி, அவன் அப்படியே திரும்பிப்போகும்படி செய்துவிட்டு வந்தால், உலகத்தார் மகிழும்படியாக எனது அரசை உனக்கே தருகிறேன் தோன்றமல்லோஜி.

## தோன்றமல்லோஜி தன் குலதெய்வமாகிய அல்லாவை நினைத்துப் புலம்புதல்.

தரு : இராகம், புன்னாகவராளி. அடதாளம்.

கண்ணிகள்.

௧. என்ன செய்குவேன் ஆற்காட்டுத் இறைவன்—அல்லாவே, எனக்
கிதஞ்சொல்லி வைத்துக்கொண்ட இறைவன் முன்னேசென்றால்—அல்லாவே

௨. செஞ்சிரொக்கம் வேண்டாம் சமர் தொடுக்கி—அல்லாவே, ராஜன்
மிஞ்சிவாராமற் செய்தால் வெகுமிஞ்சு உண்டுனக்கு—அல்லாவே.

௩. எதுமான் உரைதப்பாமல் எதிர்சென்று நடக்கிறேன்—அல்லாவே, ராஜன்
வசமாக என் கைக்குள் வைக்குவைத்து ரக்ஷிப்பீர்—அல்லாவே.

௪. என்னைப் படிராஜன் இசையப் படிக்கிறுவ் நான்—அல்லாவே, இந்த
சென்ம முள்ளவரைக்குமுன் திருவடி மறவேன் நான்—அல்லாவே.

---

## தோன்றமல்லோஜி தேசிங்குராஜனிடத்தில் போய் சமாதானஞ்சொல்லுதல்.

பொது விருத்தம்.

அழுதுடன்புலம்பிக்கொண்டு அமுரியால்நமிந்தங்கே
பழுதறக்குழைந்தான்றுப் பட்டைமத்தைச்சாத்தி
தொழுதுகைகூப்பிக்கொண்டு தொண்டைகப்பணிந்தான்பின்
மொழிதனைநினைந்துக்கொண்டு முன்வர்ககிசொல்லுவானே.

வசனம்.

அகோதெப்படியென்றால், இவ்விதமாகத் தோன்றமல்லோஜியானவன் தன்னுகுலதெய்வமாகிய அல்லாவை நினைத்துப் புலம்பி, பட்டைமத்தையும் குழைத்துப் பரக்கச் சாத்தி, மாலையேயும் பூண்டு, தனது இருகரத்தையும் சிரமேற்கூப்பி, நபாபு சொல்லச்சொன்ன வார்த்தையை நினைத்துக் கொண்டு, தேசிங்குராஜன்முன் தொண்டைகப்பணிந்து இவ்வேளையின் அன்போடும் இணக்கமாகவும் வணக்கமாகவும் சொல்லுகிற விதங்காண்க.

தோன்றமல்லோஜி விருத்தம்.

மடங்கலேறரியாசெஞ்சி மானசுற்பகுதிரொக்கம்
தடையறக்கொடுக்கவேண்டாம் சண்டைபிறகுமில்லைநிற்றி
திடமுடனமராச்சியம் செய்திடவாசீர்பதி
அடவுடன்வரச்சொன்னுரென் ஆற்காட்நபாபுதானே.

வசனம்.

சரணஞ்சரணமையா மஹாராஜனே! எங்கள் பாதுஷா நபாபு வைதுல்லாவானவர் என்னைத் தங்களிடம் அனுப்பி, தங்களுடைய செஞ்சி தேசத்திற்குச் சேரவேண்டிய பகுதிப்பணத்தை இனிமேல் நமக்குச் செலுத்த வேண்டியதில்லையென்று திடநம்பிக்கையாய்ச் சொல்லி, தங்களைச் சமாதானமாய்ப் போகும்படி அனுப்பிவிட்டு என்னை வரச்சொன்னார் மஹாராஜனே.



தேசிங்குராஜன் விருத்தம்.

ஆரடாதோன்றமல்லா அறிவுகெட்டவனேயிந்த
சீருடன்முன்புதானே செய்திட்டால்விளையுமாமோ
பாரடாஆற்காடாளும் பாதுஷாவைவதைத்துஅந்த
ஊரைதானேஆள்வேன் ஓடிப்போஇருந்தாற்கொல்வேன்.

வசனம்.

ஆரடா தோன்றமல்லா! நீ பார்; நான் அந்த ஆற்காடு நபாபை வதைத்து, அந்த ஊரை நான்தானே ஆளுகிறேன். நீ இருந்தால் உன்னையும் கொல்லுவேன்; ஓடிப்போடா அறிவுகெட்ட தோன்றமல்லா.

---

## தோன்றமல்லோஜி தேசிங்குராஜனிடம் போய் திரும்பிவந்து நபாபுக்குச் செய்தி சொல்லுதல்.

தோன்றமல்லோஜி விருத்தம்.

ஜானேஆற்காடாளும் அரையநபாபுசாயபே
வீரன்பாலனுமிசிர்தான் வினவியராஜிசொல்ல
சீறியேகோபங்கொண்டுச் சேதிமுன்னில்லையென்றும
வாரியிலெழும்ஞாலம்போல் வருகின்றான்வருகின்றானே.

வசனம்.

கெருணையுள்ள ஆற்காடாளுகின்ற பாதுஷாவே; தாங்கள் சொன்னவார்த்தையை அந்தத் தேசிங்குராஜனிடம்போய் சொன்னேன்; நான் சொல்லவும் அவன் என் பேரில் கோபங்கொண்டு இந்த வார்த்தை முன்னேதான் இல்லையென்று சர்ப்பத்தைப்போல் சீறிவருகிறானையா பாதுஷாவே.

---

## தேசிங்குராஜன் நபாபிடத்தில் யுத்தத்திற்கு வருதல்.

பொது விருத்தம்.

மல்லநிவ்வாறுசொல்ல மனந்தளர்ந்தருகில்நிற்கும்
வல்லமந்திரிஜெமைதார் மார்களைஅழைத்துஇந்த
தொல்லைக்கென்செய்வோமென்று சொல்லியேதனைரக்ஷிக்கும்
அல்லாவைநேர்ந்திருக்க அரசன்போர்க்குவந்தான்.

வசனம்.

அகோதெப்படியென்றால்; தேசிங்குராஜனிடம் போய்வந்த தோன்றமல்லோஜி இவ்விதமாகச் சொல்லவும், நபாபு மனமானது தளர்ந்து தன் அருகில் நின்றமந்திரிமார்களையும் ஜெமேதார்மார்களையும் அழைத்து, இந்த அநியாயத்திற்கு என்னசெய்வோமென்று ஏக்கரோம் பயமுமாய்த் தன் சமயதெய்வமாகிய அல்லாவை நினைத்துத் தியானஞ்செய்துகொண்டிருக்கும்போது, தேசிங்குராஜன் யுத்தத்திற்கு வருகிற விதங்காண்க.

தரு. இராகம், காப்பி. அடதாளம்.

பல்லவி.

வருகிறான் செஞ்சி மன்னன் கோபத்துடனே
வருகிறான் செஞ்சி மன்னன்.

அநுபல்லவி.

வருகிறான் வெகு குதிரைமேல் வரு
அரியைப்போல் வெகு துரிதமாகவே— வரு.

சரணங்கள்.

௧. பாரசாரியி லேறி கையினில் சூரபட்டாணை நேராய்த்தாங்கி
விரத்தன மனவுரு மெச்சிக்கவே காருட தந்த்ர காரமாகவே— வரு.

௨. பலமுள்ள வச்சிரவல்லிடம்வந்த காலன்மேல்வரு குருபாணிபோல
ஏலவரப்பட வேலமிட்டுமே சாலவே டாலா [illegible]லமாகவே— வரு.

௩. அண்ட நண்ட பகி நண்ட மதித்திட வெண்டிசாரும் முடிவெரிபட
அண்ட மிடமிலா விண்டுவோடிட கண்டபேர் பிரம்மிக்கூதிபட— வரு.

தேசிங்குராஜனைப்பார்த்து நபாபு சொல்லுதல்.

நபாபு விருத்தம்.

தாரணிதனிலுனைப்போல் சமர்த்தனாரிலேனிந்தப்
போரதனிலுத்திறென்றும் புகழ்பெறசெஞ்சிதன்னை
சீருடனுன்டுகொண்டு செல்வமாயிருந்தைந்த
சூரியருள்ளமட்டும் சொன்னசெ[illegible]ய்விலேனே.

வசனம்.

கேளும் தேசிங்குமஹாராஜனே! உம்மைப்போல் தீரதீர சூரபராக்கிரம முள்ளவர்களை நான் இந்த உலகத்தில் கண்டதில்லை, நீர் கோபத்தை விட்டு விடும், சந்திரசூரியருள்ளமட்டும் செஞ்சிதேசத்தை நீரே ஆண்டுகொண்டு பகுதிப்பணம் கட்டவேண்டியதில்லை; யுத்தத்தை நிறுத்திவிட்டு உமது நகருக்கு சுகமாய்ப் போய்வாரும் தேசிங்குமஹாராஜனே.

தேசிங்குராஜன் விருத்தம்.

[illegible] போம்நீதி ஞாயமேன்சொல்லவந்தீர்
மல்லன்வந்திட்டபோதே வழக்கறுத்தேகவிட்டேன்
எல்லையில்லாதசேனை இறந்துபோய்விட்டேன்செல்லச்
சொல்லதுவிடுத்தேசண்டை தொடுத்திடவருகுவீரோ.

வசனம்.

கேளும் பாக்ஷாவே! தோன்றமல்லன் வந்தபோதே வழக்கைத் தீர்த்து அனுப்பி விட்டேன்; இப்போது என்னுடைய சேனையில் அளவற்ற சேனைகள் இறந்துபோய்விட்டது; அப்படிப் போயிருக்க, செல்லச்சொல் சொல்ல வந்தீர்; போம் போம், நான் ஜெயித்தால் ஆற்காடாளுவேன்; நீ ஜெயித்தால் செஞ்சியையாளும், செல்லவார்த்தை வேண்டாம்; வாரும் ஒருகைபார்ப்போம் பாக்ஷாவே.



தேசிங்குராஜனும் நபாபும் யுத்தஞ்செய்தல்.

தரு: இராகம், அடாணு. ஆதிதாளம்.

பல்லவி.

ஜெய தேசிங்குராஜனும் நிகழ் லைசுதல்லா நபாபுஞ்
செய்தார்கள் சண்டை பாரும்; அகோர உக்கிர கனை.

அநுபல்லவி.

வய்ங்கொள் பாராசாரி வாசியேறி தேசிங்கு
கயல்கட் காரமீதில் கனலைசுதல்லா வெகுரும்
கறுத்த புகழைப்பெறும் ராகவன் மேலே
எதிர்த்து வரு மகா ராவணன் போலே— ஜெய.

சரணங்கள்.

௧. ஆனைப் படையை மாய்த்து அசுவப் படையைச் சாய்த்து
அடரும் சேனாதிபர்களவர்கள் தேகியைக் கொய்து
ஏறுந் சேனைப் படை [illegible] யெக்குறைவே கொன்று
சீறும் காளையென்று தீவிரிபோலே [illegible]
தானைப் படையிரிய சக்கரி[illegible]
மாறுபரன் தேசிங்கு காளிபோலே
மண்டலத் தோர் அதிக்க விண்டலத் தார் மதிக்க— ஜெய.

௨. மதகயம் முன்னடத்தி எதிரில்[illegible]யடர்ந்தே
[illegible]ராகா வக்கிரத்துடனே வருஞ்சேனையைத் தொடர்ந்தே
சுதிக்க எதிரில்நின்று கடிந்து மனமுடைந்து
கையிலெடு பட்டாவைக் கழற்றி கோபங்கொள்ள
யானை யொடுபுரிந்து மதிக்க யெவருமல்ல
மதிமுகம் வாடியே அதிசயங் கூடியே
வார்த்தை பலவுஞ்சொல்ல சிரித்து ராஜனும் வெல்ல— ஜெய.

௩. தனது வாளியை நோக்கி தனதிரு காலை தூக்கி
தன்திரு முடியின்மேல் தான்தூக்கி வையென்றேதி
அதுமானித்தே வாசி அதின்காலை வைகக் கூசி
அனல் விழியில் பொழிக்க [illegible]கயிற் பாலாக்குமற்றி
மனம் நடுங்கி விளங்கும் மத்தியில் மா வெட்டியானும்
மாவின் இரண்டு காலை தாவி யரிந்திடவே
சேவு முனங்கலங்கி குதித்தே யரிந்திடவே— ஜெய.

தேசிங்குராஜன் நபாபுடைய சேனைகளை வெட்டுதல்

பொது விருத்தம்.

பரிபிருகாதுமற்று படி மிசைவிழக்குதித்து
உருவிசெஞ்சபார்த்துவாடி யுளவொருவிடமாய்த்தேறி
இருகையிற்பட்டாவாங்கி எதிர்த்திட்டசேனைதன்னை
அரிகளியென்றேவெட்டி அடர்ந்திட்டான்தொடர்ந்திட்டானே.

வ ச ன ம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குராஜனும் நபாபும் சைகலந்து யுத்தஞ் செய்கிறகாலத்தில், தேசிங்குராஜன் தன் குதிரைக்கு ஜாடை சொல்ல, அக்குதிரை தன் இரண்டுகால்களையும் யானைத்தலையின்மேல் வைக்க, யானைப்பாகன் கோபிக்க, அதைக்கண்ட ராஜன் வாளினால் பாகனைவெட்ட, யானைப்பாகன் பக்கத்திலிருந்த வீரன் குதிரையின் இரண்டுகால்களையும் வெட்ட, தேசிங்குராஜன் குதித்து குதிரையைப்பார்த்துப் புலம்பி, தன் கையிலிருந்த பட்டாவினால் அக்குதிரையை வெட்டி, தன் இரண்டு கையிலேயும் பட்டாவையெடுத்து நபாபின் சேனையை வெட்டுகிற விதங்காண்க.

தரு: இராகம், சங்கராபரணம். அடதாளம்.

பல்லவி.

தலை தலையாக வெட்டி அறுத்தான்—மஹா செஞ்சித்
தலைவன் கொக்கரித்துக் கறுத்தான்.

அநுபல்லவி.

குலை குலைந்து படைகள் குருதி வெள்ளத்தின் மேலே
மலை மலையாய் மிதக்க மன்னன் வாளினாலே— தலை.

சரணங்கள்.

௧. படபடென்று மீசை அடித்தான்—முன்னே
படையைப் பார்த்துப் பல்லைக் கடித்தான்
கடகடென்று அம்பிகையை யோர்ந்து கனம்
முடிவிச்சாடப் படை முன்னிலாமலே வேட— தலை.

௨. அக்கிரமித்து அடைதட்டினான்—சேனை
அத்தனையும் பட வெட்டினான்
சாக்கத் துணையில்லாமற் கலங்கப் படையறுந்து
கண்டதுண்டம் குவித்தோட முண்டங்க ளெழுந்தோட— தலை.

௩. கரியொரு கோடிகள் சாக—வெகு
காலாளேவேகஞ் செத்துப்போக
பரி யிருபது கோடி படியில் மடிந்து விழ
பாதுஷாவின் சேனைகள் பதறி யலறித்தாழ— தலை.

தேசிங்குராஜன் வீரசொர்க்கஞ் சேருதல்.

பொது விருத்தம்.

மற்பொருதினித்தழிடி லாடியக்கனைத்தரைகீழ்
அற்பவில்வாழ்க்கைபொய்யென் றறிந்துதான்ரங்கநாதர்
நற்பதந்தொழுதவனை நாகத்திலெதிர்வாரும்
அற்புதமாரிருக்க வரசனும்பதிசேர்ந்தான்.

வ ச ன ம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குராஜனானவன் பாராசாரி இறந்த பின்பு, வாளைக் கையிலெடுத்து எதிர்த்த சேனைகளைச் சங்கரிக்க, ஓடிப்போன வர்களை விடுத்து யுத்தகளத்தை நீங்கி, உலகவாழ்க்கைப் பொய்யென்று ஸ்ரீரங்கநாதனைத் தொழுது, தன் கைவாளை ஆகாயத்திலெறிந்து தன் மார்பிற் பிடித்தான்; பிடித்த வாளானது மார்பைப் பிளக்க, தேசிங்குராஜன் வீரசொர்க்கமடைந்தான். இப்படியாகத் தேசிங்குராஜன் வீரசொர்க்கஞ் சேரவும், ஓடிப்போய் ஒளிந்திருந்த நபாபுஸைதுல்லாவானவன் வந்து தேசிங்குராஜனைப் பார்த்துப் புலம்புகிறவிதங்காண்க.



தேசிங்குராஜன் வீரசொர்க்கஞ்சேரவும் நபாபுவந்து
தேசிங்குராஜனைப் பார்த்துப் புலம்புதல்.

பொது விருத்தம்.

அலறியேயோடிவந்து அஜரத்துநபாபுதானும்
நிலமிசைகிடந்தராஜன் நிரைமணிஉடலைவாரி
தலையைதன்றுடைமேல்வைத்துத் தீடவியேமுகந்திருத்தி
சலமதைவிடுத்தார்க்காடு ஸைதுல்லாபுலம்புவானே.

வ ச ன ம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குராஜன் வீரசொர்க்கஞ்சேரவும், ஓடிப்போய் ஒளிந்திருந்த நபாபுஸைதுல்லாவானவன் அலறி ஓடிவந்து, பூமியில் விழுந்துகிடந்த தேசிங்குராஜனை எடுத்துத் தன் தொடைமேல் அவர் தலையை வைத்து முகத்தைத் துடைத்து நபாபுஸைதுல்லாவானவன் புலம்புகிறவிதங்காண்க.

தரு: இராகம், காம்போதி. அடதாளம்.

பல்லவி.

ஐயா தேசிங்குவே ஆறும்படைகளைக் கொன்று
மெய்யிளைத்தே யுயிரை விட்டிறந்தீரே.

அநுபல்லவி.

செய்யாக் காரியஞ்செய் தன்னுயிர்க்கே யெமனானேன்
மெய்யா யுன் பேர்சொன்னோர் வீரசொர்க்கஞ் சேர்வாரே— ஐயா.

சரணங்கள்.

௧. செஞ்சிப் பதிக் கரசே தீரவீர சூரத்தக்
கஞ்சி தஞ்சமென்றோரை ஆதரிக்குந் தீரனே— ஐயா.

௨. படைக்கொருவனே தான் தொடைக்கொருவனே யுந்தன்
அடைக்கலம் யாரும் வாரேன் கடைக்கண் பார்த்தருள் யெந்தன்— ஐயா.

௩. தீரா பெரியரும் மெச்சும் அரையே தேசிங்குராஜா
வீரசெறி மார்பனே வெற்றிகொளும் கெம்பீர— ஐயா.

இறந்த தேசிங்குராஜனை மல்லன் இரத்தினப்
பல்லக்கின்மேல் வைத்துக்கொண்டு போகவும்,
இராயணியார் பிரேதத்தைப் பார்த்துப் புலம்புதல்.

பொது விருத்தம்.

மல்லனேசெஞ்சிமன்னன் மாண்டனன்அவனைரத்னப்
பல்லக்கில்வைத்தேராயணி பக்கலில்கொடுபோவென்ன
நல்லதப்படியேயென்று ராஜனையெடுத்துப்போயி
சொல்லுமுன்காயமென்றுன் தோகையும்புலம்புவாளே.

வ ச ன ம்.

அகோதெப்படியென்றால், தேசிங்குராஜன் இறந்துபோனவுடன், நபாபு தோன்றமல்லோஜியை நோக்கி: செஞ்சிதேசத்துராஜன் இறந்துபோய்விட்டார்; ஆகலால் நீ அவரை நம்முடைய இரத்தினப்பல்லக்கில் வைத்துக்கொண்டு

போய் அவருடைய இராயணியாரிடத்தில் சேர்ந்துவிட்டு வாவென்னவும், மல்லன் அப்படியே ஆகட்டுமென்று பிரேதத்தை இரத்தினப்பல்லக்கில் வைத்துக்கொண்டுபோய் நிகழ்ந்த சமாச்சாரத்தைச் சொல்லுமுன், இராயணியார் பிரேதத்தைப் பார்த்துப் புலம்புகிற விருத்தமான.

தரு: இராகம், ஆஹிரி. ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. என்ன செய்வேனுன் னெப்படி பிரி
 ந்திருவேன்—பிராணநாதா, கம்பம்
மின்னும மெழுகாமல் போய்
 பெய்தாப் போல்—என் பிராணநாதா.

௨. சொன்ன சொற்கேளாமல் நீட்டுத்தாய்
 யமர்களத்தில்—பிராணநாதா, உனதன்
குற்றமும் காம்பீரமும்
 தொலைந்ததே—என் பிராணநாதா.

௩. சின்னஞ் சிறுவயதில் என்னை மணம் புரிந்து
 சிறையிலிருக்க வைத்தாய்—பிராணநாதா, புத்தன்
வன்னமுகம் காட்டாமல் என்
 மலர்க்கையைக் காட்டுறாய்—என் பிராணநாதா.

௪. உன் திருமுகந்தன்னை எந்
 கண்ணிரண்டும் பார்க்க—பிராணநாதா, பசுந்தேன்
இன்சொல் தனைப்பேசி என்னைக்
 கைவிட்டதேனோ—என் பிராணநாதா.

௫. என்போலவே பெண்கள்
 இந்தவயதில் அன்பம்—பிராணநாதா, பட்டபேர்கள்
முன்பெவர் எனக்கு நீரும் உரை
 வாய்திறந்து சொல்வாய்—என் பிராணநாதா.

௬. கன்னியும் கல்ல நாயகரை
 கிடைத்தாய்—பிராணநாதா, புகழ்பெற்ற
நன்தலை யழுத்தின்படி தவறா
 துலகம் சொலும்—என் பிராணநாதா.

௭. உன்னைப் பிரிந்தவளாகுமி உயிர்
 வாழ்வேனோ—பிராணநாதா, நானும்
உன்னுடன் வருவேன் என்னை
 ரக்ஷிக்க வேண்டும்—என் பிராணநாதா.

---

## இராயணியார் உடன்கட்டையேறுமுன், ஸ்ரீரங்கநாதனைத் துதிசெய்தல்.

---

தரு: இராகம், முகாரி. ஆதிதாளம்.

பல்லவி.

ராமா ராமா ராமா—உனை
நம்பினேன் எனைக் காத்திடவேணும்.



அநுபல்லவி.

பூமாது தொழும் பாதா புனிதச் சிருங்க நீதா
பண்டரீக விநோதா தொண்டர்க் கிருபாகர நாதா,
போர்முகமடியர் துயர் மாற்றி பூர்த்திக் கவாயி
லேற்றி உனதடியிற் சேர்த்துக்கொள்ள உன்கடன்— ராமா.

சரணங்கள்.

௧. களத்தில் மன்னரிறந்து போக—இங்கே கண்ணீர்விட்டழுது நான் சாக
உளத்தில் நினைக்கலாமோ உமக்கு மிதுதருமோ
இசைந்த என்மேல் வர்மமோ இதனைச் சொல்லும் மாரி?
எந்தா ஹரி தோமிக்கா வினாவினில்
வந்தே உன் அடி தந்து ரக்ஷித்திடுவாய்— ராமா.

௨. சின்னஞ் சிறுவயதிலே—இப்படியென்னை, ஜென்மித்தாயோ நீ முன்னாலே
அன்னை செய்த பாவந்தானோ, அடியாள் விதந்தானோ
கன்னிவயதிலிந்த காக்ஷிகாணவும் சொந்த,
காரணமேது மதவரான நிறமுடை
நாரணனே பரிபூரணனே முராரி— ராமா.

௩. நந்தநந்த முகுந்தனே—ஸ்ரீஹரி, கோவிந்தா திருவைகுந்தனே
சந்தாமரை யுதித்த திருவை மார்பில் தரித்த
எந்தா கெருடனேறி வந்தே மனது தேறி,
எனக்கும் என்பதியவர் தனக்கும் உனது பதம்
மிசைக்கும் முன்னே யாளப்பா யிவளாகிய வையும் காக்கு— ராமா.

---

## இராயணியார் உடன்கட்டையேறவும், தேவர்களும் உலகத்தார்களும் சந்தனமழை பெய்தல்.

---

பொது விருத்தம்.

மன்மதகலங்கிராயணி மாதவளைப்பார்த்தரசன்
தனமகிழ்தேவதாரி தருபனிநீர்கலவைச்சார்ந்து
கனமிகுகங்கைநீரில் கலந்தபிஷேகமாட்டி
அனல்தனைமூட்டியெங்கள் அரசனோடு நலமவீழ்ந்தாள்.

வசனம்.

அதெப்படியென்றால், இராயணியார் அரசனைப்பார்த்து அழுது, மங்கல்ய ஸ்திரிகளை நோக்கி: சந்தனக்கட்டை, அகிற்கட்டை, தேவதாரக் கட்டை முதலானதுகளை அக்கினிக்குண்டத்தில் அடுக்கி, பனிநீர் சந்தனக் குழம்பு முதலானதுகளை கங்கைஜலத்தில் கலந்து அரசனும் தானுமாக அபிஷேகஞ் செய்து, சர்வாபரணவலங்காரஞ் செய்துகொண்டு, சர்வவாத்தியங்களும் முழங்க, அக்கினியை மூட்டி, அரசனையெடுத்து காஷ்டத்தில் வைத்து, தானும் உடன்கட்டையேறினாள்; ஆகாயத்தில் தேவதுந்துபிகள் முழங்கின; தேவர்களும் உலகத்தார்களும் சந்தனமழையைப் பெய்தார்கள்; அரசனும் இராயணியாரும் தேவபதவிசேர்ந்தார்கள்.

தரு: இராகம், கல்யாணி. அடதாளம்.

பல்லவி.

சந்தன மழையைப் பெய்தனர்—தேவருலகோர்
சந்தன மழையைப் பெய்தனர்.

அநுபல்லவி.

வந்தன ரங்கநாதர் விசல கெருடன்மேலேறி
வானவர்களும் புகழ்ந்து மகிழ்ந் தாகிலையக் கூறி— சந்தன.

சரணங்கள்.

க. [illegible] ராஜ்யம் தங்கள் மூழ்க
[illegible] வஸ்திரங்கள் அன்னமளித்து யாவர்க்கும்— சந்தன.
உ. செஞ்சிப் பதியை யாளும் தேசிங்கு ராணியாரும்
[illegible] ராணி [illegible]— சந்தன.
௩. பூமியரசர் வாழ்க பூமார் குலமோங்க
க்ஷேம வணிகர் மல்க [illegible] புத்திரர் மேவ— சந்தன

## மங்களம்.

தரு: இராகம், சௌராஷ்டிரம். அடதாளம்.

பல்லவி.

மங்களம் மங்களம்—ஜெய ஜெய
மங்களம் மங்களம்.

அநுபல்லவி.

மங்களம் செஞ்சியில் வாழ் ஐங்கரனுக்கும்
மங்களம் செங்கதிர்வேல் முருகேசனுக்கும்— மங்களம்.

சரணங்கள்.

க. மங்களம் திங்களணி மாதேவனுக்கும்
மங்களம் சிவகாமி வள்ளி மாதுக்கும்— மங்களம்.
உ. மங்களம் ரங்கநாதர் மகிழும் லட்சுமியார்க்கும்
மங்களம் கலைமகள் மருவும் பிரமனுக்கும்— மங்களம்.
௩. மங்களம் மறையோர்க்கும் மணிமுடி அரசருக்கும்
மங்களம் வணிகர்க்கும் மருவிய வேளாளருக்கும்— மங்களம்.
௪. மங்களம் தேசிங்குராஜன் வணங்கொள் விலாசத்திற்கும்
மங்களம் வாணிதிரு மலர் மெல்லடி தனக்கும்— மங்களம்

வாழி விருத்தம்.

வாழிதேசிங்குராஜன் வாழிபட்டத்துராணி
வாழிநற்செஞ்சிதேசம் வாழியன்னகருமரக்கள்
வாழிவிக்கதையைக்கேட்டோர் வளமுடனெழுதிவைத்தோர்
வாழிபூதலமும்வாழி வானவர்வாழிவாழி.

தேசிங்குராஜன்விலாசம் முற்றிற்று.

3504